# தொடாத வாலிபம்



11171
UR

உவமைக்கவிஞர்
சுரதா

மணிவாசகர் பதிப்பகம்

# தொடாத வாலிபம்

உவமைக்கவிஞர் சுரதா

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : மார்ச், 2010
திருவள்ளுவர் ஆண்டு : 2041

**விலை : ரூ. 60.00**

மொத்தப் பக்கங்கள் : 112

அளவு (டெம்மி) 1 x 8

மணிவாசகர் வெளியீட்டு எண் : 1685

894.811171
SVR

முகப்பு அட்டை மற்றும்
பக்க வடிவமைப்பு:
எம்.ஏ. பாலாஜி
அம்மா கணினியகம், சென்னை–17.



நினைவில் வாழும் நிறுவனர்
ச. மெய்யப்பனார்

அண்ணாமலைப்
பல்கலைக் கழக
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
பல்கலைக் கழகங்கள்
பலவற்றில் அறக் கட்டளைகள்
நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின்
நிறுவன ஆசிரியர்.
குன்றக்குடி அடிகளார்
'தமிழவேள்' என்றும்,
தருமபுரம் ஆதீனத் தலைவர்
'செந்தமிழ்க் காவலர்' என்றும் விருதுகள்
வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.
'பதிப்புச் செம்மல்' என
அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

582084

நூல்கள் கிடைக்குமிடம்:
மணிவாசகர் நூலகம்
12–B, மேலச் சன்னதி,
சிதம்பரம் – 608001.
தொலைபேசி: 230069

31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை – 600108.
தொலைபேசி: 25361039

6, சிவஞானம் தெரு,
தி.நகர், சென்னை – 600017.
தொலைபேசி: 24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை – 625001.
தொலைபேசி: 2622853

15, ராஜ வீதி,
கோயமுத்தூர் – 641001.
தொலைபேசி: 2397155

78, செரி சாலை,
சேலம் – 636001.
தொலைபேசி: 3207722

28, நந்தி கோயில் தெரு,
திருச்சி – 620002.
தொலைபேசி: 2706450

அச்சிட்டோர்: மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை–600 021.
தொலைபேசி: 25954528

ANNA CENTENARY LIBRARY
15 SEP 2016
CHENNAI-85

# சுரதா உள்ளம்

"தொடாத வாலிபம்" என் உள்ளத்தைத் தொடக் கண்டேன். என்னைப் போலவே இதன் அருகே நெருங்குபவர் ஒவ்வொருவர் உள்ளத்தையும் இது தொட்டே தீரும் என்று உறுதிப்பாட்டுடையேன்.

நண்பர் சுரதா அவர்களின் எழுதுகோற் கொம்பில் பல வண்ணங்களோடு பூத்துக் குலுங்கும் இலக்கிய மலர்தான் இந்தத் "தொடாத வாலிபம்".

நண்பர் சுரதா புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பரம்பரையில் தோன்றிய சீரிய கவிஞராவார். புரட்சிக் கவிஞரின் கவிதை உள்ளத்தோடு, தம் உள்ளத்தையும் ஈடுபாடுபடுத்திக் கொண்டு, புரட்சிக் கவிஞரின் உள்ளத்தை எடுத்துக்காட்டாகக் கொண்ட காரணத்தால் தான், சுரதா, தம் பெயரை சுப்புரத்தின தாசன் என்று நிலை நாட்டிக் கொண்டார். "சுப்பு ரத்தின தாசனின்" சுருக்கம் தான் "சுரதா" பாரதிதாசனின் பரம்பரை என்றால், சுரதாவின் உளப்பாங்கை விரித்துரைக்கவும் வேண்டுமோ?

இந்நூல் மட்டுமல்லாமல். சுரதாவின் வேறு பல கவிதைகளிலும் நான் தோய்ந்தெழுந்து மகிழ்வடைந்திருக்கிறேன். சுரதாவின் எழுத்துக்களில் அழகு தமிழ் மிளரும்; இனிய ஓசை கேட்கும்; பெருமித நடை தோன்றும்; காதலும் வீரமும் கலந்து உறவாடும்; உவமைகள் துள்ளிக் குதிக்கும்; உருவகங்கள் பின்னிக்கிடக்கும்!

இந்த நயப்பாடுகளெல்லாம் இந்நூலில் குறைவறத் தேங்கிக் கிடக்கின்றன. "தொடாத வாலிபம்" தொட்ட இடமெல்லாம் சுவை பயப்பதாக அமைந்திருக்கிறது.

முத்தமிழின் தன்மைகளான இயற்போக்கு. இசைப்போக்கு, நாடகப் போக்கு, ஆகிய மூன்றினையும் இந்நூலிலே நண்பர் சுரதா அழகுற நடமாட விட்டிருக்கிறார். நாடகப் போக்கினை உணர்த்தி நிற்கும் "தொடாத வாலிபம்" என்ற தலைப்பு. சிறப்புப் பெற்று, இந்நூல் முழுவதையுமே உணர்த்தி நிற்கும் தலைப்பாகக் காட்சியளிக்கிறது.

இந்நூலின் கண் காணப்படும் கவிதைப் பகுதியும். கட்டுரைப் பகுதியும், நாடகப் பகுதியும் இயற்கை எழிலையும், தமிழார்வத்தையும், தமிழகப் பெருமையையும், சீர்திருத்த நோக்கத்தையும், பகுத்தறிவு நெறியினையும், உரிமை வேட்கையையும், படிப்போர் உள்ளத்தே கிளரும் தன்மையனவாக விளங்குகின்றன.

தமிழார்வங் கொண்டோர் அனைவர்க்கும் இந்நூல் தெவிட்டா விருந்து அளிக்கும் தன்மையதாகும். வாழ்க "சுரதா" உள்ளம்!

**இரா. நெடுஞ்செழியன்**

26.3.54

(முதல்பதிப்பில் டாக்டர் நாவலர் வாழ்த்துரை)

# திறப்பதற்கு முன்

புத்தகங்கள்- பறவையின் இறகுகள் போல, அவசியம் உள்ளதாக இருக்க வேண்டும். அந்த ஏடுகளில் சொந்த எண்ணங்கள் சிந்திக்கிடக்க வேண்டும்.

இந்த முறையிலே, சிறந்த நூல் எழுதுவது என்பது, உருண்டை உலகில், 'புகழ் அறிவு' மிகுந்த ஒரு சிலரால் தான் முடியும்!

நான் தீட்டியிருக்கும் தொடாத வாலிபம் என்னும் இந்நூலைத் தொட்டு வாசிப்பவர்களில் சிலர்; அல்லது பலர்- இந்த எழுத்துக்களிலே; கனல் இல்லை. புதிய கருத்துக்கள் கிடையாது- என்று, வேறொருவருக்கு விமர்சனம் செய்தாலும், உதடு பிதுக்கினாலும்; தமிழர்க்கு இன உணர்ச்சியை, மொழிப்பற்றைத் தூண்டிவிட, கொஞ்சமாவது உதவி செய்யும் இது என நம்புகிறேன்.

"அம்பிகாபதி, அந்தக் காலத்திலே, தன் காதலிக்குக் கடிதம் எழுதியிருக்க முடியுமா இவ்வித நாத்திக ஞாபகத்தோடு?"

"முத்துத் தாண்டவர், தில்லைக் கடவுளின் நல்ல பக்தர். ஆனால் இந்தத் தொடாத வாலிபத்தில்; ஆண்டவன் ஆசைபடைத்த, அந்தத் தாண்டவனைக் காணோம். உலகிலிருந்தே தெய்வத்தைத் துரத்தச் சொல்லும் வேறு ஒரு தாண்டவன் அல்லவா இருக்கிறான் அதற்குப் பதிலாக!

முத்துத் தாண்டவரின் மூலக்கதையை மூளியாக்கலாமா இவ்விதம்? கம்பர் மகனை, உங்கள் கட்சிப் பாதைக்குத் திருப்பலாமா இதுபோலா?"

இப்படிக் கேட்பவர்களுக்கு ஒன்று கூறுவேன்: நாத்தீகத்தை நசுக்கி வைத்து, ஆத்தீகம் அரசாண்டு வந்த இரண்டாயிரத்து ஐநூறு

ஆண்டுகட்கு முன்னர், ஒரு திருவள்ளுவர் தோன்றவில்லையா, புரட்சிக் கருத்துக்களைச் சொல்ல? சித்தர்கள் பிறக்கவில்லையா சிந்தனையைத் தூண்டிவிட?

அவர்களைப் போல, அம்பிகாபதியும்- ஏன் எழுதியிருக்க முடியாது- இதுபோன்ற- தெய்வ விவாதங்களைப்பற்றி?

முத்துத் தாண்டவரின் மூலக் கதை, இப்படித்தான் இருந்தது என்பதனை, நிச்சயப்படுத்திச் சொல்ல; எந்த மகேஸ்வர பக்தருக்கும் முடியாது? காரணம், அவரைப்பற்றிய சரியான ஆதாரம் யாரிடத்திலும் இல்லை. இருக்கும் குறிப்புகள்; ஒரே மாதிரியாகவும் இல்லை.

அதனால், அவரை, வெண்சாம்பல் பூசிய வேடதாரி என்று விளம்பரப்படுத்தாமல்-விவேகி-பகுத்தறிவுக்குப் பாதை வகுத்தவர்- தமிழிசை இயக்கத்தின் தந்தை- என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

இது, ஒருவரிடம் மாம்பிஞ்சைத் தருவதற்கு பதில்- மங்கையின் மிருதுவான கன்னத்தை ஒத்த; மாங்கனியைத் தருவது போன்ற செயல்!

பேச்சில், எழுத்தில், அரசியல் அறிவில்- கம்பீரமான திறமை படைத்தவரும், எனது நீண்ட நாள் நண்பருமான, திரு.இரா. நெடுஞ்செழியன் M.A., அவர்கள், இந்த நூலில் ஒட்டிக்கிடக்கும் ஒவ்வொரு கறுப்பு எழுத்தையும், கருத்தையும் விடாமல் படித்து மதிப்புரை தந்ததற்காக எனது வாடாத நன்றி! இது என்றும் இருந்துவரும்!

எத்தனையோ, நூற்களை, நல்ல முறையிலும் குறைந்த விலையிலும்-வெளியிட்டு வரும், முரசொலிப் பதிப்பகத்தின் உரிமையாளர், நா. கிருஷ்ணன் அவர்கள். இந்நூலை வெளியிட்டதற்காக-புத்தக மண்டலத்திலே எனக்கு. சத்தான விளம்பரம் ஏற்படுத்தித் தந்ததற்காக; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்!-பலமுறை.

கருணா

27.3.54

(முதல்பதிப்பின் முன்னுரை)

# தொடாத வாலிபம்

**மயில்**

இலையின் மறைவினில், இளமை அரும்புகள்,
பருவ மடைந்து, பூரிக்கும் சோலையில்,
நிருவா ணமாக நிற்கும் மயிலே!

அன்றுநீ மலையின் அடிவா ரந்தனில்
நின்றதும், பிறகு நிமிர்ந்ததும், கீழே
கிடந்த இரையைக் கொத்தி எடுத்ததும்,
அந்தி வெயிலில் உன்றன் இறகினைக்
காய வைத்துக் கொண்டே சென்றதும்,
எவ்வளவு அழகாய் இருந்தது தெரியுமா?

அமைதியாய் நழுவும் அருவியைப் பார்த்து;
அதிலே உனது அழகினைப் பார்த்தாய்;
அசைந்தாய்; ஆடினாய்; அந்தச் சமயம்
உன்கால் அடிதனை உற்றுப் பார்த்தேன்.
நொச்சி இலையின் ஞாபகம் வந்தது.

மரகத மயிலே! மரகத மயிலே!
உனது இறகின் அடிப்புற அமைப்பு
அழகிய மங்கைக்கு அமைந்த பற்கள்
விழியோ கருமணி! மேனியோ மின்னல்!
வாழைப் பூவின் விரிந்த மடல்என
இருக்கும் உனது இறகுகள் இரண்டும்
தட்டான் செய்த தங்க ஓடுகள்!

ஒற்றைக் கொம்பு எழுத்து போல
தோகை திறந்து திரியும் மயிலே!
பாண்டிய அரசன் பல்லக்கு போல
வளைந்த உன்கழுத்து பிறரால் வளைந்ததா?
கர்ப்பமே உனது கழுத்தை வளைத்ததா?


வர்ண வேற்றுமை வைத்துள பறவையே!
கருங்கடல் தண்ணீர் குடித்த முகிலைப்
பார்த்ததும் தோகை பிரித்து விரித்து
ஆடுகின் றாய்நீ! அதுசரி; ஆனால்.

ஈர உடலோடு இருக்கும் முகிலினை
உனது தோகையால் விசிறு கின்றாயே!

சுரக்கும் ஊற்றுநீர் சுடுகிற தென்று,
விசிறுவார் உண்டோ ஓலை விசிறியால்?

அழகிய மயிலே! அழகிய மயிலே!
மீன்விழி மங்கை மாதவி என்பவள்
சோழ அரசன் சபையில் ஆடிய
நடனம் போல்உன் நடனம் சிறந்தது.
அதைவிட உனது அழகு சிறந்தது!

அகவும் மயிலே! அகவும் மயிலே!
பிறரைப் புகழ்ந்து பேசினால் பெண்ணின்
காதுகள் நிச்சயம் கசந்தே போய்விடும்!
ஆகையி னாலே ஆடும் உயிரே!
உன்னைப் புகழ்வதை பெண்ணின் காதிலே
போட்டு விடாதே கேட்டுக் கொள்கிறேன்!






நித்தம் பிறக்கும் இரத்த வெயில்
உலகின் இருட்டை இழுத்து எறிந்தது!
எழுந்தேன், விழிகள் எனக்குமுன் எழுந்தன!

சேர்த்து மனைவியைப் போர்த்திய உடம்பில்
போர்வையை எடுத்துப் போர்த்துக் கொண்டு,
வெளுத்த உலகின் வெளிப்புறம் நடந்தேன்.

துடிக்கும் அலைகள்; தாமரை; ஊரில்
படுத்துக் கிடக்கும் பெருமலை; மாந்தளிர்,
பனித்துளிக்கூட்டம் அனைத்தும் மின்னின!

"வெளிமான்" என்னும் வேந்தனைக் குறித்துப்
பெருஞ்சித் திரனார் பாடிய பாடலைப்
பாடிக் கொண்டே போகையில், நெருஞ்சிமுள்
நடக்கும் கால்தனில் நறுக்கெனத் தைத்தது.

குளக்கரை வந்தேன், கோதை ஒருத்தி,
போரிடும் அம்புப் பார்வையால், தோள்தனில்
ஈரப் புண்செய்து என்னை அனுப்பினாள்!

தோலுடல் எரியத் தொடர்ந்து நடந்தேன்.
வீதியின் வழியாய் விரைந்து போகையில்,

மலரின் குழியில் மணிநிற வண்டுகள்
விழுந்து கிடக்கும் விபத்தைக் கண்டேன்.

வாய்க்கால் தாண்டி வரப்பிலே நடந்தேன்,
வயலில் நிறுத்திய பயிரின் வகைகள்
தண்ணீர் கேட்டு என்னை நிறுத்தின.

மூடிக்கிடந்த மடையைத் திறந்து
அவற்றின் தாகம் அடக்கினேன், நடந்தேன்.

முள்ளுவேல் கருவேல் மரத்தைக் கண்டு
பற்குச் சொடிக்கப் பறந்தேன், ஒடித்தேன்.

திரும்பினேன், கண்கள் திரும்பின வேறிடம்.
பாழ்மண் டபத்தின் பக்கமாய் நின்ற
வயோதிகக் கருங்கல் வாவென் றழைத்தது.
ஊமைக் கல்லிடம் உடனே ஓடினேன்.

அந்தக் கல்லின் அங்கம் முழுவதும்,
எழுத்து வரிசை இருப்பதைப் பார்த்து
ஆசையாய் அதனை வாசிக் கலானேன்.

'வெண்பூதி யார்' என்னும் பெண்கவி யின் மகள்,
கொல்லன் அடித்துக் கொடுத்த வாளேந்தி,
கழுமலம் எனும்சீர் காழிச் சண்டையில்
எதிர்த்த எதிரியை எதிர்த்து, புகழொடு
இறந்தாள் என்ற சிறந்த சரித்திரம்
அந்த வரிகளில் அடங்கி இருந்தது.

அந்தநாள் தமிழரை; அப்போது பெண்கள்
இருந்த நிலையை; மாதர்க்கு ஆண்கள்
தந்த சுதந்தரத் தன்மையை; ஒருமுறை
நினைத்தேன் எனது நெஞ்சம் குளிர்ந்தது!

வீர மங்கையின் வாழ்க்கையைச் சொல்லும்
நடுகல் லேஸீ வாழ்க!
என்று வாழ்த்தி இடம் பெயர்ந்தேனே!



# கத்திக்குக் கத்தி

அப்பம் இனித்திடும். கரும்பு இனித்திடும்.
அதைவிட அமுதம் இனித்திடும்–இவை
அனைத்தையும் செந்தமிழ் வென்றிடும்!

அறிஞன் உயர்ந்தவன். கலைஞன் உயர்ந்தவன்.
அரசியல் பண்டிதன் உயர்ந்தவன்–மனிதர்
அனைவரி னும்கவி சிறந்தவன்!

நட்பு நலன்தரும். முயற்சி பலன்தரும்.
நாத்திகம் நன்மையைத் தந்திடும்–மூட
நம்பிக்கை யால்துயர் வந்திடும்.

கற்பு புகழ்தரும். காதல் சுகந்தரும்.
கல்வியால் அறிவு நயப்படும்–வெட்டும்
கத்திக்குக் கத்தித்தான் பயப்படும்.

பட்டப் பகல்சுடும். கட்டை அனல்சுடும்
பாலைவ னம்மிகவும் சுடும்– காதற்
பிரிவு இவற்றையெல் லாம்சுடும்!

# குள்ளநரிக் கூட்டம்

கோவலன் வாழ்ந்த ஊரானே-போர்க்
கருவிகள் செய்து தரும் கருமானே!

ஆவிபோன்ற தமிழ் ஏட்டை-கடல்
அழகும், மலையும் படுத்துள்ள நாட்டை.
கேவல வாழ்க்கை நடத்தும்-நரிக்
கூட்டம் புகுந்து கெடுக்குது தோழா!
சாவித் தலையது போலே-பொத்தல்
தலையுள்ள மூடரின் ஆதர வாலே,
சீவிக்க வந்தவர் இன்று-அர
சாங்கத்தின் மேடையில் வாழ்கிறார் நன்று. (கோவ)

ஆயிரம் மாறுதல் செய்து-வையம்
அன்றாடம் கல்வி வளர்க்கும் இந்நாளில்
காய்கனி தின்னும் முனிவர்-காலக்
கல்வி முறையை நுழைப்பது நன்றோ?

ஈயின் சிறுதலை போலே-அமைந்
துள்ளதீக் குச்சி இருந்திடும் போது
தீயை எழுப்ப முன்னோர் போல்-கல்லைத்
தட்டச்சொல் வோர்முழு முட்டாள்க ளன்றோ? [கோவ]

காடுகள் கொன்று நாடாக்கி-பல
கட்டிடம் கட்டிக் கொடுத்திட்ட மக்கள்;
மாடு இழுத்திடும் ஏரால்-வயல்
மண்ணைத் திருத்திநல் தானியம் தந்தோர்;
ஆடும் தறி அதனாலே-நூல்
ஆடை தரும்கைத் தறித்தொழி லாளர்;
ஓடு எடுத்தலை கின்றார்-பணம்
உள்ளவர் பார்த்து மனம்பூரிக் கின்றார். [கோவ]

கட்டி மலையைப் பிளந்தோர்-பூமி
கர்ப்பத்தில் உள்ள பசும்பொன் எடுத்தோர்;
வெட்டிய தால்உரு வான-குளம்
வீதிகள் பாதைகள்; உண்டாக்கி வைத்தோர்;
சுட்டும் விழிநிறம் காட்டும்-கடல்
சுற்றித் திரிந்திட கப்பல்கள் செய்தோர்;
கொட்டும் மழைநீரைப் போலே-கண்ணீர்
கொட்டுகின் றார்பசித் துன்பத்தி னாலே! [கோவ]

இரவின் பனி, பகல் வெய்யில்- புயல்
இடிமழை நோய்கள் தரும் துயரோடு;
தெருவினில் கையேந்து கின்றார்-ஈரத்
தரையில் புழுபூச்சி போல் கிடக் கின்றார்;
மரங்களைப் போல்நனை கின்றார்-உடல்
மூடுந் துணிஇன்றி; கைபோர்த்து கின்றார்;
பரிதாப மன்றோ இக்காட்சி-பரி
காரம் செய்யாவிடில் இதுஎன்ன ஆட்சி? (கோவ)

பாயும் நதிமீன்கள் வந்து-கடல்
பாய்த்துத் திரும்பிடும் பட்டினத் தானே!
கோவில் மடம்என்று கூறி- பொருள்
கொள்ளை அடித்திடும் கள்வரைக் கீறி
நாய்க்கு விருந்திட வேண்டும்-சொந்த
நாட்டினில் அந்நிய ராயிருப் போரை;
பாயும் வரிப்புலி வாழும்-குகை
பக்கத்தில் கொண்டு நிறுத்திட வேண்டும். (கோவ)

தட்டும் தொழில் உடையோனே-சேனைத்
தலைவர்க் கெலாம் கொலை வாள்தரு வோனே!
தொட்டியின் பள்ளத்தைப் போலே- உள்ளம்
தாழ்ந்தவர், ஈனத் தனம் செய்யும்- கும்பல்;

அட்டகா சம்செய்வ தாலே-நாடு
அதிர்ச்சி அடைகின்ற தாகையி னாலே
துட்டர்க ளைவிட லாமா-கத்தி
தண்டனை தந்து ஒழிக்க வேண்டாமா? [கோவ]

காயம் அநித்தியம் என்போர்-தின்னும்
கற்கண்டு வாழ்வைக் கசக்குது என்போர்;
சாயம் வெளுக்கும் புராணம்-சொல்லிச்
சண்டையிட் டுப்பல தெய்வம் வளர்ப்போர்;
ஆயும் அறிவைக் கெடுப்போர்-அவர்
அங்கத்திலே தங்கும் ஆயுளின் காற்றை;
ஓயும்படிச் செய்ய வேண்டும்-உயிர்
அற்ற இரும்பால் அடித்தவேல் வேண்டும். [கோவ]

தூயமணல் ஆற்றினாலே -என்றோ
தோன்றிய தெற்கு இலங்கையின் மேலே,
தீயிடச் செய்திட்ட தீயர்-நூல்
தொங்கும் குலத்தினர், ஏமாற்றும் எத்தர்.
தேய்க்கும் மனம் உள்ளம் துட்டர்-தமிழ்
தேசத்தை நாசப் படுத்துவ தாலே,
ஆயுதம் நீதர வேண்டும்-குடுமி
அப்பர்க்கு நற்பாடம் கற்பிக்க வேண்டும். [கோவ]
தொ-2

# எங்கே என் உதடு?

அவள்: காவியம் கூறும்- பழைய

காவியம் கூறும்- தமிழ்

ராவணனைப் போல போராடும் வீரரே!

–காவியம்கூறும்

ஆவி கலந்தோம்-உடலை

அச்சிட்டுக் கொண்டோம்-சோழன்

ஆற்றங் கரையிலே கீற்று நிலாவிலே!

–ஆவி கலந்தோம்

அவன்: தங்கச் சிலையே-கட்டித்

தங்கச் சிலையே-மிரு

தங்கத்தின் கண்போல சாந்துபொட்டு வைத்த

–தங்கச் சிலையே

செந்தமிழ் போலே-நமது
செந்தமிழ் போலே-இனிக்கும்
சர்க்கரை தேகத்தில் மொய்த்து மகிழ்ந்திட்டோம்!
-செந்தமிழ் போலே

அவள்: முத்தம் கொடுத்தீர்-தழும்பு
முத்தம் கொடுத்தீர்-உங்கள்
முத்தத் தினால்எந்தன் நித்திரை செத்தது!
-முத்தம் கொடுத்தீர்

அவன்: வாலிபக் கன்னம்-உனது
வாலிபக் கன்னம்- சொன்ன
வேலை செய்துஎன் உதடு களைத்தது!
-வாலிபக் கன்னம்

அவள்: மின்னும் உதட்டை-முகத்தில்
மின்னும் உதட்டை- இரு
மாதுளம் பூவாக மாற்றி விட்டீர்களே!
-மின்னும் உதட்டை

எனது பெற்றோர்-ஐயையோ
எனது பெற்றோர்-உதடு
எங்கே என்று கேட்டால் என்ன பதில் சொல்வேன்?
-எனது பெற்றோர்

அவன்: கொஞ்சும் கிளிகள்-பேசிக்
கொஞ்சும் கிளிகள்-உதட்டைக்
கோவைப் பழம் என்று கொத்திட வந்ததால்
-கொஞ்சும் கிளிகள்

எந்தன் உதடு-உடனே
எந்தன் உதடு-தப்பிக்க
இந்த உருவம் எடுத்தது என்றுசொல்!
-எந்தன் உதடு



# நல்லகாலம் பொறக்குது

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு

நல்ல காலம் பொறக்குது
நல்ல காலம் பொறக்குது

ஐயாவைத் தேடி அதிர்ஷ்டம் வருகுது!
அம்மாவை நாடி வரிசை வருகுது!
வாலிபர்க் கெல்லாம் வருகுது யோகம்!

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு

கிளிஞ்சிபோல் இறகு உள்ள குருவிகள்
வெளியில் கிளம்பும் விடியற் காலையில்
பக்கிரி சொல்கிறான் பலிக்கப் போவுது!
பாவா வாக்கு நடக்கப் போவுது!

கவலைகள், கொடுமை, கண்ணீர், வறுமை.
இவைகட் கெல்லாம் ஆதரவு காட்டும்
துன்பம் இனிமேல் தொலையப் போவுது.

மனிதரைப் பங்கு பிரித்து வைத்துள
மதங்கள், ஜாதி எண்ணிக்கை, எல்லாம்
எரிந்து முடிந்த கற்பூரம் போல
அடையாளம் இன்றி அழியப் போவுது.

செந்தமிழ்நாடு செழிக்கப்போவுது!
நமது மொழிக்கு நல்ல காலம்
இனிமேல் நிச்சயம் ஏற்படப் போவுது!
வாடாத தமிழே கூடிய சீக்கிரம்
அரசாங்க மொழியாய் அமைப் போவுது!

ஜக்கம்மா சொல்லடி! ஜக்கம்மா சொல்லடி
பக்கிரி நாக்கை பலிக்க வையடி!

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு

அம்மைத் தழும்புகள் அதிகமா யுள்ளவன்.
முள்ளு ரோஜா மலர்தனைக் கையால்
கிள்ளும் ரோஜா மலர்போன்ற மங்கையின்
கழுத்தில் தாலி கட்டப் போகிறான்.
வைகாசி மாசம் விவாகம் நடக்கும்.

அதற்குப் பிறகு அவனும் அவளும்
வெடித்த அரும்பும் வண்டும் போல
இருக்கப் போகிறார் இனிக்கும் படுக்கையில்
சங்குச் சிரிப்பு பொங்கப் போவுது.

அறையில் உயிரொடு எரியும் விளக்கை
அணைக்கப் போகிறான் மணமகன். அறையும்
இருட்டப் போவுது இவர்கட்காக!

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு

கீறிய தேங்காய்க் கீற்றினைப் போல
வெண்ணிலா மிதக்கும் வெள்ளை இரவில்
எழுபது வயதுக் கிழவி ஒருத்தி
புதையல் எடுக்கப் போகிறாள் கொல்லையில்!

நூலை நுழைத்து சேலைகள் நெய்யும்
சேணியர் வீட்டுச் சிறுவன் ஒருவனால்
தெருவில் கலகம் உருவாகப் போவுது!

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு

மஞ்சள் வெய்யில் முடிவதற் குள்ளே
இந்த ஊரிலே அதிசயம் ஒன்று;

நடக்கப் பொவுது! நடக்கப் போவுது!
இன்னும் அதிசயம் இருக்குது சொல்கிறேன்:
பானைக் குழியிலே படுத்துக் கிடக்கும்
ஈரச் சோறு இருந்தால் போடு!

# இரத்தத்திலே குளிப்போம்

பகுத்தறிவைத் தடுக்கும்–புத்தகத்தைக் கெடுப்போம்.
புராணத்தில் நெருப்பு வைப்போம்.

பஞ்சாங்க புத்தியுள்ள–மனிதரையாம் பழிப்போம்.
சக்கைகள் என்றுரைப் போம்
குப்பைபோல் ஒதுக்கி வைப்போம்.

மனிதர்க்குத் தீமை செய்யும்–மதங்களை சிதறடிப்போம்.
தொழிலாளிக் குயிர் கொடுப்போம்.

முன்னேற்றந் தனைஒடுக்கும்–வழக்கமெல்லாம் ஒழிப்போம்.
விரோதியை ஓடவைப்போம்
பஞ்சத்தை வாடவைப்போம்.

வஞ்சகம் செய்வோர் தம்மை–பட்டைபோலே உரிப்போம்.
பாளை போலே கிழிப்போம்.

வேற்றுமை ஏற்படுத்தும்-உலகத்தை யாம் கலைப்போம்.
சுயமரி யாதை வளர்ப்போம்
புரட்சிலோ கம் படைப்போம்.

கயவர்கள் கூட்டந்தன்னை- வயல்சேறு போல் மிதிப்போம்
பிரேதமாக்கிப் புதைப்போம்.

காட்டிக் கொடுப்போர் தம்மை-வேட்டி போல கிழிப்போம்
விறகு போல பிளப்போம்
தூண்டில்மீன் போல் முறிப்போம்.

அச்சந்தரும் கடலை- கப்பலினால் கிழிப்போம்,
உப்புநீரைப் பழிப்போம்.

ஆணவக் காரர் தம்மை-கத்தியினால் வகுப்போம்
ரத்தத்திலே குளிப்போம்
ஆணி வேரோ டொழிப்போம்.

# பஜனையால் துன்பம் தீருமா?

அந்திநிலா யானைத் தந்தமாய் விட்டது தோழா–கூனல்
அம்புலி தன்னைநீ அவ்விதம் சொல்கிறாய் தோழி!

ஆகாயத் தால்கடல் நீலநிறம் ஆச்சுதோழா–அதன்
ஆழத்தி னால்கடல் அங்கம் கறுத்தது தோழி!

முல்லைக் கொடி வெள்ளை முட்டைகள் இட்டது தோழா–அதன்
மொட்டு தனைக்கண்டு முட்டைகள் என்கிறாய் தோழி

மின்னும் மலர்விடும் மூச்சுதான் வாசனை தோழா–தண்ணீர்
மீதுஉண் டாகும் சுருக்கங் களேஅலை தோழி.

கல்வியில் லாதவன் செத்த மரக்கட்டை தோழா–உண்டு
கக்கிடும் சோற்றினைக் காட்டினும் தாழ்ந்தவன் தோழி.

கற்கண்டும் தேனும் கசப்பாகி விட்டது தோழா–இளங்
கன்னியின் தமிழிசை கேட்டதின் மாறுதல் தோழி.

சேரனைப் போல்ஒரு வீரன் எங்குமில்லை தோழா-வானச்
சூரியன் போல்ஒரு பேரொளி தான்ஏது தோழி?

சொத்தை விரோதிகள் கத்தியைக் காட்டுகிறார் தோழா-குகைச்
சிங்கந்தனை வயல் சுண்டெலி வெல்லுமோ தோழி.

மானிட வாழ்வினை மாயமென் பார்எவர் தோழா?-மத
மோகத்தில் மூழ்கிய காவிச் சட்டைக் காரர் தோழி.

முக்தி, முழுமோட்சம் என்பதெல் லாம்என்ன தோழா-அவை
முட்டாள் தனத்தின் விளம்பர சத்தங்கள் தோழி.

பக்தி பஜனையால் துன்பங்கள் தீருமா தோழா-அம்பு
பட்ட புண்மேல் இழைகட்டினால் ஆறாது தோழி.

பட்சி கடித்த பழத்துக்கு எச்சில்லை தோழா-சுவை
பார்க்கும் உதட்டுக்கும் எச்சில் குற்றமில்லை தோழி.

தெய்வங்கள் இத்தனை எப்போது தோன்றின தோழா-படு
தோல்வி; அறிவு அடைந்திட்ட தேதியில் தோழி.

தானதர்மம் தினம் செய்வது நல்லதா தோழா?-சம
தர்மம் பரவத் தடையல்லவா அது தோழி.

விதவைக்கு மீண்டும் விவாகம் செய்யலாமா தோழா-உயிர்
விதையை முளைக்க விடுவதே நல்லது தோழி.

வாழ்வில்முன் னேற்றம் உழைக்காமல் வாராது தோழா-தானாய்
உப்புக்கடல் முத்து எப்படிக் கரையேறும் தோழி?

# திருக்குறள் வென்றது

மாட்டு வண்டி ஓட்டுதல்; கெடுக்கும்
சீட்டு ஆட்டம்; சிலம்ப வித்தைகள்
இவற்றில் வல்லவன் அழகிரி! இதோடு
பழச்சுவை, பாகு, பெண்சுகம் போன்ற
தமிழிலே கொஞ்சம் தேர்ச்சியும் உண்டு.

சுருட்டு விற்பனை செய்தான் அழகிரி.
வர்ண மிட்டாய் விற்றான் சிலநாள்.
முடிவில் கோழி முட்டைகள் வாங்கி
ஊர்ஊ ராக விற்கத் தொடங்கினான்.

இந்தத் தொழிலில் இவனது கைமுதல்
எரியும் திரிபோல் வரவரக் குறைந்தது.
இழந்த பணத்தை எடுப்ப தற்காக
சூழ்ச்சி ஒன்று செய்யத் துவங்கினான்.

கோழியின் முட்டைகள் கூடையில் இருந்ததா;
ஆமை முட்டையை அதோடு சேர்த்தான்!

கூடையில் இப்படிக் கலந்த முட்டைகள்,
தமிழிலே வந்து தங்கி இருக்கும்
பிறமொழிச் சொற்கள் போல இருந்தன.

வழக்கம் போல வாங்கு வோரிடம்
இவைகளை விற்று ஏமாற்றி வந்தான்
ஏய்ப்பது தெரிந்து அவனை அவ்வூர்
உதையும் குத்தும் வெளியூர் விரட்டின!

அழகிரி யோடு அவனது மனைவி
நேத்திரம் நனைய நடந்து சென்றனள்.

பாத்திரம், பூமியில் புதைத்த உண்டியல்,
ஔவைச் சுவடி, அதுஇது போன்ற
சாத்திரம் யாவும் சென்றன, வீடு
மாத்திரம் நகர முடியாமல் தவித்தது.

நில்வும் வெயிலும் நாட்களைத் திருப்பின
குற்றம் புரிந்த கணவனும் மனைவியும்
பட்டினத் தடிகள் பிறந்தவூர் வந்து
அழுக்குச் சேற்றால் அமைத்தனர் குடிசை.

கட்டி முடித்த குடிசையில், குடும்ப
விளக்கு ஒருபுது விளக்கு ஏற்றினாள்.
எரியும் விளக்கு இரவினில், இருவரும்
ஆசைத ருங்கதை பேசிமு டித்தபின்
உடலிலே உடலை வைத்தனர்! தைத்தனர்!
கலப்பு நித்திரை காட்டினர்! வீட்டிலே!

கல்வி அறிவே இல்லாத பக்கிரி
நெய்யும் தொழிலில் நிபுணன். இதானா?

கஞ்சத் தனத்தில் கிண்டல் செய்வதில்
இவனுக்கு நிகராய் எவனுமே இல்லை.

ஓலைச் சுவடி காலத்து வைதிக
உள்ளம் படைத்தவன் இல்லா விட்டால்.

உருட்டிய சோற்று உருண்டையைப் போல
குடுமி வைத்துக் கொண்டிருப் பானா?

அழகிரி வந்த ஐந்தா வதுநாள்
பக்கிரி யோடு பழக்கம் வைத்தான்.
கஞ்சனும், வந்த கயவனும், அதுமுதல்
நண்பர்கள் போல் நடித்து வந்தனர்.

அழகிரி ஒருநாள் அவனிடம் வந்து
"எனது மனைவி இன்று. அவளது
பெற்றோர் வீடு போகப் போகிறாள்.
புடைவை ஒன்று உடனே வேண்டும்.
கடன்கொடு வாரக் கடைசியில் உனக்கு
பணம்கொடுக் கின்றேன் பக்கிரி" என்றான்.

கடன்எனும் சொல்லைக் காதில் கேட்டதும்
பக்கிரி நினைவு பலபிரி வானது.

..அருமை நண்பனே! ஆருயிர் நண்பனே!
நாயின் கால்விரல் நெருக்கம் உள்ளது;
நாமோ அதைவிட நெருங்கிய நண்பர்கள்!
வண்டுக்கு தேன்தர மாட்டேன் என்று
சொல்லும் மாமலர்ச் சோலையும் உண்டோ?
இதைநான் உனக்கு இல்லைஎன் பேனோ?
ஆனால் ஒன்று அழகிரி, இதைக் கேள்;
நான்தரும் சேலையை நீயே கட்டிக்
கொள்வதா யிருந்தால் கொடுக்கிறேன், உனது
பத்தினிக் கென்றால் புடைவையே இல்லை"
என்றான் பக்கிரி. சென்றான் அழகிரி
பத்து நாட்கள் செத்துப் போயின.

பின்பு ஒருநாள் பக்கிரி வந்து
"எனது மைந்தன் இரத்தின வேலு
திருக்குறள் வகுப்பு செல்ல வேண்டுமாம்;
என்னென்ன சுவடியோ இருந்தும் அந்த
வள்ளுவன் புத்தகம் வீட்டிலே இல்லை
ஆகையி னாலே அழகிரி அதைநீ
கொஞ்சம் இரவல் கொடு" எனக் கேட்டான்.

"அருமை நண்பனே! ஆருயிர் நண்பனே!
நாயின் கல்விரல் நெருக்கம் உள்ளது
நாமோ அதைவிட நெருங்கிய நண்பர்கள்,
வண்டுக்கு தேன்தர மாட்டேன் என்று
சொல்லும் மாமலர்ச் சோலையும் உண்டோ?
இதைநான் உனக்கு இல்லைஎன் பேனோ?
ஆனால் ஒன்று அன்பனே இதைக்கேள்,
நான்தரும் குறளை நீயே படிப்பதாய்
இருந்தால் தருகிறேன் இல்லையேல், உனது
பையனுக் கென்றால் புத்தகம் இல்லை!

என்று சொன்னான் அழகிரி, கஞ்சப்
பக்கிரி மனது வெட்கிய படியே
சேலையைத் திருக்குறள் வென்றது;
என்று சொல்லி எழுந்துபோ னானே!
தொ-3

# தேன் மயக்கம்

அன்பே!

நிர்வாண விளக்குகள் நித்திரை புரிந்த நேரத்திலே நேற்று, உனது பட்டுக் கடிதம் கிடைக்கப் பெற்றேன். அதில் அடங்கியிருக்கும் அந்தரங்க எழுத்துக்களை எல்லாம் ஓசையிட்டு ஆசையோடு வாசித்தேன்.

அந்த உச்சரிப்புக் காற்றினால், என் பக்கத்திலே படுத்திருந்த பெரும்பாணர் என்னும் புலவரின் தூக்கங்கூட கெட்டுவிட்டது.

கொல்லி மலைத் தேனே!

உனது கடிதம் ஒரு கல். இவ்விதம் கூறுகின்றேனே என்று நெற்றியைச் சுருக்கிக் கொள்ளாதே!

நான் குறிப்பிடுவது, காலில் உறுத்துமே கூழாங்கல். அதுவல்ல; கடித்துத் தின்னும் கற்கண்டு கட்டி, கற்கண்டு கூட, தித்திக்கும் கல்தானே!

துணி மூடிய மலையே!

கடிதம் கொண்டு வந்து கொடுத்த, உன் வேலைக்காரி இருக்கிறாளே; அவள். மிகவும் கெட்டிக்காரி ஆண் உடையில் இங்கு வந்து. இவ்வளவு பேருக்கும் இடையில், எவ்வளவு சாதுரியமாக நடந்து கொண்டாள் தெரியுமா?

தூண்டிலில் அகப்படாமல், அதிலே இருக்கும் இரையை மட்டும் தின்றுவிட்டு ஓடிவிடுவதென்றால் அந்த மீன் மிகவும் சாமர்த்தியம் உள்ளதுதானே!

ஊமை இரவு. உச்சி வானத்தில் நோய் கண்ட நிலா. கீழே கொழுந்து இலைச் சோலை. அதன் அருகே ஓர் அருவி அதன் மீது, வெள்ளி வெள்ளத்தைத் தள்ளிக் கொண்டே செல்லும் அடுக்கு அலைகள். அவைகளின் நீர்ப் பாடல், வேறொரு பக்கத்திலே. வண்டுகளின் வாய் சத்தம்.

வாலிபக் கூந்தல்; அதோடு வாய் வெடித்த மலர்கள்; வானவில் புருவம்; அங்கே வண்ணக் கருமை. தேமல் படர்ந்த தேகம்; அதன்மீது தைத்த ஆடை. திலக வட்டத்திலே கஸ்தூரி வாடை. கழுத்திலே, தொங்கிக்கொண்டிருக்கும் தங்க நகை; உதட்டிலே தங்கிக் கொண்டிருக்கும் புன்னகை.

பறவை நடை

முகத்திலே முக்காடுக்குடை!

நெஞ்சிலே, காதல். அஞ்சன விழிகளிலே அச்சம்!

என்னை இந்நாட்டுக்கு, அன்று நீ

அனுப்பி வைத்த போது; இம்மாதிரி

நிலை-நினைவு-நீலப் பொழுது!

உன் சொந்த நாட்டின் இரவிலே; வீங்கிய கனிகளைத் தாங்கிக் கொண்டிருக்கும் சோலையிலே; பருவத் தொடையில் படுத்து; நீயும் நானும் கொஞ்ச நேரம் காமக் கதைகள் பேசி, பிறகு, பார்வைக்குப் ப்ார்வையும் உதடுக்கு உதடும், உடலுக்கு உடலும் தந்து; ஆனந்த காரியம் செய்து கொண்டிருந்தோமே, அந்த சுக சமயத்தைக் கண்டு, ஜாடையாக இராமல், உனது, சிவப்புக் கரங்களிலே சரிந்து, சத்தமிட்டு, சச்சரவு செய்து கொண்டிருந்த-வாயில்லாமலே வார்த்தையாடும்-அந்த வளையல்களை , நான் வெகு கோபத்தோடு ஒடிக்கையில்; உடனே உன் கை நகத்தால், என் பொன் உடலில் புண்கோடு இழுத்தாயே, இந்தப் புண். இன்னும் ஆறவே இல்லை!

உனது வலது கை நகம் வாயினால் சுட்ட வடு அல்லவா? ஆறுமா அது அவ்வளவு சுலபத்தில்!

ஒருவர் கேட்டார்- இது என்ன புண் என்று.

கிளி கீறிவிட்டது- என்றேன்.

"உங்கள் ஊர் மூங்கில் முள்ளால், வந்த விபத்துதான் இது"- இன்னொருவர் கேள்விக்கு. இப்படி ஒரு பதில் சொன்னேன்.

பதிலா இது? பொய்!

நமது சரீரச் சண்டையை அவர்களுக்கு அறிவித்தால், அது நமக்குக் கூச்சமாயிற்றே அதற்காகத் தான் இந்தப் பொய்!

"இளவரசி! கற்கண்டைப் பாலிலே தள்ளிக் காய்ச்சிய பானம் இது"

"இதைக் கொண்டுபோய் தடாகத்திலே தள்ளு"

"அழுத்திப் பிழியாத பழச்சாறு- அருந்துங்கள் இதையாவது"

"இதற்கும் என்னிடம், கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்கப் பார்க்கிறீர்களா?"

"அம்மா! எழுந்திருங்கள், படுக்கை விரித்து விட்டேன்!!"

"கொதிக்கும் தரைக்கா என்னைக் கூப்பிடுகிறாய், தூங்குவதற்கு!"

அரண்மனைத் தோழிகளுக்கு நீ தந்து வரும் பதில் இப்படி இருக்கிறது சில சமயங்களில்.

இது மட்டும் என்ன? இதுவும். "உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று" தானே!

பொய் சொல்லுகிறோமே இப்படி; அதுவும் அடிக்கடி-ஏன்?

மிருகங்களும், பறவைகளும் நிர்வாணமாக இருப்பதை நினைத்து வெட்கப்படுவதுமில்லை; வாழ்வில், ரகசியங்களை வைத்துக் கொள்வதுமில்லை.

ஆனால், இருட்டில் இருக்கும்போது கூட, அங்கத்திலே ஆடையில்லாவிட்டால், கூச்சப்படும் உணர்ச்சி மனிதரிடம் இருக்கிறது.

யானையின் தந்தம் குத்திவிட்டால், அதை கௌரவமாக விளம்பரப்படுத்தும் மனிதன், மங்கையின் மெல்லிய நகம் கீறிவிட்டால் அதை மறைக்க முயல்கிறான்.

மறைக்கும்போது பொய் புறப்படுகிறது.

பரிகாசத்துக்காக மட்டுமல்ல. மனிதன் பொய் சொல்லுவது. கூச்சத்துக்காக மட்டுமல்ல. வார்த்தைக்குத் திரை போடுவது; போதை தரும் காதல் வேலைகளுக்கு மட்டுமல்ல; உண்மையை வீணாக்குவது; கூறக்கூடாத குற்றங்களை மூடி வைக்க; தண்டனையிலிருந்து தப்பிக் கொள்ள; அவமானத்தை மறைக்காவிட்டால் கௌரவம் பாழ்படுமே, அதற்காக-பொய் தேவைப்படுகிறது- தொடர்ந்த ஆயுளோடும் வளர்ந்து வருகிறது.

"பொய் சொல்லலாமா?"

"கூடாது என்றுதான் எல்லோரும் கூறுவர். ஆனால். கூடாது என்பதல்ல-முடியாது."

"ஏன்? அயோத்தி அரிசந்திரன், தனது ஆயுள் அஸ்தமிக்கும் வரை, பொய் பேசாமலே வாழந்து காட்டியிருக்கிறானே!" என்கிறாயா?

"அவன் முடிதுறந்து, மனைவியை விற்று. முடிவில், மயானச் சாம்பல் மேடையில் வெட்டியான் வேலை பார்த்தானே-அந்த அவஸ்தைக் காலம் வரை வேண்டுமானால்-பொய் பேசாது வாழ்ந்திருப்பான் என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால், அதை வைத்து எப்போதும் அப்படியே நடந்திருப்பான் என்பதை எப்படி நம்ப முடியும்?"

ஈரஇரவில்-மலர் மஞ்சத்திலே, மனைவி சந்திரமதியை மார்போடு அணைத்து, முத்தே! மரகதமே! முதிர்ந்த மலரே! முற்றிய நிலவே! என்று மதுர மொழி பேசி மணற் கிழங்கு கன்னத்திலே உதடுகளை மோதி, குருத்து உடலைக் கனியவைத்துக் கொண்டிருக்கையில்- அப்போது அந்தக் கிளிப்பேச்சுக்காரி. உணர்வு கலங்க, உரை சிதற, கொத்து விரல்களின் கண்ணாடி நகத்தால் அவனது முகத்தில் பிறைக்குறி பொறித்திருக்க மாட்டாளா? இப்படி ஏன் நடத்திருக்கக்கூடாது இவர்களது இரவு நேரத்திலே?

இரவு விழுந்து அடுத்த நாள் உதயம் எழுந்து வர, கட்டில் மனைவியை விட்டெழுந்து, கன்னத்தில் அழுந்திய காயத்தோடு, அத்தாணி மண்டபத்துக்கு அரசன் வர; அவனது மின்னும்

கன்னத்தில் கிடக்கும் சின்ன காயத்தைக் கண்டு, ஆஸ்தான கவிஞர்- "அரசே! என்ன காயம் இது?" என்று கவிதையிலே கேட்க, "நிலையில்லாதது தான்-அந்தக் காயத்தைப் பற்றியல்ல நான் கேட்பது. கன்னத்திலே விழுந்திருக்கிறதே வளைந்த காயம், அதன் வரலாறு கேட்கிறேன்.

"இதுவா- என்று ஆரம்பித்து, தயங்கி நடந்ததை மறைத்து வைக்க-லோகிதாசன் கிள்ளிவிட்டான்-அவனை அள்ளி முத்தமிடும்போது" என்று கூறியிருப்பான். அல்லது, என்னைப் போல முள் கிழித்துவிட்டது என்று கூறாது போனாலும், வேலின் முகம் குத்திவிட்டது என்றாவது கெளரவமாகக் கூறியிருப்பான். இது என்ன?

இந்த பதில் அவன் கூச்சத்தை மறைக்கிறது-பொய் சொல்லிவிட்டான் என்பதையும் நமக்குத் தெரிவிக்கிறது.

இந்தப் பொய் ஆராய்ச்சி போகட்டும். இதைக் கேள்.

விழிகள் எப்போதாவது ஒரு பொருளை தனித் தனியாகப் பார்ப்பதுண்டா? அழவேண்டு மென்றாலும், இரண்டும் சேர்ந்துதானே அந்த வேலையைச் செய்து வரும். ஆனால், இதற்கு நேர் எதிர்ப்பாக நேற்று என் நீண்ட விழிகள் நடந்து கொண்டன. என்னவென்று கேட்கிறாயா?

கீழேயிருக்கும் சுடாத சொற்களைப் படித்துப் பார்.

வலது விழியில் விழுந்துவிட்டது ஒரு துரும்பு. அந்தக் கண் மட்டுந்தான் அழுதது. அதற்கு அடுத்த கண் இருக்கிறதே, அது. அழுத கண்ணைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. என் முகத்தின் இரண்டு வெளிச்சங்களுக்கும் என்ன மனஸ்தாபமோ தெரியவில்லை. அந்த துரும்பு தந்ததே எனக்குத் துன்பம் அப்போது நீ என் அருகிலே இருந்திருந்தால், கனலை ஊதுவதுபோல; கண்ணில் ஒட்டிய துரும்பை ஊதி விரட்டியிருக்கும் உனது உதடுகள். அது மட்டுமா செய்திருக்கும்? அப்போது யாரும் பக்கத்திலே இல்லாதிருந்தால், அப்படியே ஒரு ஆசை முத்தம்கூட ஒத்தியிருக்கும்-சத்தங்காட்டாமல்! என்ன செய்வது. நீ தான் என்னோடு இல்லையே.

சோழ நாட்டில் பழத் தோட்டம்!

பாண்டி நாட்டில் பசிகாரன்!

பாலைவனத்திலிருந்து கொண்டு, நதியை நினைக்கிறேன். நதி வருமா? வராது! நான்தான் வரவேண்டும். வருகிறேன். வளைந்த நிலவே! வருகிறேன்-வருகிறேன்.

அசையும் மயிலே! உன் அங்கப் பகுதிகளின் அழகை; ஈரைந்து நாட்களாக என்னால் பார்க்க முடியா விட்டாலும்; அவைகளை நினைவூட்டும் வடிவப் பொருள்களை; வந்திருக்கும் இந்த ஊரிலே பார்க்கிறேன்.

அத்திப் பழமே! அரும்பிலே உன்புதுச் சிரிப்பு; அல்லியிலே உன் உதடு. கரும்பிலே உன் பேச்சினிமை. கனவிலே உன்அங்கம். அதன் அந்தரங்கம்-இவைகளைக் காண்கிறேன். குளிர்ச்சி அடைகிறேன்.

ஊரார்; எனக்கு என்னென்ன உதவி எல்லாமோ இங்கு செய்து வருகின்றனர். ஆனால், எனக்கு வேண்டிய இரவு உதவியை-விழியின் இருட்டிலே வளரும் கனவு தான் விடாமல் செய்து வருகிறது.

அந்தப்புரத்தில், அரும்பு மஞ்சத்தில், ஒற்றையாகத் தூங்கும் உன்னை; ஒவ்வொரு தூக்கத்திலும் கனவு என்னிடம் கொண்டு வந்து ஒப்புவிக்கிறது.

இந்த திறமை உன் கனவுக்கு உண்டோ என்னமோ? அது எனக்குத் தெரியாது. இது குறித்து அடுத்த கடிதத்தில் எழுது. உன் பாட்டனார் வீட்டிலிருந்து பத்து தினங்களில் கொம்புமான் குட்டிகள் வந்துவிடும் என்று எழுதியிருந்தாயே. வந்து விட்டனவா? வந்திருந்தால் ஒரு எச்சரிக்கை. "கொம்பு உள்ளதற்கு ஐந்து, குதிரைக்குப் பத்து முழம்" என்பார்கள். இதை மறந்துவிடாதே.

"வழக்கமாக, உங்கள் சோம்பேறித்தனத்தால் தூங்கிவிட்டு, தோல்வியை என்னிடம் கொண்டு வந்து விடாதீர்கள். இந்த ஆண்டு கவிதைப் பந்தயத்தில் கலந்து கொள்ளவரும் புலவர்களெல்லாம்-புலிகளாம்; சிங்கங்களாம்!" உன் கடிதத்தின் வார்த்தைகள் இவை.

பிரித்த பழச்சுளையே!

காலைப் பனித்துளியே!

கால்வாயைத் தாண்ட- ஆடுதான் கஷ்டப்பட வேண்டும். யானை நடந்தாலே போதும். நீ குறிப்பிடும் புலிகளும், சிங்கங்களும்; என்னை எதுவுமே செய்துவிட முடியாது. அதற்குக் காரணம்- அம்பிகாபதியின் அறிவு; அவைகளின் கண்களுக்குத் தீப்பந்தம்!

"நீங்கள் வெற்றி பெற்றால்தான் என் அகம் குளிரும். முகம் நிமிரும்"-இதுவும் நீ.

ஆமாம், எனக்கேதான் வெற்றி ஏற்பட வேண்டுமென்று இவ்வளவு அழுத்தமாக ஏன் நினைக்கிறாய்?

நம்பிக்கைகள் இருப்பது நல்லதுதான். ஆனால் அவைகளிடம் எதையும் அதிகமாக எதிர்பார்க்கக்கூடாது-இவ்வளவு சலுகை காட்டுவதும் தவறு.

வெற்றியை மட்டும் கேட்பவன், வாழ்வின் பாதி நிகழ்ச்சிகளை வேண்டுமென்றே மறுப்பவன். ஆயிரம் தடவை சிரித்தாலும். ஒரு தடவை அழுதும் அனுபவம் அடைய வேண்டும். அப்போதுதான்; ஒரு மனிதன் முழு வாழ்க்கையையும் உணர்ந்தவனாகிறான்.

புகழ்-இந்த ஆபத்தான வார்த்தையை நீ அடிக்கடி ஞாபகப்படுத்துகிறாயே. இது என்ன செய்யும் தெரியுமா மனிதனை?

மதுவை அருந்திவிட்டால்; அதன் மயக்கத்துக்குக் கட்டுப்பட வேண்டும். புகழ் வந்துவிட்டால்; அதன் கர்வத்தை ஒப்புக் கொள்ள வேண்டும்.

புகழ் என்பது- ஒருவன் தன்னோடு வைத்து வளர்க்கும் சொந்த ஆபத்து. கண்ணுக்கு முன் பக்கத்தில் அழகு இருந்தாலும் அதன் பின் பக்கத்தில் அழுகை மறைத்திருக்கிறது. நீ அடிக்கடி சேகரிக்கும் நினைவுகளோடு இதையும் சேர்த்துக்கொள்.

தினைக்கதிரே!

நாட்டாண்மைக்காரர்; நான்- எங்களோடு இன்னும் இருவர்; எல்லோருமாக கலித்தொகையைத் தொகுத்துத் தந்தாரே நல்லந்துவனார்; அவரைப் பற்றிய கல்வெட்டுகளைப் பார்த்து வரலாமென்று, காமவேளூருக்குப் புறப்பட்டோம்.

அப்போது அந்தி நேரம். அண்ணாந்து பார்த்தேன். உனது மார்பை தொட்டுக் கொண்டிருந்த மாதுளம் பூ வர்ண மேலாடை தான், என்னைப் பார்க்க; மேற்கு வானத்திலே மிதந்து வந்திருக்கிறதோ என்று நினைத்தேன்.

காமவேளூர் கல்வெட்டு சாசனத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பி வரும் வழியில்-உப்பு மூட்டையைச் சுமந்தபடி ஒருவன், மூங்கில் பாலத்தின் மீது நடந்து கொண்டிருந்தான்.

நாட்டாண்மைக்காரர்; உடனே எங்களைப் பார்த்து. "வருத்த முள்ள பாரம் எது?" எனக் கேட்டார்.

"அதோ! அவன் முதுகை அழுத்திக் கொண்டிருக்கிறதே; மூட்டை-அதுதான்" என்றார். எங்களில் ஒருவர். "பசையற்ற பாராங்கல்" என்றார்; வழுக்கைத் தலையர்! "இரும்பு" என்றார் இன்னொருவர். எல்லோரும் எதிர்பார்த்தனர் என்னிடம்- நான்காவது பதிலை. வருத்த முள்ள பாரம்-இரும்பல்ல. ஈயமல்ல; கரையும் உப்புமல்ல; கருங்கல்லுமல்ல. கர்ப்பம் என்றேன்- காரணமும் சொன்னேன்.

அமராவதி!

கர்ப்பம்-என்று கூறியதும்; உடனே எனக்கு "தகப்பன் ஆசை" தோன்றியது. ஆனந்தப் பட்டேன்! அந்த ஆனந்தம், அங்கத்தையே அதிர வைக்கும் அச்சமாக மாறிவிட்டது. அடுத்த கணத்தில் ஏன் அப்படி என்று கேட்கிறாயா?

ஆரம்பத்தில் விழிகளும்- அடுத்தபடி ஆசைகளும், அங்கங்கள் மூன்றாவதாகவும் சந்திக்கும் உண்மைக் காதலை ஒப்புக்கொள்ளும் அகநானூறு காலமாக இது இருந்தால்-

அச்சம், அதிர்ச்சி, ஆபத்து, அதட்டல், அழகு, வெய்யில்-இவைகளுக்கும்; அரசர், அமைச்சர், அந்நியர், அந்தப்புர அணங்குகள்-இவர்களுக்கும். தெரியாமல். நம் இரட்டை நித்திரையை; பயந்து கொண்டு இப்படியா ஆரம்பிப்போம்!

நிழல் இருட்டும்; நீர்க் கரைகளுமா; நமது காதல் கட்டில்களாக இருக்கும்!

இது அந்தக்காலமா? அல்ல அல்ல. வேல் பிடித்த வேந்தரிடம் சேல்விழிகளைக் காட்டவைத்து, தமிழரின் தலைமுறை நாகரீகத்தை நாசமாக்கி வரும் அரிய காலம்.

ஆளும் அரசன் தமிழன்- அவன் 'குறள்' இருக்க வேண்டிய இடத்திலே, கீதை.

உன் அப்பாவின் நீதி. நியாயங்கள் அனைத்தும் வேதிய விமர்சனப்படி!

அருகிலே அமர்ந்திருக்கும் அமைச்சர் வட்டம். எடுத்து எடுத்துக் கூறலாம்; . இந்த ஆரிய மாயை; நம் வீர வாழ்வை வீணாக்கி வருகிறது என்று.

"மன்னரே! சர்ப்பத்தை மடியிலே வைத்துக் கொண்டு மகுடி வாசிக்கிறீர்கள்" இப்படி- ஒரு எச்சரிக்கை; ஒட்டக்கூத்தரிடமிருந்து வந்திருக்கலாம்.

அவர்தான் புகழேந்திப் புலவரை சிறைச்சாலைக்கு அனுப்புவது எப்படி? என் தந்தையை எந்த விதத்தில் மட்டந் தட்டலாம்; என்னும், இருட்டு நினைவிலேயே நாட்களை நாசப்படுத்துகிறாரே!

தெற்கு வேந்தர்களின் தீர வரலாற்றை எழுதாமல், வடக்கு ஆரியனின் வரலாற்றை எழுதி, அவனை வழிபடும் தெய்வமாக்கி, திருவரங்கத் திருச்சூரணக் கும்பலிடம்; ஆழ்வார்ப் பட்டம் பெற்ற என் தந்தைக்கு தான் இன உணர்ச்சியே இல்லை என்பது உனக்கு தெரியுமே! அந்த உணர்ச்சி இருந்தால்தானே, அரிசில் கிழார் பிறந்த தமிழ்நாடு இப்போது ஆரிய மனிதர்களுக்கு அடிமையாக இருந்து வருகிறது என்பதை உணர முடியும்.

"ஒரு குலம்; ஒரு தேவன் இவைகளை- பல ஜாதி பல தெய்வங்கள் விரட்டுகின்றன. விரட்டும் இவற்றை நாம் விரட்ட வேண்டும்.

புதிய உதட்டுக்கும், புன்சிரிப்புக்கும், ஏமாந்து தொல்காப்பிய நாகரிகத்தை ஒதுங்க வைத்து விடாதீர்கள்" என்று சிங்க உணர்ச்சி உள்ள சேனாதிபதி சொல்லலாம். ஆனால், சொல்லவில்லை. இவர்களில் யாருடைய குரலும் எழவே இல்லை.

இவர்கள் வாய் எல்லாம் இப்படி மொட்டுபோல மூடிக்கிடப்பதற்குக் காரணம் யாது தெரியுமா?

காளிதேவிக்குக் கோவிலும், வேல் முருகனுக்கு வளைந்த காவடியும், விரிசடைச் சிவனுக்கு வெள்ளி எருதும் செய்ய

வேண்டுமென்று; அரசனுக்கு அடிக்கடி கவனப்படுத்தும் ஆரிய வேதப்பித்தர்களாயிற்றே இவர்கள். நைந்து வரும் நாட்டை எப்படி திருத்த முடியும் இவர்களால்? எப்படி முடியும் இவர்களுக்கு அரசனின் அறியாமையை, விளக்கிச் சொல்ல- விலக்கி வைக்க! தண்ணீரைத் தண்ணீரா கழுவ முடியும்?

கண்ணே!

நான் தந்திருக்கும் இந்த காரணத்தை, நீ தெரிந்து கொண்டால் மட்டும் போதாது. தோடு அணிந்த உனது தோழிகளுக்கும் தெரியப்படுத்து. பெண்களின் நாக்கைத் தம்பட்டம் என்கிறார்களே, நாடே அறிய வேண்டிய இந்தக் கொள்கைக்கு, அது நன்றாகப் பயன்படட்டும்.

இம்மாதிரி ஆபத்து சூழ்ந்த நிலையில்-தாலிக்காதல் செய்யாமல், பார்வைக் காதல் புரிந்து வருகிறோம் நாம். வர்ணாஸ்ரமக் கொக்கரிப்புக் காட்டும் உன் தந்தைக்கு நம் உதட்டு உறவும், உனது ஆலிலை வயிற்றிலே அரும்பியிருக்கும், நம் இருவரின் "எதிர்காலமும்" தெரிந்தால்; துன்பமும், தூக்கு முடிவும் கிடைப்பது தவிர, நாம் சொந்தமாகவா சாகமுடியும்?

அதனாலேதான் எனக்கு ஏற்பட்டது அச்சமும், அதிர்ச்சியும்; நாட்டாண்மைக்காரருக்கு நான் கர்ப்பம் என்று விடை தந்தபோது!

முத்து-மரகதம்-மாணிக்கம்-முழுப்பவளம்-கரும்பு-கற்கண்டு-காம்புக்கனி-கட்டிவெல்லம்-இந்த எட்டு பொருளே! நான் கெளவிக் குடிக்கும் குடத்தின் உதடே!

"ரத்த தேசம்" இது ஒரு நாட்டின் பெயரல்ல! நான் எழுதிய காவியத்தின் தலைப்பு.

இதில், கடவுள் என்னும் கதாபாத்திரமே கிடையாது. ஆனால், "ஆண்டவன் இல்லாத இடமே எங்குமில்லை-என்று கூறிவிட்டு, பிறகு, கோவிலைக் காட்டி; எல்லாம் செய்யவல்ல இறைவன் இங்கேதான் இருக்கிறார். எல்லோரும் வந்து வணங்குங்கள்" என்று கூறுகிறாயே; எங்கும் தங்கியிருக்கும் காற்றை இந்த இடத்தில் மட்டுந்தான் இருக்கிற தென்றால். நீ புத்திமானா? பைத்தியக் காரனா? இல்லை மனித மோசக்காரனா? என்று, கடவுள் பிரியனைக் கேட்டிருக்கிறேன்.

"கடவுளை நினைக்காமலிருக்கலாமா?" என்று நீ கேட்கலாம்.

மீன், குளிக்க வேண்டுவதில்லை! அதுதான் தண்ணீரிலேயே இருக்கிறது.

இந்தக் காவியத்தில் அரசனுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் போர் பிறக்கிறது. முடிவில், அசைந்த ஆயுதங்கள்; முடி மன்னனை மரணமாக்குகின்றன.

மகுடம் மண்ணிலே உருளுகிறது. அனைவரது ஆசையும் நிறைவேறுகிறது.

இது கதை! திருப்பிச் சொன்னால்- இது என் கனவு.

இன்று இல்லாவிட்டாலும், இரண்டாயிரம் ஆண்டுகள்; இறந்தகாலம் ஆன பிறகாவது; கவி நாக்குப் படைத்த இந்த அம்பிகாபதியின் அரசியல் கனவு நிச்சயம் நிறைவேறத்தான் போகிறது.

கிரீடத்தின் பள்ளத்திலே, கொடுங்கோல் மன்னனின் மாமிச உதிரத்தை நிரப்பி; அவனையே தாகவிடாய் தீர்க்கச் சொல்லும் அரச மரணப் போராட்டம்; ஒரு நாளைக்கு வரத்தான் போகிறது.

சதைப் பதுமையே! இந்தக் கடிதத்திலே; கன்னம், கருவிழி, உதடு- என்று எழுதியிருக்கும் வார்த்தைகளின் மேல் எச்சில் முத்தம் ஒத்தி இருக்கிறேன்.

கன்னத்தைப் போலிருக்கிறதே என்று. கண்ணாடியை முத்தமிட்டால். அது தித்திப்பா தரும்! தராதென்று தெரியும். இருந்தும் இப்படிச் செய்தேன். இது ஒரு வித பித்தத்தனந்தான்.

கவிஞன், காதலன், அறிஞன், இவர்களைப் பைத்தியக்காரர்களென்று கூறுகிறார்களே. ஒரு வேளை இது போன்ற பிள்ளை விளையாட்டால் தானோ?

பெண் மீனே!

எனது பொறாமைக்காரர்கள், கவிஞர்களல்ல- கற்றவர்களல்ல, உன் அந்தப்புரத்துக் கண்ணாடிதான்! ஏன் தெரியுமா? என்னைவிட அது தானே அடிக்கடி உன் அழகைப் பார்த்து வருகிறது!

சோழன் மகளே!

எனது புதிய புகழை முதலிலும்; பொதியமலைச் சந்தனத்தின், வாசனையை, இரண்டாவதாகவும்; அனுப்பி வைத்து-பாண்டி நாட்டுப் பச்சரிசியில் உன்னைப் போல செய்து வைத்திருக்கும் உருவத்தை மூன்றாவதாக எடுத்துக் கொண்டு; நான்கு நாட்களில், ஐந்து யானைகளோடு பல்லக்கிலே புறப்பட்டு வருகிறேன். அன்று, நிலவின் ஆறாவதுநாள். இதை நினைவு வைத்துக்கொள். அந்த நிலவு உன் நெற்றிக்கு நேராக வரும் நேரத்திலே, உன் கோலமுகத்துக்கு நீலமுக்காடு கொடுத்து, காய்ந்து கிடக்கும், அந்தப் பாம்பு நதியின் மணல் மெத்தையிலே வந்து படுத்திரு!

இப்படிக்கு

உன் உயிரில் பங்கு வைத்திருக்கும்

**அம்பிகாபதி**

# குடும்பத்தின்மேல் கண்ணீர்

அன்புள்ள மதிமுத்தம்!

என் தாய். என்னை, முதல் பிரசவத்துக்கு; ஊருக்கு அழைத்து வருவதற்கு முன்தினம்; உன் கணவர், உன்னைக் கல்லக்குடிக்கு அழைத்துக் கொண்டு போய்விட்டாராம்.

வந்தும் சந்திக்க முடியவில்லை!

என் தங்கையின் பருவச் சடங்குக்காக வேறொரு தடவை வந்திருந்த போது. திடீரென்று எனக்கு சன்னி கண்டு. பிழைப்பேனா, போய்விடுவேனோ-என்று இருக்கும் நிலையில்-நீ என்னை வந்து பார்த்தாயாம்.

உனது முகம் குவிந்துவிட்டதாம்! கருவிழிகள் கண்ணீர் திறந்தனவாம். எனக்காக!

அந்த சந்தர்ப்பத்திலே-நீ பார்த்திருக்கிறாய் என்னை. ஆனால். நான் பார்க்கமுடியவில்லை, உன்னை!

இப்படி ஒவ்வொரு காரணத்தாலும், நமது சந்திப்பு, இந்த ஒன்பது ஆண்டுகளாக; வெட்டுப்பட்டுக் கொண்டே வருகிறது.

பக்கத்திலுள்ள சித்திர புத்தூருக்கு. சென்ற மாதம் வந்திருந்தாயாம்; உன் வீட்டுக்காரரோடு, திருமணப் பரிசு வழங்க. கேள்விப்பட்டேன்.

வந்த நீ, அப்படியே இந்த ஏழையின் முகத்தை எட்டிப் பார்த்துவிட்டுப் போகக் கூடாதா?

சித்திர புத்தூருக்கும், என் கூரை இருக்கும் சத்திமுத்தத்துக்கும் தூரமென்ன-பத்துகாதமா? மனமிருந்தால் வந்திருக்கலாம்.

அப்படியே, நீ வந்துவிட்டாலும். எனது சிறு பருவத்துச் சிநேகிதி வந்திருக்கிறாளே என்று-பத்து வித பதார்த்தமும், பதினெட்டு வகைக் கூட்டும் செய்து உனக்கு மதிப்பான விருந்து வைத்திட முடியுமா என்னால்?

ஏதோ என்னிடமுள்ள கூழ் கிடைக்கும். கருணைக் கிழங்கு என்றால்தான் உனக்குப் பிரியமாயிற்றே; அவை. என் கொல்லையில் ஏராளமாக இருக்கின்றன. வேண்டுமானால் பூனைக் கண் போல பொரியல் செய்து, அதை உனக்கு வைப்பேன்.

விருந்து வந்தால், சிரித்த முகத்தோடு வரவேற்க வேண்டும் என்பார்கள். எனக்கு ஏது சிரித்த முகம். இப்போது?

கூட்டிலே பறவைகள்; குளத்திலே மலர்கள்; மரத்திலே இலைகள்; மஞ்சத்திலே மனிதர்கள்-அசந்து நித்திரை போகும் விடிஇருட்டில்; கொண்டைக்கோழி.

கொக்கரக்கோ ஓசை கொடுப்பதற்கு முன், கொடி இடையில் குடம் சுமந்து; நமது ஊர் நெல்லிக் குளத்துக்கு நீராடச் செல்வோமே நினைவிருக்கிறதா. நாம் கொய்யாத கனிகளாக இருந்த பருவத்திலே!

நீரின் உடலில் நாம் நீராடிக் கொண்டே; மொட்டுத் தாமரையை; முதல் நாள் மலர்ந்த அல்லியை; முத்தமிட்டு. எத்தனையோ ஆசை வார்த்தைகளை சத்தமிட்டுப் பேசி இருக்கிறோம்.

சிரிக்கும்போது, எனது சிவந்த கன்னத்திலே குழி விழுவது கண்டு, "கிளிச்சிறை நீ அதிர்ஷ்டக்காரிடி. உன் கன்னத்தில் எப்படிக் குழி விழுகிறது பார்த்தாயா? நீ போகுமிடத்தில், பொன் விளையும்" என்று அடிக்கடி கூறி இருக்கிறாய் என்னிடம்.

"அம்மா உன் விரல் பட்டால், தவிடும் தங்கத் தூளாய்விடும்.

-இப்படி பிச்சைக்காரர்களும்; ஆரூடச் சொற்கள் சொல்லி வந்தார்கள். அன்றாடம் எனக்கு.

கீழத்தெரு குடுமி சோதிடர் இருக்கிறாரே, அவர் அளந்ததைத்தான் அருகிலிருந்து நீ கேட்டுக் கொண்டிருந்தாயே.

"யோகம் வரும்" என்றார்.

எனது இதயம் ஈரமானது.

"கோவலனைப் போன்ற பெரும் பொருள் படைத்தவனுக்கு நீ வாழ்க்கைப்படுவாய் என்றார்.

"ஆயுட்காலம் முழுவதும், பணத்திலேயே படுத்திருக்கலாம்" என்று அப்போது மனக்கனவு கண்டேன்?

இப்போது-மான் விழியிலே, நீரைத்தான் காண்கிறேன்.

அந்த நாட்களிலே, என்னை அதிர்ஷ்டக்காரி என்றாயே மதிமுத்தம்; என் கதையிலே அதிர்ஷ்டமா கலந்திருக்கிறது.

"தவிடும் தங்கத் தூளாய்விடும்" என்றார்களே. அவர்கள் வாக்குத்தான் பலித்ததா? இல்லை, "யோகம் வரும்" என்றாரே சோதிடர்; அவர் சொன்னதுதான் வந்ததா?

இந்த சோதிடக்காரர்கள், இப்படி எல்லோருக்கும் ஏன் ஆசை காட்ட வேண்டும்?

அந்த ஆசையை எதிர்பார்த்து, ஏங்கி ஏமாந்து-ஏன். மனிதர்கள் இப்படி மனம் முறிந்து போக வேண்டும்?

"கவிஞர்கள்; தத்துவ மனிதர்கள்; இசை வாணர்கள்-இவர்களை சிறையிலே தள்ளி வைத்தால்தான் உலகம் குழப்பமில்லாமல் இருக்கும்" என்று நம் இராவண வாத்தியாரின் ஓலைச் சுவடியிலே பார்த்த ஞாபகம். அவர்களோடு. "இந்த சோதிடக்காரர்களையும் சேர்த்து சிறையிலே போடவேண்டும்" என்று நான் கூறுகிறேன். ஆமாம் மதிமுத்தம், இவர்கள் மீது அவ்வளவு ஆத்திரம் எனக்கு!

எனது குடிசையைச் சுற்றிலும் நெற்கதிர்கள் முற்றிக் கிடக்கின்றன. அவைகளை எடுக்கும் உரிமை குருவிகளுக்கு இருக்கிறது. ஆனால் எனக்கு இல்லை. அந்தக் கதிர்களும், என் குடிசைக்கு வராது. ஆனால் என் ஏழைக் கணவர், தனது மேல் துண்டில் வாங்கி முடி போட்டிருக்கும் அரிசிதான் வரும். அரிசியும் அவரும் வந்த பிறகுதான், அடுப்பு வெளிச்சமடையும்!

என் கணவர் இருக்கிறாரே. அவரைக் கல்யாணம் செய்து கொண்டதற்குப் பதில்-பேசாமல் அவரது புத்தகங்களைக் கல்யாணம்

செய்து கொண்டிருந்தாலும் நிம்மதி ஏற்பட்டிருக்கும். ஏனென்றால்; புத்தகங்கள் பேசுவதுமில்லை. அதிகாரம் செய்வதும் கிடையாது. ஆனால் அவர் இரண்டும் செய்கிறாரே.

பாவம்! என் கணவரைக் குறை கூறுவது தவறு. குடலுக்குள் ஒட்டிக் கொண்டிருக்கும் விரோதி ஆயிற்றே பசி" அது தாக்கியதும், தாண்டிக் குத்துக்கிறார் என்னிடம்.

என் கணவர்; சுயமாக வீடு கட்டத் தெரியாத, நாகப்பாம்பு போன்றவரல்ல. பிறர் பொருளைப் பிரதிபலித்துக்காட்டும், கண்ணாடி போன்றவரல்ல.

அறிவு மாறாட்டம் செய்பவரா? அல்ல அல்ல?

இரவல் பெருமை தேடும். இலக்கியத் திருடரா? அல்லவே அல்ல! இப்படி ஏன் அழுத்தமாகச் சொல்கிறேன் தெரியுமா?

என் கணவர், குளம் போன்றவர் அல்ல-கிணறு போன்றவர். கிணறு, தண்ணீரைக் கடன் கேட்பதில்லை. தடாகந்தான் மேகத்தின் உதவியை எதிர்பார்க்கும்.

என் கணவரை எதிர்ப்பவர்கள்கூட, சத்தி முத்தப் புலவர். "மிகச் சிறந்த சிந்தனைச் சிற்பி" என்று ஒப்புக் கொள்கிறார்கள்.

இவர், சிலருக்கு-பேரறிஞராக விளங்குகிறார். பலருக்குப் பித்தராகப் புலப்படுகிறார். மனிதரிலே பலர்-இவரை 'மடையன்' என்று முடிவு கட்டுகிறார்கள்.

இவரைப் பற்றி-இவர் போன்ற அறிஞர்களைப் பற்றி-இப்படி. வெவ்வேறு விதமாகப் பேசப்பட்டு வருவதற்குக் காரணம் என்ன தெரியுமா?

உயர்ந்தது எது? என்ற முடிவும்; ஏன் மதிக்கிறோம்? என்பதற்கு விமர்சனமும்; சரியாக இல்லாததுதான்.

கண்டிக்கப்படாத புகழ். இன்று, நம் நாட்டில் யாருக்குமே இல்லாமலிருப்பதற்குக் காரணங்கூட இதுதான்.

கோடை இடி போல மேடை சத்தம் போடுகின்றனர். "தமிழ் வளர வேண்டும், வாழ வேண்டும்" வையமெல்லாம் சுற்றி வரவேண்டும்" என்று.

தெர-4

ஆனால், தமிழுக்கு சக்தி தருபவனை; அறிந்தவர்கள் பாராட்டுவதுமில்லை. அரசாங்கம் ஆதரிப்பதும் கிடையாது.

என் கணவரை ஆதரிக்கவில்லையே என்னும் கசப்பில் இப்படிக் கூறவில்லை மதிமுத்தம்.

கவிஞர் ஒருவரை, கலிங்க அரசாங்கம் அமைச்சராக நியமித்திருக்கிறதாம்! கடாரதேசத்திலே கவிதைக்கு முதல் மரியாதையும்; கிரீடத்துக்கு இரண்டாவது வணக்கமும் தரப்பட்டு வருகிறதாம்.

அக்கம் பக்கத்துக் கிளைநாடுகள். அங்கே. அப்படி நடந்து கொள்ள; இங்கே இருந்து வரும் ஆஸ்தானக் கவிஞரை எழுந்து போகச் சொல்லுகிறது பதவியைவிட்டு-நமது அரசாங்கம்!

இது சரியா? இருக்கலாமா? இருக்கத்தான் விடலாமா?

மூங்கிலைத் தேடுகிறான்- கீதக் குழலுக்காக.

முத்துக்களைத் தேடுகிறான்- ஆபரணத்துக்காக

மலரைத் தேடுகிறான்-மாலைக்காக.

மதி நுட்பம் மிகுந்த புலவர்களை மட்டும் தேடுவதேயில்லை-தமிழ் வளர்ச்சிக்காக! இது ஏன்?

என் கணவரை, இந்த அரசாங்கம் ஆதரித்திருந்தால், என் விழியிலே நீர் மிதக்குமா? வீட்டிலே வறுமைதான் பிறக்குமா?

மதி முத்தம்! நான் கொடுத்து வைக்காதவள். ஆம்! நான் கொடுத்தே வைக்காதவள் தான்!

அழகாகப் பிறந்தேன்.

அருமையாக வளர்ந்தேன்.

அறிஞனுக்குத்தான் வாழ்க்கைப் பட்டேன். ஆனால், அனுபவிக்க வேண்டிய சுகம்; அணுவளவுகூட இன்னும் கிடைக்கவில்லை. என் ஆசைகள் வாடுகின்றன. அவஸ்தைகள் வாட்டுகின்றன. அதனால் அழுகிறேன், அழுகிறேன் அழுது கொண்டே இருக்கிறேன்! சிவந்த ரத்தத்திலே பிறந்து; இங்கே சீரழிகிறேன். இந்த வேதனையிலிருந்து

வேவதைவிட, ஒரு கட்டு விறகிலிருந்து வெந்து விடலாம் போலிருக்கிறது மதிமுத்தம்!

இந்த லட்சணத்திலே, எனக்குக் குழந்தைகள் வேறு. அதுவும் ஒன்றா இரண்டா. ஒன்பது! அதில் முதல் ஏழும் பெண். அடுத்த இரண்டும் ஆண், கடைசிக் குழந்தையோ; பிறக்கும்போதே நரைத்த தலையோடு பிறந்தது.

யாரோ ஒரு யவன அறிஞன்கூட இப்படித்தான் நரைத்த உரோமத்தோடு பிறந்தானாம். பிறப்பு அதுபோல இருந்தாலும் சிறப்பு எப்படியோ, என் மகனுக்கு.

ஒரு நாட்டிலே, பொருளாதாரப் பிரச்சினையை உண்டாக்குவது, பற்றாக்குறை, பஞ்சம்- இவை மட்டுமல்ல-அதிகமான பிள்ளை உற்பத்தி இதுவுந்தான். எனது குடும்ப அனுபவத்தைக் கொண்டு கூறுகிறேன் இப்படி.

ஒரு பெண்

பன்றிபோல பல குட்டிகள்

பெறுவதை விட; சிங்கம்போல

ஒன்று பெறுவது, நல்லது-

உயர்வு-கௌரவம்-சுகம்!

"இந்த உபதேசத்தை உன் வாழ்விலே ஏன் அனுசரிக்கவில்லை" என்று கேட்கலாம்.....

மானத்தை மறைப்பதற்கு மட்டுந்தான் என்றிருந்தால்; ஆடையில் சாயம் ஏற்றவேண்டியதுமில்லை. ஆடை விஷயத்தில்; அழகை எதிர்பார்க்க வேண்டிய அவசியமும் ஏற்படாது.

உடல் நலத்துகாக மட்டும் உணவு உட்கொள்வதாக இருந்தால், வேப்பிலைகூட துவையலாக வேண்டி வந்துவிடும்.

ஆனால், நாம்-ஆடையிலே அழகும்; உணவிலே சுவையும்; இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

அவசியத்தைவிட ஆசைக்காகத்தான் மனிதன்-அநேக காரியங்களைச் செய்து வருகிறான்.

"மாதம் இருமுறைதான்-கணவனுக்காக மனைவியின் சேலை அவிழவேண்டும்" என்று சதகங்கள் சொல்லுகின்றன. ஆனால் நடந்து கொள்ள முடிகிறதா அப்படி? முடிந்தால்; இந்த 'ஒன்பது' வெளிப்பட்டு என் உயிரை வாங்கிக் கொண்டிருக்குமா இப்படி?

குழந்தைகள்- கவலை தீர்க்கும் மருந்து என்கிறாள் தாய். பிரார்த்தனை-கவலை தீர்க்கும் மருந்து என்கிறான் பக்தன்.-பிறர் பொருள் கவலை தீர்க்கும் மருந்து என்கிறான் திருடன். ஆனால், என்கவலை தீர்க்கும் மருந்து; குழந்தைகள் அல்ல; கொல்லும் விஷம்! அல்லது சாவு!

உனக்கு உற்றார் உறவினர் எவ்வளவோ பேர் இருந்தும் நீ இப்படி வேதனைப் படலாமா? என்று கேட்கலாம்! அவர்கள் இருந்து எனக்கென்ன?

உறவினர்தான் வௌவால்களாயிற்றே! பழம் இருந்தால், எடுத்துக் கொண்டு போக மரத்தை நாடி வௌவால்கள் வரும்.

என் குடும்பம் வெறும் இலையுள்ள மரந்தானே- எப்படி வரும் அந்த வௌவால்கள்.

"மற்றவர்கள் போகட்டும்-உன் சிற்றப்பாபிள்ளை செந்தில்நாயகந்தான் சீரும் சிறப்புமாக இருக்கிறாரே. அவரிடம், உனது கண்ணீர்க் குடும்பத்தைப் பற்றி ஏன் கூறக்கூடாது? கேட்டால் உதவமாட்டாரா?" என்று நினைவுபடுத்துகிறாய்.

இதுவரை, அவரிடம் எந்த உதவிக்கும் உதடு திறந்ததே இல்லை. கேட்டாலும் கிடைக்கும். ஆனால் அது எத்தனை நாளைக்கு?

சிறிய இளநீரைக் கொண்டு, வாழ்நாட்களில் ஏற்படும் தாகத்தை எல்லாம் தீர்த்துக் கொண்டு விடமுடியுமா?

எனது கஷ்டத்தைக் குறைத்துக் கொள்ள, அவர் வீட்டில் போய் இரண்டொருமாதம் இருந்து வரலாம்-ஆனால் அந்நியர் வீட்டில் அறுசுவையோடு உண்ணுவதைவிட-சொந்த வீட்டில் பட்டினியோடு சுருண்டு கிடப்பதுதானே கீர்த்தி கொடுக்கும் விருந்து!

ஆமாம்-உனக்கு பெண் குழந்தை பிறந்திருக்கிறதே. அதற்கு என்ன பெயர் இடப்போகிறாய்?

பங்கஜம் என்று முதல் பெண்ணுக்குப் பெயர் வைத்தாயே, அதுபோல ஆரிய வார்த்தையிலா? இல்லை-அமுதச் தமிழ்ச்சொல்லிலா?

மன்னர்கள்-மாவீரர்கள், வாரி வழங்கிய வள்ளல்கள், தமிழ்காத்த புலவர்கள்-கலைஞர்கள், அறிஞர்கள்; கற்பரசிகள்; அவர்களது நினைவாக. நமது பிள்ளைகளுக்கு பெயர் வைப்பதா? மொழி மரியாதை இழந்து-அந்நியர் சொற்களை உபயோகித்து-நம் குழந்தைகளை அழைப்பதா?

நீயே இப்படி நடந்து கொண்டால் நாட்டிலே படிக்காதவர்களைப் ப்ற்றிக் கேட்கவேண்டுமா?

பங்கஜம்-என்னும் பெயரை உடனே, தாமரை என்று தமிழிலே மாற்று.

ஏன் மதி முத்தம்-குழந்தையின் குழல்-சுருண்டு சுருண்டு இருக்கிறதா? அப்படி இருந்தால், மோதிரக் குழலி என்று உன் மகளுக்குப் பெயர் இடு. அல்லது மேகலை என்னும், ஒரு ஆபரணத்தின் பெயரைத்தான் உனது அரும்புக் குழந்தைக்கு இடேன்.

நீதான், நாகரெத்தினம் போல தேகமெடுத்தவள். அழகின் அழகி! உன் வயிற்றிலே பிறந்த உரு, அந்தி வானம் போல அழகாகத்தானே இருக்கும்! அதனால். உன் மகளை அழகி என்று கூட அழைக்கலாம்.

ஏன் உனக்குத்தான் கவிஞர்களை மிகவும் பிடிக்குமே-நப்பசலையார் என்னும் சங்ககாலப் பெண்கவியின் பெயரைத்தான் உன் பெண்ணுக்கு வையேன்.

இப்படிப் பெயர் வைத்தால்-நப்பசலையாரின் நினைவு வரும். அடுத்து, அந்த அம்மையாரின் வாழ்க்கை வரலாறும்; அவர் வளர்த்துத் தந்த பெருமையும் விளங்கும். பிறகு அவரைப் போல ஆகவேண்டும் என்ற எண்ணம்; உனது இன்ப மகளுக்கு ஏற்படும்!

இன்னொரு சேதி, மிக முக்கியம் இது. உன் கணவர் ஊரான கல்லக்குடியை, தாலமிபுரம் என்று மாற்றிவிடத் திட்டம் தீட்டுகிறார்களாம்-மார்புநூல் மனிதர்கள். இந்த வஞ்சக வேலையை-உன் கணவரிடம் கூறு. ஊராருக்கும் உரைக்கச் சொல்-உணர்வு

பெற்று எழ!

இதில் நாம், ஏமாந்தால்- நம் தமிழ் ஏமாந்தது-என்பதுதான் பொருள். இப்படி நாம் அடிக்கடி ஏமாந்துவிட்டதால்தான்- திருமறைக்காடு-வேதாரண்யமாகத் திரும்பியிருக்கிறது. முதுகுன்றம்-விருத்தாசலம் என்று உச்சரிக்கப்படுகிறது.

மயிலாடுதுறை-மயூரம் என்று எழுதப்பட்டு வருகிறது.

வேறு மொழிக்காரர்கள்-நமது விருந்துத் தமிழை இனியும் வீணாக்க விடக்கூடாது. அதற்கு, நமது, உணர்ச்சிகளையும் கவனத்தையும் பழுதுபடாமல் பக்குவமாக வைத்துக் கொள்ளவேண்டும். விஷ ஜந்துக்களைப் போல; எப்போதும் ஜாக்கிரதையாகவும் இருந்து வரவேண்டும்.

ஆயுதங்கள் அசைவது குறைந்தால்-வீரம் சுருங்கிவிடும். மொழியைப் பாதுகாக்கத் தவறிவிட்டால்-இன உணர்ச்சி ஏற்பட வழியில்லாது போய்விடும்.

இந்த இரண்டு நிலைகளும் வளர்ந்துவிட்டால்-பிறகு; அந்நியத் தனமும்; அடிமை நடத்தைகளும்-நம் நாட்டை, ஆக்ரமித்து அதிகாரம் செய்ய ஆரம்பித்து விடும்!

மதி முத்தம்! என் கணவர், தமிழ் மதுரை சென்று பாண்டியனைப் பார்க்க விரும்புகிறார். அவரை அனுப்பிவைக்க-வழிச்செலவுக்கு வழியில்லை. வயிற்றுக்கே இல்லாமல் வாடும்போது, வட்டப்பணம் எப்படி இருக்க முடியும் என்னிடம்.

தயவு செய்து ஏதோ கொஞ்சம் உதவி செய். இது உனக்குப் புண்ணியமல்ல-பெருமை. நம் தமிழுக்கு நீ தரும் நன்கொடை.

குடும்பக் கதையைக்கூறி; கடைசியில்-கைப்பொருளுக்கே வழிவைக்கப் பார்க்கிறாளே கிளிச்சிறை என்று நினைத்துவிடாதே. நீ அப்படி நினைக்கவும் மாட்டாய். அதனால்தான் கேட்கிறேன். கடிதத்தை விட்டும் உன்னைக் கேட்கவைக்கிறேன்!

அழுதுகொண்டே எழுதி முடித்த இந்த ஓலை; உன்னிடம் வந்ததும்; இந்த உதவி செய்ய மறந்துவிடாதே மதிமுத்தம்!

இப்படிக்கு
கண்ணீர்விடும் கிளிச்சிறை

# நெருப்போடு ஒப்பந்தம்

## 1

எனது பிரேதச் சாம்பலை, முதலில் மிதிக்கப் போகும் மனிதனுக்கு-

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, மன்னரை நான் மாலையிட்டது; இடைக்காலமெல்லாம், இருட்டுக்குள் சித்திரம் போல இருந்தது; இப்போது மணாளனை இழந்து, மனது கொதிக்க, மணிநீர் வழிய. விம்மிக் கொண்டிருக்கிறேனே-இந்த உயிர் நேரம் வரையிலே; என் கதை உனக்கு நன்றாகத் தெரிந்திருக்கும்-நீ இந்நாட்டின் குடிமகனாக இருந்திருந்தால்.

சாதி மதம் என்று வழக்காடும் இந்த உலகத்தைவிட்டு, சாவை உண்டாக்கிக் கொள்ளப் போகிறேனே நான்-அதையும் நீ கேள்விப்பட முடியும்; அல்லது, பக்கத்திலே இருந்தால் பார்த்துவிட முடியும்!

நாளை, அந்திப் பொழுதிலே, அழகான எனது உடல் அழியப் போகிறது. சமையலுக்கு உதவி செய்யும் நெருப்பு. என்னை சாம்பலாக்கப் போகிறது. மண்ணால் ஆன இந்த பூமி, எனது உடல் மண்ணால், இன்னும் கொஞ்சம் உயரப்போகிறது.

அசையும் விழியிலே-நீரோடு; கழுத்தில், ஆவாரம் பூப்போன்ற-தாலியோடு; அழகு நெற்றியிலே-பொட்டோடு; சிவந்த சரீரத்திலே-மஞ்சள் சேலையோடு; புகை நெருப்பிலே நான் உயிரோடு எரிவதை, பக்கத்திலே நின்று பார்ப்பவர்களில் பலருக்கு அவர்களது பளிங்குப் பார்வையிலே உப்பு நீர் வடியும்.

"பகைவர் நாட்டை, ரத்தமாக்கிய மஹமத்கான்; பாய்ந்து வந்த கத்தியினால் பிணமானார். நமது அரசர், ராஜா தேசிங்கும்; விரோதிகளைக் கொன்ற அதே வாளினால், வயிற்றில் குத்திக் கொண்டு இறந்தார். இன்று, அவரது மனைவிக்கும், இந்த அக்கினிச் சாவு! பாவம்! எல்லாம் அவரவர்கள் தலைவிதி போல்தான் நடக்கும்" என்று சொல்லலாம், சிலர்.

"அறிஞர்களுக்கும், அயோக்யர்களுக்கும், அவர்களது சாவுநேரம்-அநேகமாக நல்லதாக இருப்பதில்லை" என்று கூறி, வருத்தப்படும் அனுபவஸ்தர்களும் இருக்கலாம்.

ஆடம்பரச் செலவு செய்து, என் சரீரச் சாம்பலை கங்கையிலே கரைக்க, சாஸ்திரிகள் நினைவுபடுத்தலாம்.

குடத்து நீரிலே-சந்தனத்தைக் கரைக்கலாம். பூசிக்கொள்ளப் பயன்படும், அது. வயல் நீரிலே-எருவைக் கொட்டலாம். அது. பயிர்களை பலப்படுத்தும். உலை நீரிலே- அரிசியைப் போடலாம். பிறகு அது உணவாகும். பசியைப் பறக்கச் செய்யும். இவைகளைச் செய்யாமல், அழுக்குத்தோல் சாம்பலை அழகான நதியிலே கரைத்தால், அந்த நதிதானே அழுக்கடையும்!

கற்களுக்குப் பசி எடுப்பதே இல்லை. ஆனால், அவைகளுக்குத் தரப்படுகிறது, பால்! பதார்த்தப் படையல்! பசியோடு அலையும் மனிதனுக்குப் பரிதாபப்படுபவர்கள்; பாரிலும் இல்லை-ஊரிலும் இல்லை!

வீதி ஒட்டுக்களிலே, படுத்துக் கிடக்கிறான் மனிதன்; வீடு வாசல் இல்லாமல். அவர்களுக்குப் பரிகாரமில்லை. ஆனால் விக்ரகங்களுக்க கட்டப்படுகின்றன பெரும் பெரும் கோவில் வீடுகள்!

உயிரில்லாத எலும்புக்கும், சாம்பலுக்கும் பணச் செலவு செய்யும் அவர்கள்- பட்டினி கிடக்கும் மனிதனுக்கு அந்த உதவியைச் செய்தால், அவனும் நன்மை அடைவான்; நன்றியும் காட்டுவான்.

செய்ய வேண்டியதைச் செய்யாமல், கோவில் கல்லுக்கு, பூமி தானம் கொடுக்கின்றனர். கோபுரத்தின் தலையிலே தங்கக் கலசம் வைக்கின்றனர். தேய்ந்த மதியுள்ள திருக்கூட்டத்தினர்!

மிதமிஞ்சிய திறமை படைத்தவர்களை, நம் நாட்டு மக்கள், மனிதர்களாக மதிப்பதில்லை. அவர்களை தெய்வங்களாக மாற்றிவிடுகிறார்கள்.

வீரர்களுக்கு நடுகல் நட்டால்; அது கொஞ்ச நாளில், கோவில் விக்ரகமாகக் கருதப்பட்டுவிடுகிறது.

வீரனை வீரன் என்று கருதினால்தான். வாள் பிடிக்க வேண்டும் என்ற ஆயுத உணர்ச்சி ஏற்படமுடியும். வீரனை தெய்வமாக மதிக்கத் தொடங்கிவிட்டால். அப்போது நமக்கு வீரம் வராது-கற்பூரம் ஏற்றி, கையெடுத்துக் கும்பிடும், வழக்கந்தான் வளரும்.

இவைகளை எல்லாம் நினைக்கும் போது, எனக்கு ஒரு சந்தேகம் பிறக்கிறது.

புத்தரின் பல்லுக்காக, கல்லுக் கோவில் ஏற்பட்டது போல, எனது எலும்புகளுக்கும் எங்கே கோவில் ஏற்பட்டுவிடுமோ என்பதுதான் அது!

எனது சாம்பலுக்கு அருகிலே நிற்கும் நீ, ஆஸ்திகனாக இருந்தால்-உன்னை ஒன்று கேட்கிறேன்.

மறுபிறப்பு இருக்கிறது என்கிறாயே- இருக்க முடியுமா அப்படி ஒன்று?

கறந்தபால்-காம்புக்குத் தாவுமா? உதிர்ந்தகாய்-மரத்திலே மறுபடியும், ஒட்டுவது உண்டா? என்று கேட்டால், என்ன பதில் தரமுடியும், எதிர்க்கின்ற உன்னால்?

உலக மனிதனே!

நினைத்துப் பார்த்தால். நிச்சயமாக நான். இப்போது இறந்து போக வேண்டியதே இல்லை. இந்த உடல் யௌவனத்தோடு, இன்னும் சிலகாலம் இருந்து பிறகு ஒருநாள், நான் பிரேதமாகலாம். ஆனால், நான் அதை விரும்பவில்லை. நாளையே தீக்குளிக்கத் தீர்மானித்துவிட்டேன்.

மஹமத்கான் மரணமடைந்தார்-எனது நாயகனுக்காக. எனது நாயகன் உயிர்விட்டார்-சொந்த நாட்டுக்காக. நான் இறக்கப் போகிறேன்-என் கணவனுக்காக.

"பழம் விழுந்து விட்டால், அதற்காக; அதன் பக்கத்திலே இருக்கும், இலையுமா உதிரவேண்டும்?" என்று கேட்கலாம்.

வாடாத வாலிபம்!

வாழவேண்டிய காலம்-இப்படி ஒருவர்.

தங்கச் செங்கோலைத் தாங்கி,

சிங்க பீடத்திலே உட்காருங்கள்.

நாசப் படுத்தத் துடிக்கும்

நவாப்புகளுக்கு, நாங்கள்

பதில் சொல்லுகிறோம், வாய்

வெளுத்த வாட்களைக் கொண்டு

-இதுபோலப் பலர்."

"அம்மையே! எங்கள் அரசியே! இறப்பதற்கு, உங்களை விடவே மாட்டோம்" என்று, எரியும் நெருப்பை அணைத்துவிடலாம் சிலர்.

அணைத்தால் தான் என்ன? மரணமாவதற்கு வேறு மார்க்கமா கிடையாது?

ஒரு பெண் நினைத்தால், மயிரிழையைக்கூட, தூக்குக் கயிறாக உபயோகித்து விடமுடியும்!

நஞ்சு உண்டு. நாசமாகலாம்-அந்த மரணத்தினால், கீர்த்தி கிடைக்காது.

குற்றங்களால், இறந்து கொள்ளலாம்-அந்த மூச்சுமுடிவை. உலகம் நினைவிலே வைத்துக் கொள்ளாது.

ஒன்றினால் இறப்பதைவிட, ஒன்றுக்காக இறந்து கொள்வதுதான்-பெருமை. இந்த மாதிரி சாவுக்குத்தான்-சரித்திரம் கிடைக்கும்.

"இவ்வளவுக்கும் காரணம் போர்தான். அது மட்டும் ஏற்படாமல் இருந்திருந்தால்- அரசருக்கும் அரசிக்கும், இப்படி முடிவு வந்திருக்குமா? என்று உங்களிலே பலர், என் பிரேதத்தின் பக்கத்திலே நின்று பேசிக் கொள்ளலாம்.

இந்த உலகம் அமைதியோடு இருக்கும். கிண்ணத்தின் தண்ணீர் போன்றதல்ல. அலையோடு அலை இடித்துக் கொண்டே இருக்கும்-கடல் போன்றது.

இங்கே, நீதியும் அநீதியும்-சேர்த்தே வைக்கப்பட்டிருக்கிறது. ஆடுகளின் பின்னால் கத்திகள் போய்க்கொண்டே இருக்கின்றன.

உண்மை ஒரு பக்கம் ஒதுங்க-பொய்யே. பிரபலமாகிக் கொண்டு வருகிறது.

இப்படி இருந்துவரும் உலகில். எப்படி எதிர்பார்க்க முடியும். போர் ஏற்படாது என்று?

அதிலும்-

வெள்ளத்திலே மிதக்கும் படகுக்கும்; வேந்தன் சிம்மாசனத்துக்கும்; எந்தச் சமயத்திலும் ஆபத்து இருந்து கொண்டுதானே இருக்கும்;

பொதுமனிதனே!

எனது மணாளரின் மகுடத்தை வைத்து. மற்றொரு மனிதனை மன்னனாக்க வேண்டாம். முடி ஆட்சிக்கு நாளையோடு மூடு விழா நடக்கட்டும்.

எனது ஆபரணப் பெட்டி.

கோட்டை மதில்களைப் போலத் திறந்துதான் இருக்கிறது. நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் சொந்தக் கரங்களாலேயே, அதிலிருப்பவைகளை எடுத்துக் கொள்ளட்டும்! செஞ்சிமா நகரத்தின் செல்வம்; எல்லோருக்கும் பொதுவாகட்டும்! மக்களாட்சி அடையாளம் காட்டட்டும்!

இப்படிக்கு

அழுகையால் நனையும்

இராணிபாய்

# 2

குழந்தை பெற்ற கோதைக்கு

நீ அழகில் குறைந்தவளாக இருக்கலாம். அந்தஸ்து இல்லவே இல்லாதவளாகக் கூட இருக்கலாம். ஆனால் உன்னோடு ஒப்பிடும் போது, எனது வாழ்வு, எவ்வளவோ நஷ்டமுடையது- கஷ்டமுடையது!

என்னைப் போல, உனது வாலிபம் வீணாகிவிடவில்லை- திருமணமாகியும்! உதடுகள் உபயோகப்படாமல் போகவில்லை- கணவன் இருந்தும்!

விந்து ஈரத்திலே பிறந்த குழந்தையை முத்தமிட்டு மகிழ்வது இருக்கட்டும்; அதற்கு முன் ஆரம்பமாக வேண்டிய கணவன் மனைவி முத்தம் இருக்கிறதே, அதாவது கிடைத்ததா எனக்கு? இல்லை!

-படராத முல்லை!

அது நான் தான்.

பழகாத படுக்கை!

பதிக்காத-உதடு!

புசிக்காத-இளமை!

புண்ணான-நாட்கள்!

-இதெல்லாம் யாருக்கு? எனக்கு!

எனது அங்கத்தை ஆபரணம் தொட்டிருக்கிறது. அருவி தொட்டிருக்கிறது. மஞ்சமும் அதிலே மலராது கிடக்கும், மொட்டுக்களும் தொட்டிருக்கின்றன. ஆனால், தொட வேண்டிய அவர்மட்டும், தொடவே இல்லை.

கண்ணே- என்று, அவர் என்னை அழைக்கவுமில்லை. கரும்பே- என்று, நான் அவரை நெருங்கவுமில்லை.

பச்சிலை மெத்தையிலே படுத்திருக்கிறோம்! நானும் கணவனுமல்ல, நானும்-மான்குட்டியும்!

அந்த மெத்தையிலே அவர் இருந்தால் அல்லவா, எனது சயனத்திலே சுகம் இருக்கும்.

ராஜகிரியில்-அவரது விசாரணை நடக்கும். ரத்ன கிரியில்- மந்திராலோசனை சபை கூட்டுவார். ஆனால் எனது அந்தப்புரத்துக்கு மட்டும் அவர் வரமாட்டார்.

அவரும் நானும் அருகிலே இருந்திருக்கிறோம். ஆனால் பேசியதில்லை! பேசக்கூடாதாம்!

எதிரும் எதிருமாக இருந்திருக்கிறோம் எத்தனையோ சந்தர்ப்பங்களில்! இருந்தும், சோதிமுகங்கள் சந்தித்துக் கொண்டதில்லை-சந்திக்க முடியவில்லை.

582084

894.811171
SUR

இந்தத் தடை ஏன்? திரைதான் எதற்கு?

"உங்கள் மகனும் மருமகளும்-மூன்று ஆண்டுகள் முகதரிசனம் செய்யக்கூடாது. தோஷம் இருக்கிறது" என்று சோதிடன் சொல்லிவிட்டானாம்! அதற்காகத்தான். இந்தத் திரையும் தீண்டாமையும்!

"அவரோடு, தேரிலேறி, தேசமாள வேண்டும்" என்று நினைத்தேன்-நிறைவேறவில்லை.

எனக்கு ஒரு மகன் பிறந்து, அவன் இந்த முழு உலகத்துக்குமே முடி அரசனாக வேண்டும்" என்ற நினைவை வளர்த்தேன். அது- கடைசியில், கல்மீது விழுந்த கண்ணாடியாகிவிட்டது.

இந்த ஆசை நிறைவேறாமல் போனதும், ஒரு விதத்திலே நல்லதுதான்.

ஒரு நாட்டுக்கு அதிபதியான அரசனே, இவ்வளவு ஆட்டிவைக்கும் போது, எல்லா நாடுகளுக்கும் ஒருவனே தலைவனானால்- சுற்றும் இந்த பூமியை. அவன் சமாதானமாகவா

ANNA CENTENARY LIBRARY
15 SEP 2016
CHENNAI-85

வைத்திருப்பான். தனது அதிகார வேகத்தால், மக்களை, மழைபோல அல்லவா அழவைத்துக் கொண்டே இருப்பான்!

அரசருக்கு எனது கரத்தினால் அமுது ஊட்ட வேண்டும் என்று இருந்தேன். ஆனால், என் மடி மீது அவர் பிரேதத்தைப் படுக்கவைத்து, கண்ணீரையும் தண்ணீரையும் ஊற்றிக் கழுவத்தான் பயன்பட்டது எனது கரம்.

மாலையிட்ட கரம்-மகரயாழ் மீட்டிய கரம். கன்னத்திலே நீந்தும் கண்ணீரை வழித்து எறியவும்; மரண உடையை, என்னிடமே எடுத்துக் கொடுக்கவுந்தான் இப்போது உதவுகிறது.

இதெல்லாம் போகட்டும். சென்ற வெள்ளிக்கிழமை. போருக்கு அவர் புறப்படாது இருந்திருந்தால்- அன்று இரவோடு எங்கள் தோஷமே தொலைந்திருக்கும்-மாமனாரின் நம்பிக்கைப்படி!

அடுத்த நாள் திரை என்னைத்தடுத்திருக்காது. பாராளும் எனது புருஷரைப் பார்த்திருப்பேன். பேசி இருப்பேன். பழத்துண்டு உதடுகளை பருகி இருப்பேன். அடையாத ஆனந்தம் அடைந்திருப்பேன்- அந்த ஒரு நாள் ஒரு பொழுதாவது; அவரோடு! அதற்கும், நான் கொடுத்து வைக்கவில்லை.

நினைவில்லாமல்-பிறந்தேன்!

நேரத்தால்-வாலிபமடைந்தேன்!

திருமணத்தால்-ஒன்றானேன்!

தீயினால் நாளை-சாகப்போகிறேன்!

இப்படிக்கு

எரியப்போகும்

இராணிபாய்

# 3

பாறைகளே!

பச்சை மரங்களே! -உங்களுக்கு-

நான் போய் வருகிறேன்-திரும்பி இதே ராணி ரூபத்தில் நான் வரமாட்டேன். வெண் சாம்பலாக மாறி உங்கள் வேரடியிலே வந்து சேருவேன்!

எனது கூந்தலுக்கு மலர் கொடுத்த கொடிக்கூட்டமே! உங்களிடம் நான் விடைபெற்றுக் கொள்கிறேன்.

அரும்புகளே!

அழுதுவிடாதீர்கள்-வாய்திறந்து எனது மரணத்துக்காக.

இறந்து போவது-உலகத்துக்குப் புதிய சம்பவமும் அல்ல. வேண்டாததும் அல்ல. நினைத்துப்பார்த்தால்- நீர் சிந்தவேண்டிய நிகழ்ச்சியும் அல்ல அது!

மரணம் என்பது- தன்னை அஃறிணைப் பொருளாக மாற்றிக் கொள்ளும் நடத்தை; அவ்வளவுதான்!

சதை உடல் சாம்பலாகி, அது மறுபடியும், வெவ்வேறு பொருளாக மாறிக்கொண்டே இருக்கிறது. இதுதானே தவிர. இந்த ராணிபாய் இல்லாமலே போய் விடுவதல்ல.

நெருப்பு எனக்காகக் காத்துக் கொண்டே இருக்கும். அதனால் எனது எழுத்துக்களை, இதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

இப்படிக்கு

ஒடிந்து வரும் கொம்பு

இராணிபாய்

# தொடாத வாலிபம்

## காட்சி – 1

இடம் :– தாமரைக்குளம்
இருப்பவர்கள் :– தாசிமுத்து, தாண்டவன்
நேரம் :– சிவந்த உதயம்

[குளிக்கும் துறை. அந்த நீர்ப்பகுதியில், வாய் பிரிந்த வண்ணத் தாமரைகள். முகம் சுருங்கிய மொட்டுகள். படுத்திருக்கும் வட்ட இலைகள்–இலைகளின் இடையிலே ஒரு கூந்தல் பரப்பு. அது அசைகிறது. மூழ்கி இருந்த முத்துவின் முகம், நிமிர்கிறது நீரின்மேல். அப்போது, அருகிலே இருந்த அரும்பின் வாய் அவிழ்கிறது. தண்ணீரிலே மிதக்கும் அவளது எண்ணெய்க்கூந்தலை, மீன்கள் முகர்ந்து பார்க்கின்றன. வானவில் வளைவு போல, தண்ணீரைக் கொப்பளித்துத் துப்பித் துரத்துகிறாள். மொய்க்கும் மீன் கூட்டத்தை. பிறகு. தன் சேலையைத் துவைக்கிறாள். குளத்தின் மேற்குத் திசையிலே. துடிக்கும் இளமை படைத்த தாண்டவன். பாடிக்கொண்டே, தென்னை மரத் தெப்பத்திலிருந்தபடி. தாமரை மலர்களைக் கொய்கிறான். தித்திக்கும் கீதம் பிறக்கும் திசை நோக்கித் திரும்புகிறாள் முத்து. அப்போது, அவன் பறித்த மலர்களில் ஒன்று, முத்துவின் அருகிலே மிதந்து வருகிறது. அவளது பித்தளைக் குடம், தாண்டவன் பக்கம் மிதந்து போகிறது. அதனைப் பார்த்த அவள், அவனை நோக்கி]

தாசிமுத்து : தயவு செய்து அந்தக்குடத்தை இப்படி எடுத்துக் கொடுங்களேன்.

தாண்டவன் : அதோ ஒன்னைத் தேடி வருதே ஒரு தாமரை. அதை இப்படி எடுத்து எறியேன்.

முத்து : நீங்கள். கரைக்குத்தானே வர்வேண்டும். அப்போது. நீங்களே எடுத்துக்கொள்ளலாமே இந்தமலரை.

தாண்டவன் : அதுபோல, நீயே நீந்தி வந்து, எடுத்துக்கலாமே இந்தக் குடத்தை.

முத்து : எனக்கு நீந்தத் தெரியாதே!

தாண்டவன் : தெரியாதா. பெண்களைப் புள்ளிமான் என்கிறார்கள். ஓடத் தெரியவேண்டாமா? அன்னம் என்கிறார்கள், நீந்தத் தெரியவேண்டாமா?

முத்து : தெரியத்தான் வேண்டும். ஆனால் தெரியவில்லை. காரணம்- அந்த தைரியம் இல்லா இந்த நூற்றாண் டிலே பிறந்து விட்டேன் நான். கட்டுமரம் கைவிட் டாலும்; கப்பல் கவிழ்த்தாலும்; ஓடமும் தெப்பமும் உதறித் தள்ளினாலும்-அஞ்சாது-அலறாது-அழாது-அதிர்ச்சி அடையாது-ஆடிவரும் அலை நீரை, நீந் திப்பிளந்து கொண்டு. கரை வந்து சேரும் கன்னி யர்கள் இருந்தனர். இந்நாட்டிலே ஒரு காலத்தில். ஆழமான கடலில், ஆண்களோடு மூச்சடக்கி முத்து எடுத்த-பெண் இனம்; கடலுக்குப் பொன் கொடுக் கும் காவிரியிலே, மீனைப்போல நீந்தித் திரிந்து, நீராடிய பெண் இனம்; எத்தர்களை, பித்தர்களை. எதிர்த்து வரும் விரோதிகளை வெட்டிக் குவித்துப். பிரேதப் போர் போட்டு வரப்புறப்பட்ட பெண் இனம் இன்று. கடல் ஓசை கேட்டு, காதைப் பொத்திக் கொள்கிறது. அலை நீரைக் கண்டு, அச்சம் அடை கிறது. மின்னும் வாளைக் கண்டு, கண்ணை மூடிக் கொள்கிறது.

[என்று கூறிக்கொண்டிருக்கையில், அருகிலே தாண்டவன் வந்து, அவளிடம் குடத்தைக் கொடுக்கிறான். அவனது கையின் மேல் கை வைத்து வாங்குகிறாள் குடத்தை. அப்போது, ஆண் கண்கள்,

அவள் மீது; பெண் கண்கள் அவன் மீது; இருவருக்கும் ஆசை; இரு இதயங்களிலும், வெப்பம்–இந்த உணர்ச்சி ஏற்படுகிறது. அவனைப் பார்த்து அவள்]

முத்து : நீங்கள் யார்?

தாண்டவன் : நான் ஒரு ஏழை. ஒவ்வொரு நாளும், கண்ணீரில், கை கழுவிக்கொண்டிருப்பவன்.

முத்து : நீங்கள் இருக்குமிடம்?

தாண்டவன் : கோவில்.

முத்து : என்ன கோவிலா! அப்போது. நீங்கள் என்ன கடவுளா, கோவிலில் இருப்பதற்கு?

தாண்டவன் : ஏன். கோவிலிலே கடவுளுன்னு வச்சிருக்காங்களே கல்லு; அது மட்டுந்தான் அங்கே இருக்குதா? வௌவாக் கூட்டம், வாகனம் அதெல்லாம் இல்லியா? அது போல நானும் இருக்கேன். அந்தக் காலத்திலே இருந்தவுங்க அதிகமா செலவுபண்ணி இந்த அழகான கோயில்களை கட்டி வச்சிருக்காங்க. இந்த எடங்களை எல்லாம், பள்ளிக்கூடம், பஞ்சாயத்து, நீதி மன்றம், இவைகளுக்குப் பயன்படுத்தலாம்.இது தெரியாமே அரசாங்கம். இந்த எடத்தை எல்லாம் அனாவசியமா அடைச்சு வச்சிருக்கு. சரி, நேரமாவுது போவணும். குருக்கள் ஐயா கோவிச்சுக்குவாரு.

முத்து : யாரு? குருமூர்த்தி ஐயரா?

தாண்டவன் : ஆமாம்.

முத்து : ஓஹோ! அன்று அவர் என்னிடம் சொன்னாரே. அது நீங்கள் தானா?

தாண்டவன் : என்னைப்பத்தி என்ன சொன்னாரு?

முத்து : நீங்கள் மிகவும் நன்றாகப் பாடுவதாகச் சொன்னார். அதை என் காதுகளே இன்று அறிந்து கொண்டன. ஹும்.... நீங்கள் வீடு வரைக்கும் வரணும்.

தாண்டவன் : ஏன், ஒங்க வீட்லே வளர்ற, தாமரைப் பூவைப் பறிக்கணுமா?

முத்து : வீடு என்ன குளமா? வீட்லே, வளரும் தாமரை ஏது?

தாண்டவன் : ஏன் இல்லே... வீட்டின் தாமரை...பெண்கள்தானே!... ஆமாம் ஒன் பேரு?

முத்து : முத்து.

தாண்டவன் : ஒன் சிரிப்பு கூட முத்து தான். ஒன் வீடு?

முத்து : சந்தன வீதியில் இருக்கிறது.

தாண்டவன் : அப்போ, நான் வந்தா, வாசனைக்குப் பஞ்சமே இருக்காது.

முத்து : அது மட்டுமா? என் வரவேற்புக்கும் பஞ்சமிருக்காது. வாருங்கள்... வீட்டிலே. உங்கள் குரலுக்கு ஏற்ற விரல் வாத்தியம்;

இசையை ரசிக்க, என் அன்னை; உங்களை உபசரிக்க, நான்...நம் இருவரையும் மறைக்க இருட்டு... இத்தனையும்.....

*[என்று கூறிக்கொண்டிருக்கும் போது. கொஞ்ச தூரத்திலே, அவளது தோழிகள், குளக்கரை நோக்கி நீராட வருவது கண்டு]*

அதோ என் தோழிகள் வருகின்றனர்.

தாண்டவன் : சரி, இரவு சந்திக்கிறேன்.

*[என்று கூறி, ஒரு தாமரை மலரை அவளிடம் தந்து, அவன் போகிறான். முத்து அவனைப் பார்த்துக் கொண்டே நிற்கிறாள். தாண்டவன், அவளைப் பார்த்துக்கொண்டே போகிறான்]*

## காட்சி – 2

**இடம்: சிவன் கோவில்**
**இருப்பவர்கள்: குருக்கள், தாண்டவன், பக்தர்கள்**
**நேரம் : மயங்கும் அந்தி**

**நிகழ்ச்சி:**

*[குருக்கள் மந்திரம் சொல்லுகிறார். தீபாராதனை காட்டுகிறார். பக்தர்கள் கும்பிடுகின்றனர். கன்னத்தில் போட்டுக் கொள்கின்றனர். ஆண் பக்தர்கள் ஏந்திய கையை மட்டும் பார்த்தபடி, தீர்த்தம் தருகிறார் குருக்கள். ஆனால். பெண் பக்தைகளின், கை–மெய்–முகம்–மார்பு–மணி விழி–முத்துச்சிரிப்பு–இவை அனைத்தையும் பார்த்தபடி, ரசித்தபடி, தீர்த்தம் தருகிறார். பக்கத்திலுள்ள, பஜகோவிந்தச் செட்டியாரின் பையனுக்குத் தீர்த்தம் கொடுக்க, அதை அவன் வாங்காமல், குருக்களைப் பார்த்து]*

பையன் : எனக்கு தாகம் இல்லெ. வேண்டாம்.

*[என்று சொல்ல, இதைக் கேட்டு. குருக்கள் செட்டியாரைப் பார்த்து]*

குருக்கள் : பஜகோவிந்தச் செட்டியாரே, என்ன, பையன் இப் படிப் பேசறான். காலிப்பசங்க நடத்தற கழகத்துப் பக்கமா போறானா இவன்? இல்லெ, நீர் தான் இப் படி வளர்க்கிறீரா? ஓய், கோவில் இல்லே; கடவுள் இல்லே; அது இல்லே; இது இல்லேன்னு; எங்கப் பாத்தாலும் நாஸ்திக சப்தம் பரவிண்டு வருதுங்கா ணும். அந்தக் கெட்டகொள்கையெல்லாம் ஒட்டா மே... பையனெ ஒழுங்கா பார்த்துக்கும். நான் தெய்வ தீர்த்தம் தர்றேன். இதெ. வெறும் தண்ணீர்னு நெனச்சிண்டு வேண்டாங்கறானே! நீர் இதன் மகத்துவத்தைப் பற்றி, பையனுக்கு சொல்லி வைத்திருக்க வேண்டாமோ?

*[என்று சொல்லிக் கொண்டிருக்கும் சமயம், பையன், அவ்விடம் விட்டு அகன்று, மடப்பள்ளிக்குப் பக்கத்திலே மாலை தொடுத்துக் கொண்டிருக்கும் தாண்டவனிடம் ஓடி வந்து. அவன்*

தொடுப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். பிறகு தாண்டவனைப் பார்த்து]

பையன் : இது என்ன மாலை?

தாண்டவன் : ஆத்திமாலை.

பையன் : சோழனுக்கு போட்றத்துக்கா?

தாண்டவன் : இல்லே, இது. இங்கே இருக்கிற கல்லுசாமி கழுத்துல போட்றத்துக்கு.

பையன் : அடெ, மாலையெ, நீங்க, கல்லுக்கா போட்றிங்க. எங்கக்கா, பூவெ தலையிலேல்ல வச்சுக்குது. [என்று கூறி, தாண்டவனைப் பார்த்து] அண்ணே, இந்தப் பூவுலே. எனக்கு ஒண்ணு தர்றியா?

[என்று கேட்க, தாண்டவன் பையனிடம் ஒரு பூவைக் கொடுக்கிறான். அவன், அதை வாங்கிக் கொண்டு போக, அப்போது குருக்கள் தாண்டவனிடம் வருகிறார். அவன் அவரைப்பார்த்து]

தாண்டவன் : சாமி, மாலையெல்லாம் கட்டி முடிச்சுட்டேன்.

குருக்கள் : சரி, கன்னான் ஆத்திலே இருக்கானா?

தாண்டவன் : ஏன் சாமி அவனைத் தேட்றிங்க?

குருக்கள் : நாக்கு அறுந்து போச்சுடா?

தாண்டவன் : என்ன! நாக்கு அறுந்து போச்சுதா? அதுக்கு வைத்தியரை வரவழைக்காமெ. கன்னான் இருக்கானான்னு கேக்கறிங்களே!

குருக்கள் : டேய்! அறுந்து போனது, மனுஷன் நாக்கு இல்லேடா. நம்ம கோவில். மணியின் நாக்கு.

தாண்டவன் : ஐயையோ! கோயில் மணியின் நாக்கா அறுந்து போச்சு. சாமி! இதெக் கேட்டதும் எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு.

குருக்கள் : ஏண்டா?

தாண்டவன் : பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்னு சொல்லுவாங்களே. அதுபோல, இன்னைக்கு மணி, நாளைக்கு மதில். அப்புறம் மண்டபம். முடிவிலே மூலஸ்தானம்... இப்படி, நம்ப கடவுளுக்கு கஷ்ட காலம் ஏறபடுமோன்னு....

குருக்கள் : ச்சீ! கழுதெ. ஆண்டவன் எல்லோரையும் காப்பாத் தறவர். அவருக்காடா ஆபத்து வரும்.

தாண்டவன் : என்னா சாமி. இப்படி சொல்லிட்டிங்க. ஏழெட்டு மாசத்துக்கு முந்தி, எலந்தங்குடி பெருமாள் கோவில்லே இடி விழுந்ததாமே! நேத்து கூட எங்கே யோ, ஐயனார் செலைய தள்ளிட்டு. அவர் அடியிலே இருந்த தங்கத் தகட்டெ, தட்டிகிட்டு பொயிட்டானாம். இதெல்லாம் என்னா சாமி. ஆண்டவனுக்கு வந்த ஆபத்து இல்லியா?

குருக்கள் : டேய், இதெல்லாம் சாமி இல்லேன்னு சொல்றவன்க திரிச்சி உட்ற சரடு. நீ இதெ நெஜம்னு நம்பிடாதே.

[என்று கூறி பிரசாதத்தை அவனிடம் கொடுக்க]

தாண்டவன் : இருங்க சாமி இதோ வந்துட்டேன்.[என்று சொல்லி, பக்கத்திலே நின்று கொண்டிருக்கும் பன்னீர் மரத் தில், இரண்டு இலைகளைப் பறித்துக் கொண்டு வந்து] குடுங்க சாமி. [என்று இலையை நீட்ட, குருக்கள், இலையில் சர்க்கரைப் பொங்கலை வைக்கிறார்] அடெ! இன்னெக்கு சர்க்கரைப் பொங் கலா சாமி.

குருக்கள் : ஆமாண்டா, ஈஸ்வரன் எத்தனை நாளைக்கு தான் வெண் பொங்கலே சாப்புடுவார். அதான் இன்னிக்கு மாத்தினேன்.

தாண்டவன் : ஏன் சாமி. தினம். சமஸ்கிருதத்திலேயே மந்திரம் சொல்லிகிட்டு வர்றிங்களே. இந்த ஆகாரத்தெ மாத்துனமாதிரி, அதெ ஒரு நாளைக்கு மாத்தி, தமிழிலே சொல்லப்படாதா சாமி?

குருக்கள் : அடே முண்டம். சமஸ்கிருதம். தேவ பாஷை.

அதிலே மந்திரம் சொன்னால்தான், கடவுள் காதிலே விழும். மந்திரத்தெ, தமிழிலேல்லாம் சொல்லப் படாதுடா.

தாண்டவன் : போங்க சாமி. மந்திரத்தெ, தமிழிலே சொல்லப் படாதாம்...எங்களுக்கு ஒதவாத மந்திரம். இந்த நாட்டிலே ஏன் சாமி இருக்கணும்? இருக்கட்டும்... என்னைக்காவது ஒரு நாளைக்கு... இந்த தேவ பாஷையெ... அது பொறந்த எடத்துக்கே போக வச்சுட்றோம்.

குருக்கள் : தாண்டவா, உனக்கு எழுத்தறிவு இல்லையானாலும், இயற்கை அறிவு அதிகம்.

*[என்று கூறி, கீழே விழுந்துவிட்ட கோவில் சாவிக்கொத்தை, எடுத்து மடியிலே செருகிக் கொண்டு. புறப்படுகிறார். பிறகு தாண்டவன், தன் பக்கத்திலே நின்று வாலை ஆட்டிக் கொண்டிருக்கும் நாய்க்குட்டிக்கும் கொஞ்சம் சோறு தந்து, அவனும் சாப்பிடுகிறான்.]*

## காட்சி – 3

**இடம்: தாசி வீடு**

**இருப்பவர்கள்: முத்து, மரகதம், மாணிக்கம், தாண்டவன்**

**நேரம் :சுடாத இரவு**

**நிகழ்ச்சி:**

*[கூடத்திலே இருக்கும் நிர்வாணச் சிலையைத் துடைத்துக் கொண்டிருக்கிறாள் வேலைக்காரி மரகதம். அப்போது, முத்துவின் தாய் மாணிக்கம். தனது நரைத்த கூந்தலை, தந்தச் சீப்பினால் வாரி விட்டுக் கொண்டே, கூடத்துக்கு வந்து, மரகதத்தைப் பார்த்து]*

மாணிக்கம் : ஏண்டி மரகதம்-முத்து எங்கே?

மரகதம் : சின்னம்மா சிங்காரிச்சுக்கிறாங்க.

மாணிக்கம் : சரி, யாழ்ப்பாணத்திலே இருந்து வரவழச்சமே, அந்த யாழைப் போயி எடுத்தா. [என்று சொல்ல, மரகதம் யாழை எடுத்துவரப் போகிறாள். அப்போது]

அம்மா! அம்மா! [என்று மகளைக் கூப்பிட முத்து அறையிலிருந்தபடி]

முத்து : இதோ...வர்றேம்மா.

[என்று, இடை, வளைய; உடை கலைய; சடை அலைய; இட்ட அடி, எடுத்த அடி இரண்டும் சிவந்து போக; ஒட்டி இருக்கும் சதங்கை ஓசைதர, நடந்து கூடத்துக்கு வருகிறாள் முத்து. அப்போது, யாழை எடுத்துக் கொண்டு மரகதம் அங்கே வந்தபடி தாய்க்கிழவி மாணிக்கத்தைப் பார்த்து]

மரகதம் : ஏம்மா, இராவணன் யாழுங்கிறது இதானே?

மாணிக்கம் : நீ சொல்றது என்னடி புதுசா இருக்கு! சகோட யாழ்; செங்கோட்டி யாழ்; பேரியாழ்; மகரயாழ்ன்னு தான் இருக்கே தவிர; இராவணன் யாழுன்னுகெடை யாதே. அப்படின்னு ஒண்ணு இருக்கவும் முடியாது!

முத்து : இருக்க முடியாதா? நாரத யாழ் இருக்கும் போது. இராவணன் யாழ் ஏன் இருக்கக்கூடாது? இருந்திருக்க முடியாது?

மரகதம் : இருந்திருக்கலாம்.

முத்து : இடையிலே வந்த ஆடு ஓட்டிகள். ஏதாவது செய் திருக்க வேண்டும். ஏன் இருக்காதா? கையிலே வாள்; கருத்திலே பகுத்தறிவு; கனவிலும் இன உணர்ச்சி... விண்ணிலே கீர்த்தி... விரோதிகளுக்கு சிங்கக்குரல். கொடுத்து கொக்கரித்து அதட்டி ஆட்சி செய்த அரசர்க்கரசனை... தென்னிலங்கை வேந்தனை- திராவிடத்தின் வீரனை...யோகத்தையும். யாகத்தையும் நுழைத்து, நரிச்செயலால் நாட்டை நாசமாக்கிய நயவஞ்சகரை, வேரறுத்து. அவர் உட லைக் கீறிக் கிழித்து-இலங்கையிலே இரத்தத் தடா கங்கள் ஏற்படுத்திய நம் இரண்யன் உறவினனை- அரக்கன். அயோக்யன், அடாது செய் தவன். அக்ரமக்காரன்-என்று எழுதி வைத்த ஆரியக்கூட்டம்; மன்னரின் வாய்க்கு, மாதர்களை அபினியாக்கி, இந் நாட்டிலே தங்களுக்கு இடம் ஏற்படுத்திக் கொண்ட

கூட்டம்- குளிரும் கங்கை விட்டு, காவிரியிலே குளிக்க வந்த குள்ளநரிக்கூட்டம்-இலக்கியத்திலே இடைச்செருகல் செய்தது போல. இந்த விஷயத்திலும், ஏன் செய்திருக்கக்கூடாது. தங்கள் பரம்பரை சூழ்ச்சிகளை!

மாணிக்கம் : அது என்னமோம்மா. நீ. ஓலைச்சுவடி வாசிச்சவ. ஓங்கிட்டே. என்னாலே பேசமுடியுமா?... ஆமாம்... பரஞ்ஜோதிப் பண்டிதர் எழுதிக் குடுத்தாரே, அந்தப் பாட்டெ பாராயணம் பண்ணியா?

மரகதம் : அந்தப் பாட்டெ, சின்னம்மா நெருப்புலேல்ல போட்டுட்டாங்க.

மாணிக்கம் : என்ன! நெருப்புலயா போட்டுட்டே!

முத்து : ஆம்! அது பயனற்ற பாடல், பகுத்தறிவற்ற எண்ணம். பழங்காலப் பஞ்சாங்கம். ஒரே பகவான் விளம்பரம். அம்மையே, அப்பா... என்னும் அருட்பாக்கள், ஆழ்வார்களின் பிரபந்தம். அருட் புலம்பல். மூவர் பாடிய தேவாரம். முருகன் பிள்ளைத் தமிழ். திருப்புகழ். திருத்தாண்டகம்-இவைகள் இருப்பது போதாதா? இன்னுமா எழுதிக் குவிக்க வேண்டும்-யாரும் காணாத கடவுளைப் பற்றி? உடல் வளைத்து ஓடுகிறதே ஆறு-அது குறித்து அந்த காலத்துப் புலவர்கள் ஆற்று வரி பாடினார்களே. அது போல... இன்று வாழும் புலவர்கள். இயற்கையைப் பற்றி எழுதக்கூடாதா? நாட்டுக்குப் பயன்படும் நல்ல கருத்துக்களைத் தீட்டித்தரக்கூடாதா? அடிக்கும் முரசையும் கடிக்கும் பாம்பையும் குறித்து அம்மானை எழுதினால்... என்னைப் பற்றி ஏன் எழுதவில்லை என்று, ஆண்டவன் ஆத்திரப்படுவாரா? இல்லை. நாத்தீகத்தைப் பற்றி எழுதிவிட்டால், எழுதிய புலவரை ஆஸ்திகரின் சாபம் வந்து அழித்துவிடுமா? இல்லாவிட்டால் எழுதியவரின் கைவிரல் தான் இல்லாமல் போய்விடுமா? கேட்கிறேன்? கலிங்கத்துப் பரணி-வீரத்துக்கு அழைத்துச்

செல்லுகிறது- நம்மை! காமத்துப்பால்-இன்பக் கட்டிலுக்கு அழைத்துச் செல்லுகிறது- காதலரை. ஆனால் இந்த பரஞ்ஜோதி பண்டிதரின் பஜகோவிந்தப் பாடல்-பகுத்தறிவுப் பாதைக்கா அழைத்துச் செல்லுகிறது-புராண உலகத்துக்குப் போகாதே என்று நம்மை தடுத்து. பாட்டு எழுதிவிட்டாராம் பாட்டு! நம் நாட்டுக்கு வேண்டியது-பக்தியா-பகுத்தறிவா-இல்லை புரட்சியா?!

[என்று கூறிக்கொண்டிருக்கும் போது தாண்டவன், பூப்பொட்டலத்தோடு வருகிறான். அவனைக் கண்டதும்]

முத்து : வாருங்கள். வாருங்கள். [என்று அழைத்து, தன் தாயைப் பார்த்து] அம்மா, காலையில் பேசிக் கொண்டிருந்தோமே. அவர்தான் இவர்.

மாணிக்கம் : அப்படியா உக்காருங்க தம்பி.

[என்று சொல்ல, தாண்டவன் பக்கத்திலுள்ள ஆசனத்திலே அமர்கிறான். முத்து, தாண்டவனிடம் தன் தாயைக் காட்டி]

முத்து : இவர்கள் தான் என்தாய். மாணிக்கம் என்று பெயர். [மரகதத்தைக் காட்டி] இவள். வேலைக்காரி. பெயர்-மரகதம். எனது பெயர். முத்து என்பது. முன்பே தெரிந்தது தான் உங்களுக்கு.

தாண்டவன் : முத்து! மரகதம்! மாணிக்கம்! - இன்னும் பவளம், புஷ்பராகம், வைரம், வைடூரியம்ன்னு பேருள்ளவங்க இந்த வீட்லே இல்லியா?

முத்து : இந்தப் பெயர் உள்ள. மனிதர்கள் இல்லை. ஆனால், ஆபரணங்கள் இருக்கின்றன- இதோ என் கழுத்தில்!

மாணிக்கம்: தம்பி, நீங்க ரொம்ப நல்லா பாடுவிங்கன்னு, கேள்விப்பட்டேன். பாப்பாவும் சொன்னுது. ஏதாவது பாடுங்க.

தாண்டவன் : எனக்கு சங்கீதம் தெரியாதே!

மாணிக்கம் : இந்தக் காலத்திலே எல்லாருமே சங்கீதம் தெரிஞ்சிக்கிட்டுதானா பாட்றாங்க. இலக்கணம் தெரிஞ்சிக்கிட்டுதானா. கவி எழுதுறாங்க. பரவாயில்லே, சும்மா பாடுங்க. சங்கீதத்துக்கு மொதல்லே இனிமைதான் முக்கியம். அப்புறந்தான் அடுத்ததெல்லாம்.

*[என்று சொல்ல, தாண்டவன் பாடுகிறான். பாட்டு முடிந்ததும் மாணிக்கம், தாண்டவனைப் பார்த்து]*

மாணிக்கம் : தம்பி, எனக்கும், பாவட்டம் பூ போல, தலை நரைச்சிப் போச்சி. இதுவரையிலே, எவ்வளவோ பேரு பாடிக் கேட்டிருக்கேன். ஒங்க குரல் இனிமை போல, நான் கேட்டதே இல்லெ.

முத்து : கந்தர்வபூபதி-கானச்சக்கரவர்த்தி; என்று பட்டம் பெற்றவர்கள் எல்லாம்-

மரகதம் : இவரு பாடுனதெக் கேட்டிருந்தா, அவுங்களுக்குப் பட்டங்கிட்டமெல்லாம் போயி, சொந்தப்பேருதான் மிச்சப்படும்.

*[என்று கூற அப்போது, முத்து, மரகதத்தைப் பார்த்து]*

முத்து : சரி... நீ யாழை, அறைக்குள் எடுத்துக் கொண்டு போ.

மரகதம்: ஏம்மா! ஆடையில்லாத சிலை; ஆனந்தமான தென்றல்; முற்றத்திலே வந்து முகங்காட்டும் நிலா- இத்தனையும் இங்கிருக்க, அங்கு ஏன்?

முத்து : மிதந்து வரும் தென்றல். என் மேலாடையை விலக்கப்பார்க்கிறது.

மரகதம்: சரிதான், குறும்புக் காற்றுதான் போலிருக்கிறது!

*[என்று கூறி, யாழை எடுத்துக் கொண்டு போகிறாள். அப்போது முத்து, தாண்டவனைப் பார்த்து]*

முத்து : வாருங்கள்.

*[என்று கூப்பிட, தாண்டவன் எழுந்தபடி, பக்கத்திலே வைத்திருக்கும் பூப்பொட்டலத்தை எடுக்கிறான். முத்து அதைப் பார்த்து]*

முத்து : இது என்ன?

தாண்டவன் : சாதி மல்லிகை

முத்து : சாதி. மனிதனுக்கு தான் என்றால்-மலருக்குக் கூடவா! நல்ல வர்ணாசிரம நாடு இது.

*[என்று சொல்லிக்கொண்டே போகிறாள். தாண்டவனும் போகிறான். அப்போது எதிர் வீட்டு இந்திராணி, வாசலருகில் வந்தபடி]*

இந்திரா : அத்தெ.

*[என்று கூப்பிட. மாணிக்கம் வாசனைப் பாக்கை எடுத்து, வாயில் போட்டுக்கொண்டே]*

மாணிக்கம் : வா இந்திரா.

*[என்று அழைக்கிறாள். இந்திரா வந்து அவளிடம் உட்காருகிறாள்]*

## காட்சி – 4

**இடம்: தாசி வீட்டின் அறை**
**இருப்பவர்கள்: முத்து, தாண்டவன்**
**நேரம்: இடை இரவு**

**நிகழ்ச்சி:**

*[அறை முழுவதும் ஆனந்த லீலைப் படங்கள். தொங்கும் விளக்குகள். தலையைப் பாம்புக்கும், வாலை மீனுக்கும் காட்டும். விலாங்கு மீன் உருவமுள்ள காம்பு விளக்குகள். ஒரு புறத்திலே நீண்ட நிலைக்கண்ணாடி. அதை ஒட்டி, ஒரு வட்டப்பலகை. அதன் மீது வெள்ளித்தட்டு. தட்டிலே, பால்–பழவகை. பருகும் பானவகை. ஒரு பக்கத்திலே, பஞ்சியினால் செய்யப்பட்ட,*

கொக்கு. அதன் அருகில். புகைந்து கொண்டிருக்கும் ஊது வர்த்திகள். பட்டுக் கட்டிலின் ஒரு பக்கத்திலே முத்து. மறுபக்கத்திலே தாண்டவன். அவள் அருகிலே, மீட்டும் யாழ்; அவன் அருகிலே, சூட்டும் மலர்–தாண்டவன் பஞ்சுக் கொக்கின் பக்கத்திலே சென்று; அதனை வாயினால் ஊதுகிறான். அதைப்பார்த்து முத்து; முகச்சிரிப்பு காட்டியபடி]

முத்து : என்ன! பஞ்சுப் பறவைக்கு. உயிர் கொடுக்கின்றீர்களா?

[என்று கூறி; பக்கத்திலிருக்கும் பசுப்பாலை எடுத்துக் கொடுக்கிறாள்–குடிக்கிறான். பிறகு அவள். ஒரு கறுப்பு நூல் எடுத்து, அதை கட்டிலின் மேல் சட்டங்களில், கொடிக் கயிறு போலக் கட்டி; கருந்திராட்சைக் கனிகளை, அந்த நூலின் நீட்டம் முழுவதும் அடுக்கி, அடுக்கி முடிந்ததும் அவனை நோக்கி]

முத்து : இந்தக் கயிற்று திராட்சையைக் கையினால் தொடக்கூடாது. வாயாலேயே தின்ன வேண்டும்.

தாண்டவன் : ஏன்?

முத்து : தின்னுங்கள் பிறகு தெரியும்! அந்தப் பக்கம் உங்களுக்கு. இந்தப் பக்கம் எனக்கு.

[என்று கூற; தாண்டவன் ஒரு பக்கம்– முத்து ஒரு பக்கம்– இருந்து கருந்திராட்சையைக் கடித்துத் தின்னுகின்றனர். இரு பக்கங்களிலும் கனிகள் குறைந்து வருகின்றன. முகங்கள் நெருங்குகின்றன. இரு முகங்களுக்கும் இடையில் ஒரே ஒரு உருண்டைத் திராட்சை. முகங்கள் ஒட்டாமல் இருப்பதற்கு ஒரு தடை. அந்த ஒரு திராட்சைதான். அதுவும் ஆளுக்குப் பாதியாகிவிடுகிறது. அடுத்த கணம், இருவரது உதடுகளும் ஒன்றில் ஒன்று தடுக்கிக் கொள்ளுகின்றன. அப்போது, அவன்– அவள் இருவரும் சிலிர்ப்படைகின்றனர். அவளைப் பார்த்து அவன்]

தாண்டவன் : ஆகாயத்திலே நிலவு! இந்த அறையிலே விளக்கு! அங்கே சங்கீதப் பயிற்சி! இங்கே...

முத்து : இதை. தடுக்கிக் கொண்ட உதடுகளிடந்தான் கேட்க வேண்டும். அன்பே! சிலர் அழகாக மட்டும் இருப்பதுண்டு-எட்டிப் பழம் போல. நீங்கள். அழகாகவும் இனிப்பாகவும் இருக்கிறீர்கள்-மாங்கனியைப் போல. பகலில் நதியையும். இரவில் பெண்ணின் அழகையும் பார்க்க வேண்டும் என்பார்கள். காலையிலே என்னை, அப்படி உற்று ஊற்றுப் பார்த்தீர்களே குளக்கரையில். இப்போது பாருங்கள். பார்த்துக் கொண்டே இருங்கள்.

தாண்டவன் : நான் வெட்கப்படுகிறேன்.

முத்து : என்னைப் பார்க்கவா?

தாண்டவன் : இல்லே. ஒன்னெப் போல எனக்குப் பேசத் தெரியல்லியேன்னு. நான் மட்டும் நாலெழுத்து வாசிச்சிருந்தா.......

முத்து : பழகும் பதுமையே! அழகின் சிரிப்பே! மாலை மணியே! மதுரத் தமிழே! வெப்பமில்லாத இந்த இரவில், உன் வதனந்தான், வானத்துக்கு இரண்டாவது சந்திரன். உன் கன்னம் எனக்குக் கண்ணாடி. இதோ, மேல் நோக்கிப் போகிறதே ஊதுவர்த்திப் புகை; இது கீழ் நோக்கிப் பரவினால். இதுவே நம் அருகில் ஓடும் அருவி. நீ தென்னிலங்கை. நான் அதன் திரவியம்-என்று இப்படி எல்லாம் வர்ணித்திருப்பீர்கள்....

தாண்டவன் : ஆமாம்!

முத்து : கவலைப்படாதீர்கள். உங்களைப் பெருங்கல்விப் பண்டிதனாக்குகிறேன்-மாங்குடி மருதனாராகலாம். சொல்லின் செல்வராக்குகிறேன்-கோவூர்க் கிழாராகலாம். சங்கீதத்தின் சகல நுட்பங்களையும் சொல்லித் தருகிறேன்-நந்திர்வனாகலாம்.

*[என்று கூறி, எரியும் விளக்குகளின் ஒளியை ஒடுக்குகின்றாள் முத்து. ஒடுக்கிய விளக்குகளை ஊதுகின்றான் தாண்டவன்]*

## காட்சி – 5

இடம்: குருக்கள் வீடு

இருப்பவர்கள்: குருக்கள், அவர் மனைவி அம்புஜம், மகள் குஞ்சுமணி, தாண்டவன்.

நேரம்: விளக்கு இரவு.

**நிகழ்ச்சி:**

*[அறையில், கிளை விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அதன் அருகிலே அமர்ந்து, குஞ்சுமணி ஓலைச்சுவடியைப் புரட்டிப்படித்துக் கொண்டிருக்கிறாள் மௌனமாக. அம்புஜம். தாம்பாளத்திலே அரிசியைக் கொட்டிக் கொண்டிருக்கிறாள். அப்போது குருக்கள் குருமூர்த்தி ஐயர், கோவில் பிரசாதத்துடன் உள்ளே வந்து]*

குருக்கள் : இந்தா. இத வெச்சுக்கிட்டுக் குடிக்கத் தூத்தம் கொண்டா. [என்று பிரசாதத் தட்டை மனைவியிடம் கொடுக்க, மனைவி அதை எடுத்துக் கொண்டு போகிறாள். அப்போது குருக்கள்; குஞ்சுமணியைப் பார்த்து; என்னடி. சுவடியை அழகு பார்த்திண்டிருக்கே. எங்கே அதை இப்படிக் கொடு.[என்று சுவடியைக் கேட்க; கொடுக்கிறாள். குருக்கள். அதனைப் புரட்டிப் பார்த்து, பிறகு மகளைப் பார்த்து] பரமசிவனுக்கு, நீலகண்டன்னு ஏண்டி பேர் வந்தது? [என்று கேட்க, அப்போது தண்ணீரோடு வந்த அம்புஜம் அதைக் கேட்டு]

அம்புஜம் : சிவன் தலையிலே, சந்திரன் ஏன் இருக்கிறது? எமனுக்கு என்ன வாகனம்? மகாவிஷ்ணுவின் ஐந்தாவது அவதாரம் என்ன?... இப்படி, கவைக்கு ஒதவாத கேள்வி கேளுங்க. ஒங்க பொண்ணு ரொம்ப புத்திசாலி ஆயிடுவாள் [என்று கூறி, குஞ்சுமணியின் பக்கதிலே இருக்கும் சில ஓலைச்சுவடிகளைப் பார்த்து] அது என்ன சுவடி?

குஞ்சுமணி : இது; இளமை நிலையாமை. யாக்கை நிலையாமையைப் பற்றிச் சொல்லும் நாலடியார்

ஏடுகள். எங்களுக்கு இப்பொ இதைப் பாடமா வெச்சிருக்கா.

அம்புஜம் : சரிதான், திருக்குறள் காமத்துப் பாலைப் படிச்சா, பிள்ளைங்க மனசு கெட்டுப் போயிடும்னு சொல்றவா, இதை வாசிச்சா மட்டும். வாழ்க்கையிலே வெறுப்பு ஏற்படாதோ?

குருக்கள் : எல்லாம் பெரியவாளுக்குத் தெரியும். நீ வாயெ மூடிண்டிரு.

*[என்று கூறிக்கொண்டிருக்கும் சமயத்தில், கோவில் மணியைத் தூக்கிக் கொண்டு, தாண்டவன் வருகிறான். அவனைப் பார்த்து]*

குருக்கள் : என்னடா அப்ப போனவன், இந்நேரம் என்ன செய்தே?

தாண்டவன் : இப்பதான், மணியை சரிபண்ணிக் கொடுத்தான்.

குருக்கள் : சரி, வெச்சிட்டு போயி படுத்துக்கோ.

*[என்று சொல்ல, மணியை வைத்து விட்டு வெளியே வருகிறான். அம்புஜம் கதவை மூடுகிறாள். தாண்டவன் கொட்டிலில் ஒளித்து வைத்திருந்த பூப்பொட்டலத்தை எடுத்துக் கொண்டு, புறப்படுகிறான் தாசி வீட்டுக்கு]*

## காட்சி – 6

**இடம்: கிணற்றடி**
**இருப்பவர்கள்: பல பெண்கள்**
**நேரம்: காக்கை எழுப்பிய காலை**

**நிகழ்ச்சி:**

*[பெண்களில் சிலர், பாத்திரங்களைத் துலக்குகின்றனர். ஒருத்தி, சாயச் சேலையைப் பிழிந்து கொண்டிருக்கிறாள். அஞ்சுகம், தண்ணீர் இழுக்கிறாள் செம்பில், தண்ணீர் மிகவும் குறைவாக வருவது கண்டு]*

அஞ்சுகம் : ஹூம்! நம்ப நாட்லே; படிப்புக்கும், பகுத்தறிவுக்குந்தான் பஞ்சம்னா-குடிக்கிற பச்சத் தண்ணிக்குக்கூட, இப்படிப் பஞ்சம் வந்துட்டுதே!

அபரஞ்சி : இத்தோடெயா போவும். இனிமே. மனுஷாள் உசுரோட இருக்கிறத்துக்கே பஞ்சம் வந்துடும்.

மான்விழி : ஆமாம்! அதான். பசிக்கொடுமை தாங்காமெ; தினம் செத்துக்கிட்டே இருக்காங்களே. ஹூம்! இந்த உணவுக்கும், உசுருக்கும் வர்ற பஞ்சம்; நம்ப நாட்லே இருக்கிற கடவுளுக்கு வரக்கூடாதா?

தேன்மொழி : ஏண்டி, மான்விழி! கிருபாநந்தர் உபன்யாசத்தைக் கேக்க, முத்து, நேத்து ஏன் வரல்லே?

காந்தாரம் : வீட்லே, ஏதாவது வேலை இருந்திருக்கும்.

நட்டராகம் : நீ ஒருத்தி. அவ. கொஞ்ச நாளா; வீட்டை விட்டு அசைய மாட்டேங்கிறா?

செவ்வழி : ஏன்?

அபரஞ்சி : குருக்கள் வீட்லே வேலை செய்ற பையன் இல்லே....

அஞ்சுகம் : ஆமாம்!

அபரஞ்சி : அவனுக்கு, சங்கீத சிஷை, சொல்லிக் கொடுக்குறா.

காந்தாரம் : அவளுக்கு அவன் மேலே. ஏன் இவ்வளவு அக்கரை?

நட்டராகம் : ரொம்ப, இனிமையான குரலாம். அவன் சங்கீத சக்தி, பாழாகக்கூடாதுன்னு பாதுகாக்குறாளாம்.

மான்விழி : அசல் காரணம் அதுதானா?... இல்லே....

[என்று சொல்ல, எல்லோரும், கொல் என்று சிரிக்கின்றனர், முல்லை அரும்பு போல]

## காட்சி – 7

**இடம்: தாசி வீடு**
**இருப்பவர்கள்: முத்து, மரகதம், மாணிக்கம், தாண்டவன்**
**நேரம்: நிலா ஒட்டிய இரவு**

**நிகழ்ச்சி:**

*[தாசி மாணிக்கம், புதிதாக வாங்கி வந்த முத்து மாலையை, விளக்கு ஒளியில் பார்த்துக் கொண்டே]*

மாணிக்கம் : வைரம், வைடூரியம் எல்லாம், பட்ட தீட்னாதான், பளபளப்பு கொடுக்கும். ஆன- முத்துக்கு இயற்கையாவே இந்தப் பளபளப்பு இருக்கு.

*[என்று சொல்வதைக் கேட்டுக் கொண்டு வந்த தாண்டவன்]*

தாண்டவன்: அதனால்தான்- மணிகளுக்குள், முத்துக்கே முதல் இடம் கொடுத்திருக்கிறான். மனிதன்.

*[என்று சொல்ல; அப்போது, முத்து தன் தாயைப் பார்த்து]*

முத்து : அம்மா. அந்த மாலையைக் கொடுங்கள். [என்று கேட்க, மாணிக்கம் மகளிடம் மாலையைக் கொடுக்கிறாள். முத்து அதை வாங்கித் தாண்டவனிடம் தந்தபடி] இந்த மாலையைப் பாருங்கள். [என்று சொல்ல; தாண்டவன் அதை வாங்கிப் பார்க்கிறான். முத்து அவனைப் பார்த்து] என்ன ஆபரணம் அழகாக இருக்கிறதா?

தாண்டவன் : ஆம்! அழகாக இருக்கிறது. அணிந்து கொண்டால், அங்கத்திடம்-இது மயங்கும்! அணிவித்தால், அவர்களை-இது மயக்கும்!

மரகதம் : பெரியம்மா-புள்ளிருக்கும் வேளூர் கச்சேரிக்குப் போறத்துக்குள்ளே, சின்னம்மாவுக்கு. புதுசா இன்னும் சில நகை நட்டெல்லாம் செஞ்சுடணும்.

முத்து : ஆமாண்டி! மாடி வீட்டு மருக்கொழுந்து. எவ்வளவு நகை செய்து வைத்திருக்கிறாள்! [என்று

சொல்வதைக் கேட்டு, தாண்டவன் சிரிக்கிறான். முத்து அவனைப் பார்த்து] ஏன் சிரிக்கிறீர்கள்?

தாண்டவன் : என்னதான் அறிவிருந்தாலும்; ஒரு பெண் மூன்று விஷயத்தில் முட்டாளாகி விடுகிறாள். அதிலே ஒன்று; ஆபரணத்துக்கு அடிமையாவது முன்காலத்து மங்கையர்கள். ஆபரணங்களை, அதிகம் சேர்க்கவில்லை. அறிவு தரும், கருத்துக்களைத் தான் சேகரித்தார்கள். ஆனால், தங்கள் அங்கம் முழுவதையும் ஆயிரவித ஆபரணங்களால் மூடிக்கொள்ள ஆசைப்படு கின்றனர்; இப்போதுள்ள பெண்கள்! உங்களைப் போன்ற பெண்களின் பலஹீனத்தை உணர்ந்துதான்- மருத்துவம் பார்த்தும் நிமிராத ஒரு மங்கையின் கூனல்; தங்க ஆபரணத்தைக் கண்டால், தானாக நிமிர்ந்து விடும்- என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

மாணிக்கம் : ஏன் தம்பி, சின்னஞ்சிறு வயசுலே. நல்லா சாப்புடணும். நாலுவித நகையும் போட்டுப் பாக்கணும்னு தானே ஆசைப்படுவாங்க!

தாண்டவன் : அதற்காக அங்கம் முழுவதுமா! புருவத்திலே கூடத்தான் உரோமம் இருக்கிறது. அங்கேயும் பூச்சூட நினைக்கலாமா?

மாணிக்கம் : அடெ! தம்பி, இப்பொ எவ்வளவு கெட்டிக்காரத்தனமா பேசுது!

தாண்டவன் : இதற்கெல்லாம் காரணம். உங்கள் மகள் தான். முத்து மட்டும் இல்லாவிட்டால். இன்னும் எனது முகத்தில். புண்கள் தான் இருக்கும். இவை என் கண்களாக மாறி இருக்காது.

[என்று சொல்லி, பக்கத்திலே உள்ள மெத்தையில் போய் உட்காருகிறான். மேடையில் இருக்கும் நகைப்பெட்டியை எடுத்துக் கொண்டு, மாணிக்கம் அறைக்குள் போகிறாள். அப்போது முத்து, தாண்டவன் அருகில் வந்து]

முத்து : கரிகால் சோழனைப்பற்றி ஒரு பதம் எழுதுங்கள்.

தாண்டவன் : காதலைப் பற்றிகேள். போதை கொப்பளிக்க எழுதித் தருகிறேன். உனது; அழைக்கும் கண்களைப்பற்றி வேண்டுமா? இதோ ஆயிரம் ஏடுகள் முத்து! காதலைப் பற்றியே, நான் அதிகம் எழுதுகிறேனே; காரணம் என்னதெரியுமா? வேறு எதுபற்றி எழுதுபவனுக்கும் கிடைக்காத கீர்த்தி-காதலைப்பற்றி எழுதுபவனுக்குத்தான் கிடைத்து வருகிறது.

முத்து : அப்படியா! சரி.... அப்போது. என் முகத்தின் கதவுகளைப் பற்றி எழுதுங்கள்.

தாண்டவன் : முகத்தின் கதவுகளா?....

முத்து : ஆம்! உதடுகளைத்தான்; நான்; இவ்விதம் குறிப்பிடுகிறேன்.

தாண்டவன் : உதடுகள்... முகத்தின் கதவுகள்! ஆஹா இலக்கியத்துக்கே... கௌரவம் தரும் கற்பனை...! சரி எழுதுகிறேன். எழுதினால்....

முத்து : அதற்குப் பரிசு.... எனது அரும்புச் சிரிப்பு-அல்லிப்பூ உதடு- அழகான கன்னங்கள்.

[என்று கூறி அவனது உடலை உடல் தொட, உட்காருகின்றாள். அப்போது அவன்; அழகு வானையும், அவளையும் அருகிலே உள்ள அநேக பொருள்களையும் பார்த்து]

தாண்டவன் : முதிராத இரவு! முற்றிவிட்ட நிலவு! மதுரக்கனிவகை! மயக்கும் மதுக்கிண்ணம்! மின்னும் முகம்! மிருதுவான உடல்! மாதுளம் பூ உதடுகள்! அவைகளின் மேல் பக்கம் மான் பார்வை! முத்தின் மேல் முத்துமாலை! மலர்க்கூட்டம் கூந்தலில்! மெல்லிய நூலாடை! மேடான பஞ்சு மெத்தை!

முத்து : இத்தனையும்-தங்களுக்குத்தான்

[என்று முத்து, சிறு மயக்கத்தோடு சொல்ல தாண்டவன் அவளைத் தழுவிய படி]

தாண்டவன் : முத்து! இப்போது உன் மீது மழை பெய்ய வேண்டும்.

முத்து : ஏன்?

தாண்டவன் : உனது ஆடை ஈரமாகி, அது உன் அங்கத்திலே ஒட்டிக்கொண்டால்; அப்போது எவ்வளவு போதையாக இருக்கும். பார்ப்பதற்கு!

முத்து : போங்கள்!

*[என்று கொஞ்சியபடி சொல்லி, அவனைவிட்டு எழுந்து போகிறாள்]*

## காட்சி – 8

**இடம்: கூத்துமேடை**

**இருப்பவர்கள்: அரிச்சந்திர விலாச நடிகர்கள், கமலம், அலமேலு, தாண்டவன், மணியக்காரர், நாடகம் நடத்துபவர்**

**நேரம்: அமாவாசை இரவு**

**நிகழ்ச்சி:**

*[நடிகர்களில் சிலர், தங்கள் முகத்தில் நாடக அழகு செய்து கொண்டிருக்கின்றனர். சிலர், ஆடை அலங்காரம் செய்து கொண்டிருக்கின்றனர். கொட்டகையின் பின் புறத்திலே]*

நா.ந. : பின் பாட்டுக்காரருக்கு, எலி ஏப்பம் வந்துட்டுதே; இப்ப இதுக்கு என்ன செய்றது?

நடிகர் : எப்படியாவது, அவரைப் பாடச் சொல்லித்தான் ஆகணும்.

இன்னொருவர் : சரிதான்; நல்ல நேரத்திலேயே. அவருகிட்ட கர்னாடக சங்கீதம் மாட்டிக்கிட்டு கஷ்டப்படும். அதுவும், இப்பொ, இந்த எலி ஏப்பக்குரலோடு பாடுனா- அவ்வளவுதான். தெருவுலே கெடக்குற கல்லு கட்டி எல்லாம். கொஞ்ச நேரத்துலே. கொட்டகையிலே வந்து குவிஞ்சுடும்.

[என்று சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில், கூத்துக் கொட்டகையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்த தாண்டவன்; கீற்று அடைப்பை விலக்கியபடி, உள்ளே பார்க்கிறான். இதை உள்ளே இருக்கும் ஒருவன் பார்த்து]

ஒருவன் : யாரப்பா அது?

[என்று கேட்க, அப்போது உள்ளே நின்று கொண்டிருந்த மணியக்காரர், தாண்டவனைப் பார்த்து]

மணி : அடெ, நீயா தம்பி...வா உள்ளே! [என்று அழைக்க, தாண்டவன் கொட்டகைக்குள் வருகிறான். நாடகம் நடத்துபவரிடம். தவண்டானைச் சுட்டிக்காட்டி] இந்தப் பையன் ரொம்ப நல்லா பாடுவான்.

நா.ந : அப்பொ. நம்ப நாடகத்துக்குப் பாடச் சொல்லுங்களேன்.

மணி : என்ன தம்பி, பாட்றியா?

தாண்டவன் : ஏதோ, தெரிந்தவரைக்கும் பாடுகிறேன்.

[என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது, கதாநாயகி கமலமும், அவள் தாய் அலமேலுவும் அங்கே வர, அவர்களைத் தாண்டவனுக்குக் காட்டி]

மணி : இவுங்கதான் கதாநாயகி கமலம். இந்தம்மா. கமலத்தின் தாயார்.

[என்று கூறி, அவனுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கும் போது]

கமலம் : ஆமாம்....இவர்கள் யார்?

மணி : இந்த நாடகத்துக்கு, இப்பொ, பின்பாட்டு பாடப் போற பையன், தாண்டவன்னு பேரு. [என்று கூறி, சிவசாமி எழுதிய அரிச்சந்திர நாடகச் சுவடி கமலத்தின் கையில் இருப்பது கண்டு] இதெ இப்படிக் குடுங்க. [என்று சுவடியைக் கேட்க, கமலம் மணியக்காரரிடம் சுவடியைத்தர, அவர் அதை வாங்கி தாண்டவனைப் பார்த்து] தம்பி

இதெக் கொஞ்சம் பொரட்டிப் பாரு, இதோ வர்றேன்.

[என்று கூறி, சுவடியை அவனிடம் தந்து போகிறார். தாண்டவன் சுவடியைப் பார்க்கிறான். கமலம், அவனைப் பார்க்கிறாள். அவள் தாய், இருவரையும் பார்க்கிறாள். சுவடியைப் படித்துக் கொண்டே வரும்போது "ஒற்றி இன்பந்தருகின்ற..." என்ற பாட்டு வரியின் கடைசிச் சொல் இருந்த இடத்தைக் கறையான் தின்று விட்டதால், அங்கே என்ன வார்த்தை இருக்கலாம் என்பதை யோசித்தும் அவனுக்குப் புலப்படாமல், கமலத்தைப் பார்த்து]

தாண்டவன் : ஒற்றிஇன்பந்தருகின்ற... அதற்குப் பிறகு இங்கே என்ன வார்த்தை. [என்று ஓலைச் சுவடியை அவளிடம் காட்டிக்கேட்க, எட்டி நின்ற அவள், அவனருகிலே வந்து ஒட்டி நின்று, ஏட்டைப் பார்த்து, பிறகு இளைஞனைப் பார்த்து]

கமலம் : இதுவா? இது [என்று தனது சொந்த உதடுகளைச் சுட்டு விரலால் தொட்டுக் காட்டுகிறாள். இதைப் பார்த்து]

தாண்டவன் : அடெ! உதடா! ஹும்! இதை, உங்களைக் கேட்காமல்... என்னால் யூகிக்க முடியவில்லை.

கமலம்: அதனால் என்ன! கேட்க வேண்டியதைத் தானே கேட்டீர்கள்! உயிரை, இரவல் கேட்க முடியாது! உதடுகளை, அப்படிக் கேட்காமல் இருக்க முடியாது! ஏன்?

[என்று சொல்லிக் கொண்டிருக்கையில் ஒருவர் வந்து தாண்டவனைப் பார்த்து]

ஒரு : ஒங்களெ... மணியக்காரர் அழெச்சுக்கிட்டு வரச் சொல்றார்.

[என்று சொல்ல, தாண்டவன் புறப்படுகிறான்]

## காட்சி – 9

**இடம்: தாசி வீடு**
**இருப்பவர்கள்: முத்து, மரகதம், மாணிக்கம், வந்தவர்**
**நேரம்: தூங்கும் இரவு**

**நிகழ்ச்சி:**

*முத்துவின் தாய், வந்தவரிடம் வெற்றிலைத் தட்டை வைத்தபடி, அவரைப் பார்த்து]*

மாணிக்கம் : ஒங்க முதலாளி, எங்களை எல்லாம் மறந்துட்டாரு.

வந்தவர் : அப்படிச் சொல்லாதீங்க. அவரு மறந்திருந்தா, என்ன இங்கே அனுப்பி வைப்பாரா?

*[என்று சொல்லிக் கொண்டிருக்கையில், தென்னை ஓலையால் கிளி ஒன்று பின்னியபடி, முத்து கூடத்துக்கு வருகிறாள். வந்து, வந்திருப்பவரைப் பார்த்து]*

முத்து : வாங்க! என்ன இந்தப் பக்கமே காணோம். சௌக்கியமா?

வந்தவர் : ஏதோ கடவுள் கிருபையாலே, சௌக்கியமா இருக்கேன்.

முத்து : சௌக்யத்தைக் கேட்டால், இதற்கு ஏன் அனாவசியமாக ஆண்டவனை இழுக்கிறீர்கள்! அது போகட்டும் வந்த விபரம் என்ன?

வந்தவர் : ஒண்ணுமில்லே, மொதலாளி மகளுக்கு, வர்ற மாசம் கல்யாணம் வச்சிருக்கு. அதுக்கு ஓங்க நாட்டியக் கச்சேரி ஏற்பாடு செய்றது சம்பந்தமாதான் வந்தேன்.

முத்து : அதற்கென்ன!

மாணிக்கம் : முந்திகூட: ஓங்க மொதலாளி எங்களெ சரியாக கவனிக்கல்லே. இந்தக் கச்சேரிக்காவது....

வந்தவர் : அதைப்பத்தி, நீங்க கவலைப்படாதீங்க;

முத்து : ஏண்டி மரகதம். இவ்வளவு நேரம் ஆகிறது; இன்னும் தாண்டவரைக் காணோமே.

வந்தவர் : யாரு, தாண்டவனா? குருக்கள் வீட்டிலே வேலை செய்றானே-அந்தப் பையனா?

முத்து : ஆமாம்!

வந்தவர் : அவனெ, ஐயரு: வெளியூருக்கல்ல அனுப்பியிருக் காரு.

மரகதம் : வெளியூருக்கா ஏன்?

வந்தவர் : ஏதோ கோவில் வேலையா அனுப்பி இருக்கரு.

முத்து : அப்படியா

வந்தவர் : சரி, அப்பொ... எனக்கு நேரமாவுது, நான் வர்றேன்...

*[என்று புறப்படுகிறார். அவ்விடத்தைவிட்டு]*

## காட்சி – 10

**இடம்: கூத்துக் கொட்டகையின் உட்புறம்**
**இருப்பவர்கள்: கமலம், அலமேலு, தாண்டவன்**
**நேரம்: இடை இரவு**

**நிகழ்ச்சி:**

*[அலமேலு, தனது மகள் கமலத்தின் பின்னலை ஒழுங்குபடுத்திக் கொண்டே]*

அலமேலு : கமலம், ஆசாமி, ரொம்ப நல்லா பாட்றான். அழகாவும் இருக்கான். அவனெ, எப்படியாவது இழுத்துப் போட்டுக் கிட்டம்னா...நம்ப.. நல்லா சம்பாதிக்கலாம்.

கமலம் : ஆமாம்! [என்று கூறிக்கொண்டிருக்கும் நேரத்தில்; தாண்டவன், திரையை விலக்கிக் கொண்டு, அங்குமிங்கும் பார்க்கிறான்.]

அலமேலு : என்னா பாக்குறீங்க?

தாண்டவன் : குடிக்கத் தண்ணீர் வேண்டும்.

கமலம் : யாருக்கு? உங்களுக்கா?

தாண்டவன் : ஆமாம்!

கமலம் : இதோ தருகிறேன் [என்று கூறி அவனைப் பார்த்து] ஏன்... இங்கு வாருங்களேன்.

*[என்று அழைக்க, தாண்டவன் எழுந்து அலங்காரம் செய்து கொள்ளும் அறைக்குள் போகிறான். கமலம், இனிப்புள்ள பானத்தைத் தருகிறாள். அவனுக்கு. அதை அவன், கொஞ்சம் குடித்து விட்டு]*

தாண்டவன் : தண்ணீர் என்ன தித்திக்கிறது!

கமலம் : தங்கள் பாட்டு, என்னைத் தித்திக்க வைக்கும்போது; நான் தரும் தண்ணீர்; தங்களைத் தித்திக்க வைக்க வேண்டாமா?

தாண்டவன் : அப்படியா!

*[என்று மீண்டும் குடித்துக் கொண்டே, தன் இடது கையிலிருந்த தாளக் கருவியை, அங்குள்ள மேடை மீது வைக்கப் போகும் போது, அவனது கரத்தைப் பிடித்துத் தனது மூங்கில் தோள் மீது சேர்த்துக் கொள்கிறாள். அவனைக் கூச்சப்படுத்துகிறாள். அதனால், அவன் மேலெங்கும் தண்ணீர் சிந்துகிறது. அவன் குடிக்கும் குவளையை வெடுக்கென்று பிடுங்கி, அதிலே மிச்சமிருக்கும் பானத்தை, அவன் மீது ஊற்றி, உதடு திறந்து சிரிக்கிறாள்]*

என்ன இது?

கமலம் : இதுவா; இது, நமக்கு வேண்டிய; விநோத விளையாட்டு!

*[என்று கூறிக்கொண்டே, அவன் மீது சாய்கிறாள். இதை சம்மதிக்கிறது அவன் அங்கம், அவனைப் பார்த்து]*

கமலம் : நீங்கள், அழகில் மன்மதனல்ல; அரிமர்த்தன பாண்டியன்! நீங்கள் இசையில் கந்தர்வனல்ல, சுந்தரச் சோழனின் சபைப் பாடகன்!

தாண்டவன் : நானா!

கமலம் : ஏன் இதில் சந்தேகப்படுகிறீர்கள்? இவன் அறிஞனா? என்று உலகம் சந்தேகப்படலாம். ஆனால், நான் அறிஞன் தானா? என்று அறிஞன் தன்னையே சந்தேகப்பட்டுக் கொள்ளக்கூடாது. இதோ பாருங்கள்... நீங்கள் பாடினால்- தமிழிசை தலை தூக்கும். நடித்தால்- நாடகக்கலை கீர்த்தியடையும். பூவின் மேல் நார் விழுந்தால், நாருக்கு வாசனை கிடைக்கும். உங்களோடு நான் இருந்தால்-எனக்கு இரவல் புகழ் ஏற்படும்.

*[என்று கூறி, அவனது இடது கன்னத்தை முத்தமிட, முத்தமிட்ட உதடுகளுக்கு பதில் சொல்ல, தாண்டவன் தன் உதடுகளை, அவள் உதடுகளுக்கு அருகில் கொண்டு போகும் போது; மேடை மீது இருந்த தாளக் கருவிகள் திடீரென்று விழுகின்றன. இதைக் கண்டு]*

தாண்டவன் : உன்னை முத்தமிட வேண்டாம் என்று தடுக் கின்றனவா இந்தத் தாளக் கருவிகள்?

கமலம் : இல்லை, உடைத்த தேங்காய் மூடிகளைப் போல. எங்களை பிரித்து வைத்துவிட்டு; நீங்கள் மட்டும் உதடுகளை ஒன்று சேர்த்துக் கொள்ளப்பார்க் கிறீர்களே. இது சரிதானா சொல்லுங்கள்? என்று கேட்கின்றன.

தாண்டவன் : அப்படியா![என்று கூறி, அவளது முகத்தில், சுகம் பார்த்துவிட்டு] சரி, நாடகம் முடியட்டும். சந்திப்போம்!

*[என்று கூறி வெளியேறுகிறான்]*

கமலம் : [தனியாக] நான் விரித்த வலை, அறுந்து போகவில்லை.

*[என்று சொல்லி, உதடுகளுக்கு சாயம் பூசிக் கொள்கிறாள்.]*

## காட்சி – 11

**இடம்: தாசி வீடு**

**இருப்பவர்கள்: முத்து, மரகதம், மாணிக்கம், விருந்தினர்**

**நேரம்: நடுப்பகல்**

**நிகழ்ச்சி:**

*[கூடத்தில் எல்லோரும் உட்கார்ந்திருக்கின்றனர். ஊரிலிருந்து வந்திருக்கும் சிறுமிக்கு, முத்து தலைவாரிவிட்டுக் கொண்டிருக்கும் போது, தாய்க்கிழவி விருந்தினரைப் பார்த்து]*

மாணிக்கம் : நாகம்மா மவனுக்கு நாயன சிக்ஷை முடிஞ்சு போச்சா?

விருந்தினர் : அதெல்லாம் எப்பவே முடிஞ்சு போச்சி. போன மாசங்கூட, வெளியூரு கச்சேரிக்குப் பொயிட்டு வந்தான். அவனாலே, குடும்பத்துக்கு நல்ல வருமானம்.

*[என்று கூறிக்கொண்டிருக்கையில், மரகதம் வெளியிலிருந்து வந்தபடி]*

மரகதம் : அம்மா! கேட்டிங்களா சேதியெ! நம்ம தாண்டரு. ஊரை விட்டுப் பொயிட்டாராம்.

முத்து : என்ன ஊரைவிட்டா?

மரகதம் : ஆமாம்மா! ஒரு நாடகக்காரியோட சேந்துக்கிட்டு எங்கெயோ பொயிட்டாராம். பாக்குறத்துக்கு ஆளு, ரொம்ப பதிவுசா இருந்தாரு...

விருந்தினர் : மௌனம் சாதிப்பவன்; வர்ணித்துப் பேசுகிறவன்; அதிக செல்வாக்கு அடைந்தவன்-இவர்கள் நடத்தையை நம்ப முடியாது.

மாணிக்கம் : ஹூம்! இவ்வளவு பழகுனான், போனான். போறேன்னு ஒரு வார்த்தை சொல்லிக்கிட்டுப் போனானா பாத்தியா?

மரகதம் : அவரு என்ன செய்வாரு-புதுமுகம். புது மயக்கம், புது ஆனந்தனம். புது வாழ்வு! அதான் பழசெல்லாம் மறந்துட்டாரு. ஹும்! இந்தக் காலத்திலே, யாருக்கும் எதுவும் நல்லது செய்யக்கூடாது.

விருந்தினர் : ஆமாம்! நல்லது செய்வதே, ஒரு கெடுதல்தான்.

மாணிக்கம் : ஆமாம், அது இப்பத்தான் தெரியுது, அதுவும் இதுபோல நன்றி இல்லாதவனுக்கு செய்றது.

முத்து : அம்மா, அவரை வையாதீர்கள். சந்தித்தேன். அழைத்தேன்; வரவேற்றேன்; போதித்தேன்; இசை கற்றார்; யாழ் தொட்டார்; இருந்தார்; பறந்துவிட்டார்-மறந்துவிட்டு! விதைத்தது நாம். அறுவடை அந்நியருக்கு

விருந்தினர் : முத்து! கனிந்த பழம்; தன்னைத் தாங்கும் காம்புக்குத் தித்திப்பைத் தருவதில்லை; தின்பவனுக்குத்தான் தருகிறது.

முத்து : ஆம்! எங்கேயாவது. அவர் நன்றாக இருந்தால் சரிதான்.

## காட்சி – 12

**இடம்: ஆலமரத்தடி**

**இருப்பவர்கள்: வெளியூர்க்காரர் ஒருவர். உள்ளூர் வாலிபர்கள், பையன்கள்**

**நேரம்: மலர் விழிக்கும் காலை**

**நிகழ்ச்சி:**

*[சிறுவர்கள், கோலி விளையாடிக் கொண்டிருக்கின்றனர். ஆலமரத்தின் வேரடியில், சில வாலிபர்களும், வெளியூர்க்காரர் ஒருவரும் உட்கார்ந்திருக்கின்றனர்]*

முருகையன் : என்னடா தங்கவேலு, நேத்து, நீ கூத்துப் பாக்க வராமெ பொயிட்டியே. தாண்டவன் இரண்யன்

வேஷம் போட்டு என்னமா நடிச்சான் தெரியுமா? தை மாசம் அறுவடை முடிஞ்சதும் அவனெ அழச்சிக்கிட்டு வந்து நம்ப ஊரிலே கூத்து நடத்தணும்.

வெளியூர்க்காரர்:எங்க ஊருக்கும் அவனெக் கூப்புடலாம்னுதான் இருக்கோம்.

தங் : சரிதான், தப்பித்தவறி ஏதோ ஒருத்தன் கொஞ்சங் கெட்டிக்காரனா கெடைச்சுப் பொயிட்டான்லே, எல்லோரும்; எனக்கு ஒனக்குன்னு ஆட்டு மந்தெ மாதிரி இனிமே. அவன் மேலே போயிவிழ ஆரம்பிச்சிடுவாங்க; ஊருக்கெல்லாம் ஒரே துப்பட்டி அவன்தான். அரிச்சந்திரன் வேஷமானாலும். அகஸ்தியர் வேஷமானாலும் எல்லாத்துக்கும் அவனையேதான் இனி தொந்தரவு பண்ணுவாங்க.

காளியப்பன் : அட ஏம்பா வெட்டிப் பேச்சு எழுந்திருங்க. நாத்தாங்காலெப் பாத்துட்டு, அப்படியே ஆட்டுக்கு ஆலந்தழை ஒடிச்சிக்கிட்டு வரலாம்.

கருப்பையன் : அடெ பொறடியிலே ஆட்டுக்குட்டியைப் போட்டுக்கிட்டு தேட்ற புத்திசாலி! இப்படியே அண்ணாந்து பாரு. ஆலந்தழெ இங்கேயே இருக்கு.. எங்கேயோ போயி ஒடிக்கணும்கிறியே...

காளியப்பன் : அடெடே! ஆலமரத்தடியிலேதான் நம்ப இருக்கோங்கிறத... நான் மறந்தே பொயிட்டேன்! எனக்கு இப்ப வரவர, மறதி அதிகமா இருக்குடா!

சௌரி : புத்திசாலிக்கு மறதி ஏற்பட்டா, அதுக்கு பேரு-ஆராய்ச்சி! சாதாரண மனுஷனுக்கு மறதி ஏற்பட்டா, அதுக்கு பேரு-மந்தம்!

வேணு : ஆமாம்! மாமியார் ஒடைச்சா, மண்சட்டி. மருமக ஒடைச்சா-பொன் சட்டி. இந்தக் கதையாத்தான் இருக்கு இப்பொ இந்த உலகம்

[என்று கூற எல்லோரும் புறப்படுகின்றனர்]

## காட்சி – 13

இடம்: கடற்கரை

இருப்பவர்கள்: கமலம், தாண்டவன், பஞ்சநதம்

நேரம்: அழகு தரும் அந்தி

**நிகழ்ச்சி:**

[உப்பு, வெண்முத்து, ஓர்க்கோலை, சங்கு, செம்பவளம்–இந்த ஐந்து திரவியம்; ஆடும் அலை; அலையும் மீன், அடியிலே சேறு– இவைகளோடு இருக்கும் கடல். அதன் மீது, சில படகுகள். அவைகள்; கரை திரும்புகின்றன, மேற்குச் சிவப்பு கண்டு, கமலம்–தாண்டவன், இருவரும் அப்போது வருகின்றனர் கடற்கரைக்கு. கண்ணகியின் கருங்கண் நிறமுள்ள கடலில், நரைத்த அலைகள் வரிவரியாக வளர்வதையும், தன் இனத்தோடு சண்டையிட்டு அவை தளர்வதையும் பார்த்து]

கமலம் : அழகு, கண்களை மயக்கி விடுகிறது.

தாண்டவன் : ஆனால், தூக்கம்-கண்களை சோம்பேறியாக்கி விடுகிறது.

கமலம் : ஆமாம், உலகில், எவன் முதன் முதலில் கடலைப் பற்றிக் கவிதை எழுதி இருப்பான்?

தாண்டவன் : தமிழன்தான்! அவன் தான் உலகத்தின் முதல் மனிதன். மனித உச்சரிப்பே. அவனிடமிருந்துதான் ஆரம்பித்தது! [என்று சொல்லுகிறான். இருமுகிறான். இருமல் நின்றதும், கமலத்தைப் பார்த்து] உடல் நிலையைப் பார்த்தால். வண்டலூர் நாடகத்துக்கு. என்னால் வரமுடியாது போலிருக்கிறது.

கமலம் : எல்லாம் இரண்டொரு தினங்களில் சரியாகிவிடும். நீங்கள், எழுந்து இப்படிக் கொஞ்ச நேரம், உலவி விட்டு வாருங்கள்.

[என்று சொல்ல, தாண்டவன் எழுந்து போகிறான். கமலம் கடற்கரையில், கிளிஞ்சிலைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறாள்.

சற்று தூரத்தில், சில செம்படவர்கள், வலையை உலர்த்திக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் அருகிலே கிடக்கும் கட்டு மரத்தில், தாண்டவனின் நண்பன், பஞ்சநதம் உட்கார்ந் திருக்கிறான். உலவிக்கொண்டே வந்த தாண்டவனை, பஞ்சநதம் பார்க்கிறான், பார்த்து]

பஞ்சநதம் : அடடே! தாண்டவனா?

தாண்டவன் : என்ன, பஞ்சநதம்-சௌக்யமா? நாம் சந்தித்து, வெகு காலம் ஆகிறது.

பஞ்சநதம் : ஆமாம்!

தாண்டவன் : எங்கே இப்படி?

பஞ்சநதம் : உனக்குத் தெரியாதா? எனக்கு. மாமியார் வீடு இங்குதானே!

தாண்டவன் : அப்படியா! ஹூம்! உனக்குக் குழந்தைகள் ஏதாவது?

பஞ்சநதம் : நீண்ட நாள் கழித்து. இப்போது தான் ஒரு பையன் பிறந்திருக்கிறான். தாண்டவா; இனிமேல், என் போன்றவர்களை விசாரித்தால்; உங்களுக்குக் குழந்தை இருக்கிறதா? வீட்டிலே, குறள் இருக்கிறதா? என்று கேள்.

தாண்டவன்: ஏன்?

பஞ்சநதம் : குழந்தை-வீட்டின் செல்வம்! திருக்குறள்- நாட்டின் செல்வம்! இந்த இரு செல்வங்களைப் பற்றியும், விசாரிக்க வேண்டியது தானே!

தாண்டவன் : ஆம்! உனது விளக்கத்துக்குப் பிறகுதான். இது, எனக்குப் புரிகிறது.

பஞ்சநதம் : ஆமாம். உன்னைப்பற்றி ஒன்று கேள்விப்பட்டேன்- தவறாக.

தாண்டவன் : என்ன?

பஞ்சநதம் : நீ யாரையோ ஒரு...

தாண்டவன் : நீ எது குறித்துக் குறிப்பிடுகிறாய் என்பது புரிகிறது. எனக்கு. பஞ்சநதம். கமலம், கூத்தாடும் கன்னிதான் ஆனால் அவள், அழுக்கில்லாத பசும்பொன்!

பஞ்சநதம் : நெருப்புக்குப் புகையில்லை என்கிறாய் நீ!

தாண்டவன் : இல்லை; புகை சூரியனுக்கு ஏது? என்று உன்னைக் கேட்கிறேன்.

பஞ்சநதம் : உனது வர்ணனை, இதோ ஆடுகிறதே கடல் இதன், மேலழகைப் போன்றது. எனது எச்சரிக்கை. இதன் அடியிலே இருக்குமே சேறு. அது போன்றது. அருணகிரி; உன்னைப் போலதான் வர்ணித்தான்- நாசகாரிகளை நம்பினான். முடிவில் ஏமாந்தான். அரிதாசும், அப்படித்தான் ஆனான். கவி காளிதாசன், ஏமாந்தது மட்டுமல்ல, ஒரு வஞ்சகியால் வெட்டுப்பட்டே இறந்தான்.

தாண்டவன் : பஞ்சநதம், நீ ஒரு பைத்தியக்காரன். பரத்தையரைப் பற்றி எழுதி வைத்திருக்கும் பழைய பாடலின் பதவுரையைத் திருப்பிச் சொல்லுகிறாய்.

பஞ்சநதம் : தாண்டவா! நீ எனது நண்பன், உன் தவறைத் திருத்த நான் கடமைப்பட்டவன். அதனால் தான் வாதாடினேன் பிறகு உன் விருப்பம். நான் வருகிறேன்.

[என்று கூறிப்போகிறான். பிறகு, கமலம் தாண்டவன் இருக்குமிடம் வந்து, கடற்கிளிஞ்சலை அவனிடம் காட்டி]

கமலம் : பார்த்தீர்களா? இது எவ்வளவு அழகாக இருக்கிறது!

தாண்டவன் : உன்னைவிடவா?

கமலம் : அழகு-காய்ந்த கோபுரத்திலும் இருக்கிறது, ஈரக் கிளிஞ்சலிலும் இருக்கிறது.

தாண்டவன் : எங்கிருந்தாலும்: அழகை, அனுபவிக்க வேண்டியதுதான்.

கமலம் : இதோ, இந்த இறகுக் கிளிஞ்சல், என் கண்ணை மிகவும் கவர்ந்துவிட்டது.

தாண்டவன்: கமலம்- அழகைத் தீர்மானிப்பதில், கண்ணைவிட மனம்தான், அதிக சாமர்த்தியம் வாய்ந்தது.

கமலம் : சரி, கடல், குளிர்கொடுக்க ஆரம்பித்து விட்டது. எழுந்திருங்கள் போகலாம்.

[என்று கூறி, அவன்–அவனோடு அவள், இருவரும், புறப்பட்டுப் போகின்றனர். அவர்களைத் தள்ளிக்கொண்டு அந்திக் காற்றும் போகிறது]

## காட்சி – 14

**இடம்: வைத்தியர் வீடு**

**இருப்பவர்கள்: வைத்தியர், அவரது நண்பர், நோயாளி**

**நேரம்: நீர் தெளிக்கும் காலை**

**நிகழ்ச்சி:**

[வைத்தியர், அலுவகத்தில், மருந்து அரைத்துக் கொண்டிருக்கிறார். அப்போது நெற்றியிலே நாமம் உள்ள ஒற்றைக் கண்ணன் ஒருவன் அவரிடம் வருகிறான். அவனைப் பார்த்து அவர்]

வைத்தியர் : என்னாப்பா தீந்து போச்சா?

ஒற்றைக் கண்ணன் : நீங்க கொடுத்த மருந்து தீந்து போச்சு. மண்டை இடிதான், இன்னும் தீரல்லே

வைத்தியர் : ஊஹூம்! சரி, இந்தா, இந்த, மாத்திரையெ ஒரச்சி, நெத்தியிலே போட்டுக்க. எல்லாம் சரியாப் பொயிடும்.

[என்று மாத்திரையை அவனிடம் கொடுக்கிறார். அவன், அதை வாங்கியபடி]

ஒற்றைக் கண் :ஐயையோ!

வைத்தியர் : என்னாப்பா இது! மண்டை இடிக்கு மருந்து குடுக்கிறேன், நீ ஐயையோங்கிறே!

ஒற்றைக் கண் :அதுக்கு இல்லீங்க; ஒங்க மருந்து. என் மதத்தை மறைச்சுடுமேன்னு கவலைப்படறேன்.

வைத்தியர் : என்னாது. என் மருந்து. ஒன் மதத்தை மறைச்சிடுமா!

ஒற்றைக் கண்:ஆமாங்க. இந்த மருந்தத் தடவிக்கிட்டா. மொதல்லேயே, என் நெத்தியிலே இருக்கிற இந்த நாமம்-மறஞ்சுடாதா?

வைத்தியர் : இதற்க்குத்தானா! வியாதி போல, மதமும் ஒழிஞ்சி போக வேண்டிய ஒரு தொல்லைதான். நீ வீணா கவலைப்படாதே. வீட்டிலே போயி ஒடனே மருந்தப் போட்டுக்க... போ.

*[என்று சொல்ல அவன் போகிறான். அப்போது அடுத்த வீதி ஆறுமுகநாடார், வைத்தியரிடம் வருகிறார். ஒற்றைக் கண்ணன் போவதைப் பார்த்துக் கொண்டு]*

ஆறுமுகநாடார் :என்ன, வைத்தியரே. காலங்காத்தாலே ஒமக்கு நல்ல தெரிசனம் போலிருக்கே.

வைத்தியர் : அதை ஏங்காணும் கேக்கிறீர். தூங்கி எழுந்ததும், கண்ணாடியைப் பார்க்கணும்னு சொல்லுவாங்க. ஆனா. எழுந்திருச்சதும், எனக்குக் கண்ணாடி குருடன், குஷ்டரோகி, நொண்டி, நோயாளி, இவுங்கதன்! அடெ. அது தொலையட்டும்... என்ன காத்தாலே இப்படி?

ஆறுமுகநாடார்:ஒண்ணுமில்லே... அவசரமா அஞ்சுரூபா பணம் வேணும்.

வைத்தியர்: இதுக்குப் பேருதான் ஒண்ணுமில்லியா? நாடாரே. என் கையிலே இப்பொ அரக்காசு கெடையாது.

வருமானமும் ரொம்ப மந்தம். தாண்டவனுக்கு ஒரு மாசமா, மருந்து கொடுத்துகிட்டு வர்றேன். அங்கே இருந்து ஒரு தம்பிடி இன்னும் பெயரல்லே, நாளைக்கின்னா வாரும் ஏதோ பார்த்துத் தர்றேன்.

ஆறுமுகநாடார்: சரி. ஆமாம். தாண்டவனுக்கு, ஒடம்புக்கு என்னா?

வைத்தியர் : அடெ. அதாங்கணும் வியாதிக்கெல்லாம் ராஜா இல்லெ... அது வந்திருக்கு.

ஆறுமுகநாடார்: என்ன! பெருவியாதியா!

வைத்தியர் : ஆமாம்! இது அவுங்க வீட்டுக்கே இன்னும் தெரியாது.

ஆறுமுகநாடார்: பாவம்! அவன் ரொம்ப நல்லவன்.

வைத்தியர்: அட போங்கானும் பைத்தியம். அவன் என்ன கொஞ்ச ஆட்டமா ஆடுனான்.

ஆறுமுகநாடார்: பாக்குறத்துக்கு நல்லவன் மாதிரி தெரிஞ்சுதே!

வைத்தியர் : ஹும்... தூக்கத்தில், எல்லோரும் நல்லவர்களாகத் தான் இருப்பார்கள்.

ஆறுமுகநாடார் : நீர் சொல்றதும் சரிதான்! இந்தக் கூத்தாடிப் பசங்களுக்குக் கொஞ்சம் பேரும், கையிலே ரெண்டு காசும் கெடைச்சுட்டுதுன்னா, அப்புறம் அவன்களெ கையாலே பிடிக்க முடியல்லே. கண்ணு மண்ணு தெரியாமெ நடந்துக்கிறான்க.

வைத்தியர் : தெரிஞ்சா, ஏன். இப்படிக் கெட்டுக் குட்டிச் சுவராவுறான்க.

ஆறுமுகநாடார்: ஹும்! சரிங்கானும் எல்லாத்துக்கும் சாயந்திரமா வர்றேன். ரெண்டு ரூபாயாவது தோது பண்ணிக்குடும்.

வைத்தியர் : பாக்குறேன்

*[என்று சொல்ல, நாடார் போகிறார். வைத்தியர் அரைத்த மருந்தை வழித்தெடுக்கிறார்]*

## காட்சி – 15

**இடம்: தாண்டவன் வீடு**

**இருப்பவர்கள்: கமலம், அலமேலு, தாண்டவன், வைத்தியர்**

**நேரம்: வர்ண அந்தி**

**நிகழ்ச்சி:**

[தாண்டவன், படுக்கையில் படுத்தபடி, இருமிக் கொண்டிருக்கிறான். அப்போது கமலம், ஆடை அணிந்து, வெளியில் புறப்பட்டுக் கொண்டிருக்கிறாள். இதைத் தாண்டவன் பார்த்து]

தாண்டவன் : எங்கே புறப்பட்டு விட்டாய்?

கமலம் : ஏன்; உடல் நாற்றத்தையும், இருமலையும் சகித்துக் கொண்டு, உங்கள் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கச் சொல்கிறீர்களோ?

தாண்டவன் : என்ன! [என்று சொல்லித் தாண்டவன் திகைப்புடன் இருக்கையில் வைத்தியர் வருகிறார். அவரைப் பார்த்து] என்ன வைத்தியரே! இன்னும் எத்தனை நாளைக்கு. இப்படியே. படுக்கையில் கிடப்பது. நன்றாக கவனித்துப் பாருங்கள்.

வைத்தியர் : இனிமே. கவனிக்கிறதுக்கு என்ன இருக்கு!

தாண்டவன் : அப்படி என்றால்......?

வைத்தியர் : சொல்றத்துக்கே, என் மனசு கஷ்டப்படுது.

அலமேலு : சும்மா சொல்லுங்க.

வைத்தியர் : இது. வைத்தியத்துக்குக் கட்டுப்படாத வியாதி. ... அருணகிரி நாதருக்கு வந்துதில்லே... அது!

தாண்டவன்: ஆ

அலமேலு : குஷ்டரோகமா?

வைத்தியர் : ஆமாங்க!

அலமேலு : ஐயையோ! அடி கமலம். கிளம்புடி சீக்கிரம். இனி, இங்கே அரைக்ஷணம் இருக்கப்படாது. ஒனக்கும் ஒட்டிக்கும்.

கமலம் : கிளம்பாமல், இந்த அழகைக் கட்டிக் கொஞ்சிக் கொண்டிருக்கப் போகிறேனா!

தாண்டவன் : என்ன சொன்னாய்.

*[என்று படுக்கையை விட்டு எழுந்து, கமலத்தின் கன்னத்திலே அறைகிறான்]*

கமலம் : தொடாதே! நீ யார். என்னை அடிப்பதற்கு? நீ என் கணவனா? இல்லை நான் தான் உனக்கு எப்போதும் கட்டுப்பட்டவளா? இரண்டுமில்லை. இடையிலே வந்தேன். இடையிலே போகிறேன். உன்னைத் தூக்கிச் சுமக்கும் நளாயினி நானல்ல? தெரிந்து கொள்.

தாண்டவன் : அடி துரோகி. உன்னை உத்தமி என்று நம்பி ஏமாந்து விட்டேன்.

கமலம் : உனக்கு உலக அனுபவமில்லை. அதற்கென்ன செய்வது! [என்று தன் தாயைப் பார்த்து] வாம்மா.

*[என்று அழைத்தபடி உள்ளே போகிறாள். தாண்டவன் திகைத்துப் போய், படுக்கையிலே சாய்கிறான்]*

## காட்சி – 16

**இடம்: கூரைகள் நிறைந்த குப்பம்**
**இருப்பவர்கள்: மீன் பிடிப்பவர்களில் சிலர்**
**நேரம்: கோழி கூவிய காலை**

**நிகழ்ச்சி:**

*[கோழிகள், குப்பைத் தரையைக் கீறிக்கொண்டிருக்கின்றன. சிலர், வலை பின்னிக்காண்டிருக்கின்றனர். அவர்களிலே ஒருவன்]*

ஒருவன் : பாத்தியாடா, கடைசியிலே அந்தக் கூத்தடிச்சி. செஞ்ச வேலையெ. கட்டினவளா இருந்தா, இப்படி உட்டுட்டு ஓடுவாளா!

அடுத்தவன் : இடையிலே வந்து ஒட்றவளுங்க சங்கதியே இப்படித்தான். அவளுங்களெ நம்புனா. கடைசியிலே இந்த நிலைக்கு தான் ஆளாகணும்.

இன்னொருவன்: ஒழுங்கா, மொறையா, கல்யாணம் பண்ணி, குடியும் குடித்தனமுமா, இருந்திருந்தா இந்த கெதி வருமா தாண்டவனுக்கு.

கிழவன் : இதை நம்ப யோசிச்சி என்னா செய்றது. இது அவனுக்கு இருந்திருக்கணும்.

## காட்சி – 17

**இடம்: வீட்டுத் திண்ணை**
**இருப்பவர்கள்: சோமுப்பிள்ளை, அவரது சிநேகிதர் சிங்காரம்**
**நேரம்: பறவைகள் திரும்பும் மாலை**

**நிகழ்ச்சி:**

[*திண்ணையில் சோமுப்பிள்ளை, உட்கார்ந்திருக்கிறார், கன்னத்திலே கை வைத்தபடி கவலையோடு. அப்போது சிங்கார முதலியார் அங்கு வருகிறார்*]

சிங்கார முதலியார் : என்ன ஓய்! கன்னத்துலே கைவைச்சிருக்கிறீர்? கப்பலா கவிழ்ந்து போச்சு.

சோமுப் பிள்ளை : அதை ஏங்காணும் கேக்கிறீர். எங்க சின்ன பய, கோயிலுக்குப் போயிருந்தான். அப்பொ, எவனோ அவன் கையிலே இருந்த காப்பெ கயட்டிட்டான்!

சிங்கார முதலியார் : கோயில்தான், திருடர் குகையாச்சே; அங்கே பையன அனுப்பலாமா?

சோமுப் பிள்ளை : அட. அதான் போய்த் தொலையட்டும். தாண்டவனை நம்பி, கொஞ்சம் பணம் கொடுத்திருந்தேன். கடைசியிலே அவனும், என் நெத்தியிலே நூத்தி பதினொன்னு போட்டுட்டுப் பொயிட்டான்.

சிங்கார முதலியார் : பாவம். அவன் எப்படிக் குடுப்பான். இருந்ததை போனதை எல்லாந்தான், அந்தக் கூத்தாடிப் பொம்பளெ சுருட்டிக்கிட்டுப் பொயிட்டாளே. தாண்டவன் ஒடம்பு நல்லா இருந்தாலும், ஏதோ நாடகம் கீடகம் ஆடி, கடனெத் தீத்திருப்பான். அதுக்குந்தான் வழியில்லாமே போச்சே!

சோமுப் பிள்ளை : இதெல்லாம் என் காலங்காணும். இந்த வருஷமே என் கிரகம் நல்லால்லே.

சிங்கார முதலியார் : அடெ நீர் துப்புக் கெட்டத்தனமா நடந்துகிட்டா, அதுக்கு காலம் என்னாங்கணும் பண்ணும். சரிசரி, வாரும், கடைத்தெரு வரைக்கும் பொயிட்டு வருவோம்.

*[என்று கூப்பிட, துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு புறப்படுகிறார். சிங்கார முதலியாரோடு சோமுப்பிள்ளை]*

## காட்சி – 18

இடம்: புழுதித் தெரு
இருப்பவர்கள்: தாண்டவன், இரண்டொரு ஆண்கள்
நேரம்: வெய்யில் காலை

**நிகழ்ச்சி:**

*[பாதங்களில்; துணிக்கட்டுகளோடு, ஒரு மண் சட்டியைக் கையில் ஏந்தியபடி, தாண்டவன் நடந்து வருகிறான் தெருவில்.*

*அவன் தன் அருகிலே வருவதைக் கண்ட ஒருவர் அவனைப் பார்த்து]*

ஒருவர் : ஏய்! என்னாது. ஓடெம்பே. இப்படி வச்சிக்கிட்டு, மனுஷன், வர்றானே போறானேன்னு கூட பாக்காமெ, ஒரசிகிட்டுப் போறே.

*[என்று சொல்ல, தாண்டவன், இதைக் கேட்டு மனவேதனைப் படுகிறான். உடனே வேலி ஓரமாக நடந்து செல்கிறான். அவன் போவதைப் பார்த்து பக்கத்திலிருந்த மற்றொருவர்]*

மற்றொருவர் : இதோ போறானே. இந்தக் குஷ்டரோகி யார் தெரியுமா? இவன் தான். ஒரு காலெத்துலே. ஓஹோன்னு நாடகத்துல பேர் வாங்கின தாண்டவன்.

இன்னொருவர்: என்ன தாண்டவனா? அவனா எப்படி ஆயிட்டான்!

அடுத்தவர் : ஹ்ம்!..... இவனெல்லாம், உயிரோடெ இருக்கிறத்துலே, இனிமே என்ன லாபம்? பூமிக்கு தான் பாரம்.

*[என்று சொல்ல இதைத் தாண்டவன் கேட்டு, துடிக்கும் துயரத்தோடு, வேகமாக நடக்கிறான்]*

## காட்சி – 19

**இடம்: பாசி படிந்த குளம்**
**இருப்பவர்கள்: தாண்டவன், தூண்டிற்காரன்**
**நேரம்: அதிகாலை**

### நிகழ்ச்சி:

*[தாண்டவன், தண்ணீரிலே நிற்கிறான். மீன்கள் அவன் புண் சரீரத்தைக் கொத்திக் கொத்தித் தின்னுகின்றன. தாண்டவன், மயக்கமடைந்து, விழுகிறான். அப்போது, தடாகத்தில் தூண்டில் போட்டுக் கொண்டிருந்த ஒருவன் அவனைக் காப்பாற்றுகிறான்.]*

## காட்சி – 20

**இடம்: மலை உச்சி**
**இருப்பவர்கள்: தாண்டவன், பெரியவர்**
**நேரம்: ரத்த அந்தி**

**நிகழ்ச்சி:**

*[தாண்டவன், தட்டுத் தடுமாறி, மலைக் கட்டிகளின் மீது ஏறுகிறான். ஏறி, அதன் உச்சிக்கு வருகிறான். வானத்தைப் பார்க்கிறான். அதன் திசைகளைப் பார்க்கிறான். திறந்து கிடக்கும், பிறந்த நாட்டை; தனது நீலப் பார்வையிலே நீர் வைத்துப் பார்க்கிறான். பார்த்து]*

தாண்டவன் : தங்கத்தை வளர்க்கும் என் தாய் நாடே! நொறுங்கிய மணல் ஏடே! என் கண்ணிலே தண்ணீர் வைத்துக் கடைசி முறையாக உன்னைப் பார்க்கிறேன். இந்த மலை மடிப்புகளில் மோதி, இதோ என் உடற் கூடு உடையப்போகிறது. உடைந்த கூடு. உன் மடியிலே வந்து விழாமல் பார்த்துக்கொள். என்னை ஏந்தி விடாதே! நான், தீயவன். வீரனல்ல-வீணாசைக்காரன், உத்தமனல்ல-உலுத்தன், ஒழுக்கங் கெட்டவன்.

நெல் விளையும் நாடே! உன்னைப் பற்றி, நான் ஐந்திணை எழுதவில்லை. உனது உடற் பள்ளத்திலே தங்கியிருக்கும்; கருங்கடலையும், கனமான மலைகளையும் குறித்துக் கவிதை எழுதவில்லை. கன்னித் தமிழுக்கும். கப்பலோட்டிய தமிழனுக்கும். மங்கள வாழ்த்துக் கூறவில்லை. பகைவரின் பச்சை ரத்தத்தை. வாளினால் வழித்து வானத்திலே விட்டெறிந்து, சூரியனைச் சிவப்பாக்கித் திரும்பும் போர் வீரர்களைப்பற்றி, பரணி பாடவில்லை. எதிரிகளின் எலும்புகளால், நிலத்தை உழுது காட்டிய, தமிழரின் வீரக்காட்சியை வர்ணிக்கவில்லை.

பாராண்ட தமிழனே! பாரடா உன் பரிதாப நிலையை! இன்று நீ. பஞ்சையாய், பராரியாய்;

பாடிக் கையேந்தும் பிச்சைக்காரனாய்; பொன் விளையும் நாட்டிலே, பிடி, சோற்றுக்கும் ஏமாந்தவனாய், நாள் தோறும் நலிந்து, மெலிந்து நாசமாகி, வீதிகளைக் கண்ணீரால் நனைத்து வருகிறாயே! இன்பத் திராவிடனே! நீ இப்படி இருப்பதற்குக் காரணம்-விதியல்ல. பிறர் செய்யும் சதி. இது ஆண்டவன் கட்டளையல்ல-அக்ரமக்காரர்களின் அட்டூழியம். உடனே உன்பிச்சைப் பாத்திரத்தை உடைத்தெறி. கொலைவாளினை எடு. ஓங்காரக் கூச்சலிட்டுக் கூவிக்கொக்கரித்து, தறுக்கர்களின் தலையைத் துண்டாக்கி- புரட்சியை உண்டாக்கு. பொருளைப் பொது உடைமையாக்கிப் புதுவாழ்வு ஏற்படுத்து. மதத்தை மரணமாக்கு. மறுமலர்ச்சி உண்டாக்கு-என்று பகுத்தறிவு கீதம் பாடவில்லை.

வஞ்சகம் செய்யும் வர்க்கத்தை; செல்வத்தைச் சூறையாடி, தங்கள் சுகத்தை வளர்க்கும் சோம்பேறிக் கூட்டத்தை; செத்துப்போன மொழியை, ஜீவமொழி என்று பேசித் திரியும், பெரிய விழி படைத்த புல்லர்களை; கள்ளர்களை; பசுத்தோல் போர்த்த புலி மனிதர்களை, பித்தர்களை, அவர்களது பித்தலாட்டங்களை, எடுத்துச் சொல்லாமல், எழுதிக்காட்டாமல்: பரத்தையரின் மார்பிலிருந்து, சிந்துகின்ற சந்தனத்தையும்; அழகிய கூந்தலிலிருந்து உதிர்கின்ற அரும்பையும்; அவர்களின் அங்கத்தின் தங்க நிறத்தையும்; பழத்துண்டு உதடுகளையும், படுக்கை விளையாட்டையும்-எழுதி, எழுதி என் சுயநலத்தை, அபிவிருத்தி செய்து கொண்ட அயோக்யன். மனிதரிலே நான் மகா கெட்டவன். சிற்றின்பத்தினால் சீரழிந்தவன். தூராத பசிக்குழியும், தீராத வியாதியும் உடையவன்! தாய்நாடே என் நோய் ரத்தத்தால், உன் உடல் சேறாவதை நான் விரும்பவே இல்லை. பாம்பு, பழிகுணம் படைத்தது என்கிறார்களே, அதுகூட, என்னைப் பல்லால் தீண்டப் பயப்படும். அவ்வளவு அபாய மனிதன் நான்.

சிங்கத் திருநாடே! இதோ நீண்டு ஓடுகிறதே ஆறு. இதிலே வேண்டுமானால். என் பிரேதத்தைப் புரட்டிவிடு. எனது அங்கத்தின் ஈர எலும்புகள்-இந்த ஆற்றிலே, மிலாறு போல மிதந்து செல்லட்டும்!

*[என்று கூறி விழப்போகிறான். அப்போது அங்கே வந்த பெரியவர், அதைப் பார்த்து]*

பெரியவர் : நில். நில்! [ஓடி வந்து தாண்டவனைத் தடுத்து, அவனைப் பார்த்து] என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? தம்பி, தற்கொலை-ஆயுள் நேரத்தை அனாவசியமாக வீணாக்கிக் கொள்ளும் வேலை.

தாண்டவன் : அதுமட்டுமல்ல-கோழைத்தனங்கூட. மரணத்துக்குத் தரும் மதிப்பை; மனிதன்தற்கொலைக்கு தருவதில்லை. இதெல்லாம். எனக்குத் தெரிந்ததுதான். இருந்தாலும் என்னால் தாங்க முடியவில்லை. இந்த வியாதியின் வேதனையை.

பெரியவர் : உன்னைவிட அவஸ்தைப்படும் மிருகம், தற்கொலையா செய்து கொள்ளுகிறது?

தாண்டவன் : ஐயா! நான் சாகத்தீர்மானித்து விட்டேன். சமாதானம் சொல்லி, என்னைத் தடுக்காதீர்கள். இனி நான் எதற்கும் பயன்படாதவன். நான்-அழுகிப்போன பழம்.

பெரியவர் : அதுவும் பறவைகளுக்குப் பயன்படும். பொந்தும் போரையும் இருந்தாலும். மரத்தின் கிளைகள், மலர்களைத்தந்து கொண்டுதான் இருக்கின்றன. தம்பி. காந்தார தேசத்துக் கோமான் ஒருவன் போரிலே, கைகளை இழந்துவிட்டான். தன் அங்கம் பங்கமாகி விட்டதே என்று, நொந்து ஆவியை போக்கிக் கொள்ள நஞ்சைத் தேடவில்லை அவன். இரட்டையர்களை நீ, கேள்விப்பட்டிருக்கலாம். அவர்களில் ஒருவன் நொண்டி. இன்னொருவனுக்கு இரு கண்களும் பழுது! இப்படி இருக்கிறோமே என்று, அவர்கள், உயிர்விடும் தீர்மானம் போடவில்லை. அழுதார்கள்-ஆனாலும்

வாழ்ந்தார்கள். அவர்களாக சாகவில்லை. அதுபோல நீயும் வாழ ஆசைப்படு! உனது அங்கம் வீணாகி விட்டாலும். குரல் பயன்படும்! இதைக் கொண்டு. நாட்டுக்கு நீ எவ்வளவோ நல்லது சொல்லலாம்! புதுக் கருத்துக்கள் சொல்லி வெல்லலாம். அப்போது நீ வளைந்து கிடந்தாலும், உன் புகழ் நான்கு திக்கிலும் நேராக ஓடும்! போ! நீ பிறந்த நாட்டின் மண்ணில், உருண்டு உருண்டாவது-உனக்குத் தெரிந்த கருத்துக்களை சொல்லிக் கொண்டே போ!

*[என்று கூறிப்போகிறார். தாண்டவன் கொஞ்சம் தயங்கி, பிறகு புறப்படுகிறான்]*

## காட்சி – 21

இடம்: சுடுகாடு
இருப்பவர்கள்: முத்து, தாண்டவன்
நேரம்: நடுப்பகல்

**நிகழ்ச்சி:**

*[தலை ஓடுகள் ஒரு பக்கத்திலே கிடக்கின்றன. கைகால் எலும்புகள் ஒருபுறம்–புதைத்த குழந்தையின் மரணமேடை. உடைந்த நெருப்புச் சட்டிகள்–அரும்பு அவிழ்ந்தது போன்ற பொரிவகை–பனை மட்டைத் தொன்னை ஒன்று–இவைகள்–தாண்டவன், சாம்பல் மேட்டில் படுத்துக் கிடக்கிறான். அவனது உடலை, கழுகுகள்–காக்கைகள்–கொத்துகின்றன. நெருப்பு வெயில், அவனது உடலை சுண்ட வைக்கிறது. ஆலமரத்தின், செத்தைகள், அவன் மீது விழுந்து கொண்டிருக்கின்றன. வேதனை தாங்காமல்]*

**தாண்டவன் :** ஐயோ! அப்பா! அம்மா!

*[என்று சொல்லிக் கொண்டிருக்கிறான். அப்போது அந்தப் பக்கமாக, சிதம்பரத்துக்கு சதிராட மாட்டுவண்டியில் போய்க் கொண்டிருந்த முத்து, இந்த சத்தத்தைக் கேட்டு,*

பரிதாபமடைந்து, வண்டியை விட்டு இறங்கி, மயான நிலத்துக்குச் சென்று, அவனை உற்றுப் பார்த்து]

முத்து : ஐயா! ஐயா!

[என்று அழைக்க; தாண்டவன், கண் பக்கத்திலே பரவியிருக்கும் ரத்தத்தைக் கையால் துடைத்தபடி]

தாண்டவன் : யார்? ஆ! முத்து

முத்து : யார்? தாண்டவரா?

தாண்டவன் : ஆம்!

முத்து : என்ன! உங்களுக்கா இந்த கதி?

தாண்டவன் : என்ன செய்வது! வினைக்குத் தகுந்த விபரீதம். முத்து, நீ என்னை, மனிதனாக்கினாய். நான்-மிருகமாக நடந்துவிட்டேன். இரவு-காமத்துக்காகவும்; விளக்குகள்-பெண்களைப் பார்க்கவும்-படைக்கப்பட்டிருப்பதாக எண்ணி; வண்டு போல, விரும்பி இடமெங்கும் விநோதம் புரிந்துவிட்டேன். பொருள்களை எரித்துக்கரியை மிச்சப்படுத்துமே நெருப்பு- அதுபோல, காமம் என் உடலைக் கெடுத்து, இந்த வேற்றுமையை உண்டாக்கி வைத்துவிட்டது. முத்து! உதட்டின் உற்சாகத்திலே வசமான எனக்கு, பிற பெண்களின் இருதயத்தின் இருட்டு தெரியவில்லை.... ஏமாந்துவிட்டேன் உன்னையும் ஏமாற்றிவிட்டேன். உனக்கு நன்றி காட்டத் தவறியே விட்டேன் [இருமுகிறான்] தாகம் தாங்க முடியவில்லை.

[என்று சொல்ல, முத்து, உடனே வண்டியிலிருக்கும் தண்ணீரை எடுத்துவரப் போகிறாள். அப்போது தன் பக்கத்திலே கிடக்கும், பனைஓலைத்தொன்னையைத் தாண்டவன் எடுக்கிறான். இதை, முத்து பார்த்து]

முத்து : இது ஏன்?

தாண்டவன் : புழுவைவிட நாற்றமடிக்கும் என் கையில் தண்ணீர்ப் பாத்திரத்தை யார் தரப்போகிறார்கள்.

முத்து : தண்ணீர்ப் பாத்திரம் என்ன?, இந்த வியாதியுள்ள அநேகரைத் தொட்டு அவர்களது அங்கத்தை அலம்பிவிட்ட உத்தமர்கள் இந்நாட்டில் இல்லாமல் போகவில்லை. தூக்கி எறியுங்கள் இதை.

*[என்று கூறி, தண்ணீரை அவன் அருகில் கொண்டு வருகிறாள். இதைக் கண்டு]*

தாண்டவன் : முத்து, தொடும் அழகு, என்னிடமிருந்து தொலைந்து விட்டது. இனி நான், தொட வேண்டாத பொருள்! உள்ளத்தில்-வேதனை, உடலில், தொடாத வாலிபம். வாழ்விலே-ஏமாற்றம்; விழியிலே-வற்றாத கடல்-இவைகளால் வதங்கிப் போய்விட்ட என்னைத் தொடாதே. நீ எட்டியிருந்தே; இந்தப் பனைமட்டையில் தண்ணீர் ஊற்று.

முத்து : மற்றவர்கள் அல்ல நான்! உங்களை, இப்போதும், என் மேலாடையைப் போலவே மதிக்கிறேன். குடியுங்கள்.

*[என்று, அவனுக்குத் தண்ணீர் தருகிறாள். ஒரு துணியினால், அவன் முகத்தைத் துடைக்கிறாள்]*

தாண்டவன் : முத்து இந்த சந்திப்பு, என் மரணத்துக்கு முன் இருக்கும், கடைசி சந்தோஷம். இன்னும் கொஞ்ச நேரம் வரையில்தான், இந்த உலகத்திற்கு நான் மனிதன். அதற்குப் பிறகு, நான் மரணத்தின் சொந்தப் பொருள்! அப்போது, எனக்குப் பெயர் பிணம்!

*[என்று கூற, முத்து அழுகிறாள் இதைக்கண்டு]*

தாண்டவன் : ஏன் அழுகிறாய்! எனக்காக நீ அழுவதைவிட, சிரிப்பதுதான் சரி. முத்து, நான், கண்மூடியதும், மூச்சு பிரிந்த எனது உடலுக்கு முன் இருந்து, எனக்காக ஒரு தடவை யாழ் மீட்டி விட்டுப் போ........

முத்து : நீங்கள், அவசரமாக இப்போது ஒன்று செய்ய வேண்டும்.

582084

தாண்டவன் : நானா! என்ன?

முத்து : ஏதாவது பாடுங்கள்.

தாண்டவன் : பாடவா! இந்நிலையிலா! ஏன்?

முத்து : பிறந்தீர்கள்-பிழைத்தீர்கள்-பிரேதமானீர்கள்- என்ற மூன்று வார்த்தைகளோடு, உங்கள் வாழ்வு முடியக்கூடாது. புகழ் பெற்றீர்கள் என்ற நான்காவது வார்த்தையையும்; நான் கேட்டு மகிழ வேண்டும். தயங்க வேண்டாம் பாடுங்கள்.

*[என்று கூற, தாண்டவன்,அலை—மலை—கலை—கல்வி—காடு—நாடு—மொழி—தொழில்—புரட்சி—போராட்டம்—வீரம்—உரிமை—இவைகளைப் பற்றி கீர்த்தனைகள் பாடுகிறான். முத்து, ஓலைகளில் அவைகளை எழுதிக் கொள்ளுகிறாள்.]*

தாண்டவன் : இனி எனக்கு சக்தி இல்லை. முத்து, இந்தக் கீர்த்தனைகள். என் பெயரால் மட்டும் இருக்க வேண்டாம். இவைகளில் உன் பெயரும் இருக்கட்டும் இந்த நூலுக்கு-முத்துத்தாண்டவன் கீர்த்தனைகள் என்று பெயரிடு.

ANNA CENTENARY LIBRARY
15 SEP 2016
CHENNAI-85

முத்து : தமிழ்நாட்டுக்கு. இன்று பெரிய அதிர்ஷ்டம் இல்லாவிட்டால் இவ்வளவு அருமையான கீர்த்தனைகள் கிடைத்திருக்காது.

தாண்டவன்: அதிஷ்டம்!..... முத்து.... உனக்கு அதிஷ்டத்தில் நம்பிக்கை இருந்தால் அதை முயற்சியின் மீதுவை! ஆண்டவன் மீது பக்தி இருந்தால்-அதை மக்களிடம் காட்டு!

*[என்று கூறிக்கொண்டே இருக்கும்போது, அவனது தலை சாய்கிறது. பிரேதமாகிவிடுகிறான். ஒரு புதிய மேலாடையால் அந்தப் பிரேதத்தை மூடிவிட்டு—யாழை எடுத்து மீட்டுகிறாள். பாட்டு முடிகிறது. முத்து தாண்டவன் முகத்தைத் திறந்து பார்த்துவிட்டு, கண்ணீரைத் துடைத்துக்கொண்டே போய் வண்டியில் ஏறுகிறாள். சக்கரங்கள், சுழலுகின்றன]*

582084



என்மனம் என்றன் எண்ணம்
என்செயல் தமிழே என்பேன்!
என்குரல் என்றன் பாடல்
என்சுவை அதுவே என்பேன்!
என்கதை என்றன் காதல்
என்புகழ் அதனால் என்பேன்!
என்னுடல் என்றன் செல்வம்
என்னுயிர் அதற்கே என்பேன்!

8

அம்மா கணினியகம்